

# தமிழரசு

மலர்: 2 1-3-1972 இதழ்: 17

பூம்புகாரில்
அமையவிருக்கும்
சிலப்பதிகாரக்
கலைக்கூடக் காட்சிகளை
இந்த இதழின்
முகப்பும்





வண்ணப் பக்கங்களில்
இடம் பெற்றுள்ள
**சிற்பச் சிலம்பு**
என்னும் கட்டுரையும்
விளக்குகின்றன.

முதல்வர் கலைஞர்
யு.என்.ஐ. க்கு அளித்த
சிறப்புப் பேட்டி



# தமிழக அரசின் ஐந்தாண்டுச் சாதனைகள்!



தமிழக அரசு, நாட்டில் உள்ள சாதாரண மக்களிடம் மிக நெருங்கிய, நிரந்தரமான தொடர்பை நிலையாக ஏற்படுத்தியுள்ளது. மக்களின் தேவைகளையும், அவர்களின் விருப்பங்களையும் தக்கவகையில் கவனித்து நிறைவேற்றியுள்ளது.

## மனு நீதித் திட்டம்

மனுநீதித் திட்டத்தின் மூலம், தமிழ் நாட்டில் உள்ள தனிப்பட்ட ஒவ்வொருவரும் அரசாங்கத்துடன் நேரடியாகப் பேசும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் பிரச்சினைகளையும், குறைகளையும் அரசாங்கத்திடம் நேரடியாகச் சொல்லவும், அவற்றிற்குத் தக்க நிவாரணம் காணவும் வாய்ப்பு உள்ளது. இது மிகவும் புரட்சிகரமான திட்டம் என்றும், இந்தியாவின் மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டியதொரு திட்டம் என்றும் பாராட்டப் பெற்றுள்ளது.

கல்லூரிப் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி விரிவு படுத்தப்பட்டுள்ளது. இது, ஏழைகளும் தங்கள் குழந்தைகளைக் கல்லூரியில் பயில வைக்கும் வாய்ப்பை உண்டாக்கிட உதவியுள்ளது.

## பட்டா விநியோகம்

ஏழை விவசாயிகளுக்கு நிலமும், வீட்டு மனையும், நியாயமான முறையிலும் நேர்மையான முறையிலும் விநியோகமாகும் முறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டம், மிக முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளில் ஒன்றாகும். முந்திய அரசு, தனது இருபதாண்டு ஆட்சிக் காலத்தில் ஒரு இலட்சம் ஹெக்டேர் நிலத்தைத்தான் அளித்துள்ளது. இந்த அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டு இலட்சம் ஹெக்டேர் நிலத்தை ஏழை மக்களுக்கு வழங்கியுள்ளது.

## சேரிவாழ் மக்கட்குச் சிறப்பான வீடுகள்

குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக, சேரிவாழ் மக்களுக்கு நல்ல வீடுகள்—தரமான வீடுகள் கிடைக்கும் வகையில், தமிழக அரசு திட்டம் வகுத்து நிறைவேற்றி வருகிறது. இத்திட்டம் ரூ. 40 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஏழாண்டுக் காலத்தில் நிறைவெய்தவிருக்கும் இத்திட்டம் தமிழக அரசின் அரிய சாதனையாகும்.

## மின் வசதி

1972-ஆம் ஆண்டுக்குள் இருபதாயிரம் அரிசனக் குடியிருப்புகள் உட்படத் தமிழகத்தில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து கொடுக்கக் கிராமப்புற மின்சாரத் திட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

## குடிதண்ணீர் வசதி

இது போல, எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி அளிக்கும் திட்டமும் விரைந்து செயல்பட்டு வருகிறது.

## நிலத்திற்கு உச்சவரம்பு

நில உச்சவரம்பு 12 ஹெக்டேரிலிருந்து 6 ஹெக்டேர் ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

நில உச்ச வரம்புச் சட்டத்தின் சந்து பொந்துகளின் மூலம் பணக்கார நிலக் கிழார்கள் தப்பித்துக் கொள்ளாத வகையில் சட்டத்தின் சந்து பொந்துகள் அடைக்கப் பட்டுள்ளன.

மேய்ச்சல் நிலம், கரும்புச் சாகுபடி நிலம் ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குத் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

## எல்லார்க்கும் வீடு

ஏழை அரிசன விவசாயத் தொழிலாளர்கள் வாழ்ந்துவந்த வீடுகள் அவர்களுக்கே சொந்தமாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பேருந்துகள்-நாட்டுடைமை

ஐம்பது பேருந்துகளும் அதற்கு மேற்பட்டும் வைத்திருந்த பேருந்து உரிமையாளர்களின் நிறுவனங்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. பத்தும், அதற்கு மேலும்பேருந்து உரிமங்கள் வைத்திருந்த பேருந்து உரிமையாளர்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது.

## பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு அளிப்புத் திட்டம் வகுத்து, அடுத்த ஐந்தாண்டுகளில் பிச்சைக்காரர்கள் அனைவருக்கும் மறுவாழ்வளிக்கும் பணியினை நிறைவேற்ற உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு உடனடி நடவடிக்கையாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் அனைவரையும், ஆறு அல்லது எட்டு மறுவாழ்வளிப்பு இல்லங்களில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நிலவரி விலக்கு

ஐந்து ஏக்கர் வரையுள்ள நஞ்சை நிலங்களுக்கு நிலவரியினின்றும் விலக்களிக்கப் பட்டுள்ளது.

## பிற்பட்டோர் நல்வாழ்வு

பிற்பட்ட வகுப்பினர்களின் நலன்களைக் காக்கத் தனி அமைச்சரகம் அமைக்கப் பட்டுள்ளது. இம்மாதிரி நடவடிக்கை வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. பிற்பட்ட வகுப்பினர் நிலைபற்றி ஆய்வு செய்யக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு, பிற்பட்டோர் நிலை பற்றி விரிந்து பரந்த அளவில் ஆய்வு நடத்தி அறிக்கை தந்துள்ளது. இதன் பரிந்துரைகள் பல்வேறு கட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன

## வேலைவாய்ப்பு

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டு, ஆசிரியர்களுக்கான அலுவல்கள் ஏறத்தாழ ஆறுயிரம் உருவாக்கப்பட்டன; இரண்டாயிரம் பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பெறும் வகையில் இளைஞர் அணி நிறுவப்பட்டது; 2,400 பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

இரண்டாயிரம் முதல்தரக் காவல்துறை ஊழியர்களுக்கான பணிகள் அளிக்கப்பட்டன.

## இலட்சியப் பயணம்

இத்தகு பல்வேறு துறைகளிலும் தமிழக அரசு, தக்க முறையில் திட்டமிட்டுப் பணியாற்றி மக்களின் தொடர்பினையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு, ஏழை எளிய மக்களின் நல்வாழ்வில் தீவிர அக்கறை கொண்டு, செயல்பட்டு வருகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கின்ற இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறது.

**[தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், அரசின் ஐந்தாண்டுச் சாதனைகள் பற்றி, யு.என்.ஐ-க்கு அளித்த சிறப்பு பேட்டியில் கூறியுள்ள கருத்துக்கள் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன.]**




"அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தச் சாமான்யர்களுடைய அரசு—சாமான்ய மக்களுடைய வாழ்வில் ஒளி பாய்ச்சிட வேண்டுமென்கிற சீரிய நோக்கோடு, சென்னை மாநகரில் வெள்ளம் வந்தால் விபத்துக்கு ஆளாகி—தீவிபத்தால் தாங்க முடியாத வேதனைக்கு ஆளாகி—இக்கட்டில் தவித்துக் கொண்டிருந்த எளிய குடிசைவாழ் மக்களுக்கு விமோசனமே கிடையாதா என்றெழுந்த கேள்விக் குறிக்குக் கிடைத்த பதில் தான், நம் கண்ணெதிரே நிற்கின்ற அருமையான மாடிக் கட்டடங்கள்.'' என்று நொச்சி நகர்க் குடியிருப்புகளைத் திறந்து வைத்து, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

மயிலைத் தொகுதியில் அனைத்திந்திய வானொலி நிலையத்தின் எதிரிலுள்ள நொச்சி நகர், தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் வாழும் பெரும் பகுதியாகும். கடலோரத்தில், முன்பு குடிசை மயமாகக் காட்சியளித்த அந்தப் பகுதி இன்று அழகான மாடி வீடுகளாகக் காட்சி அளிக்கின்றது.

பிப்ரவரி பதினேழாம் நாள்!

நொச்சிநகர், விழாக்கோலம் பூண்டிருந்தது. அலையெனத் திரண்ட மக்கள் கூட்டத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டது. ஆடவர், பெண்டிர் சிறுவர், சிறுமியர் அனைவரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். ஓலைக் குடிசையில், மண் தரையில் அசுத்தங்களை அணைத்துக்கொண்டு காலந் தள்ளிய ஏழைமக்கள், இன்று கல் வீட்டிலே, கவின்மிகு வீட்டிலே வீற்றிருக்கும் கண்கொள்ளாக் காட்சியைப் பார்க்கிறோம்.

அவர்கள் முன்புபோல் குழந்தை குட்டிகளோடு மண்ணிலே புரள வேண்டியதில்லை. தண்ணீருக்குக் குடமேந்திக் கால்கடுக்க நிற்க வேண்டியதில்லை; விளக்கில்லாமல் இருளிலே மூழ்கிக் கிடக்க வேண்டியதில்லை; தீப்பிடிக்குமோ, மழை வெள்ளம் பாதிக்குமோ என்று அஞ்சத் தேவையில்லை! எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அலைகடல் ஓரத்திலே அடுக்குமாடி வீடுகள் அழகாய்க் காட்சியளிக்கின்றன.

நகரத்திலே நரக வாழ்வு வாழ்ந்த அவர்கள் முகத்திலே இப்போது புதுத் தெம்பு அரும்பியிருக்கிறது. வேலைக்குச் சென்றவன், புயலிலோ மழையிலோ குடிசை என்ன ஆயிற்றோ என்று ஏங்கத் தேவையில்லை. இனி நிம்மதியாக அவன் வீடு திரும்புவான். ஆம், அவன் வாழ்க்கையில் புது அத்தியாயம் தொடங்கிவிட்டதை எண்ணி யெண்ணிப் பூரிக்கிறான்.

இந்தப் பூரிப்புக்கும், புளகாங்கிதத்துக்கும் முழுமுதற் காரணமாக உள்ளவர்கள் தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தினரும், அதற்கு ஆதரவாக இருந்துவரும் தமிழக அரசினருமே யல்லவா?

நொச்சிநகர்: 16—12—1970 அன்று இரவு தீ அரக்கனால் நாசமானது. குடிசை வாரியம் உருவாக்கப்பட்டுத் திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் இத்தீங்கு நேர்ந்தது. சொல்லொணா வேதனையில் மக்கள் மூழ்கித் தவித்தனர். அவர்களது மனக் கவலைக்கு மருந்தூட்டும் வகையில், இதனைச் சீரமைக்கும் முயற்சியில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாவட்ட ஆட்சியாளர் மூலம் ரூ. 50 உதவியும்,

அன்றிருந்த குடிசைகள் . . . .





......இன்று பல அடுக்கு மாடிகள்

தற்காலிகக் குடிசை போட்டுக் கொள்ள அனுமதியும் தந்தது தமிழக அரசு. ஆனால், மீண்டும் அந்த இடத்தில் தீ விபத்து நடக்கவே, அவர்களுக்குத் தகரத்தாலும், கல்நாராலும் வேயப்பட்டு வீடுகளைக் கட்டிக் கொடுத்தது அரசு. பிறகு இந்த விபத்துக்களுக்கு எல்லாம் ஒரு முடிவு கட்டும் வகையில் புதியதோர் திட்டம் உருவானது. நாடும் ஏடும் போற்றிப் புகழும் புரட்சித் திட்டம் அது. அதன் விளைவு 22—12—1970-ல் மாடிக் குடியிருப்புகளுக்கான அடிக்கல்லை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டினார்கள்.

குடிசை மாற்றுவாரியத்தின் பெருமுயற்சியின் காரணமாகப் பன்னிரண்டு திங்களில் 200 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றன. இன்று இந்தக் குடியிருப்புகள் நல்ல காற்றோட்டமான சூழ்நிலையில் கடலோரத்தில் அழகாகக் காட்சியளிக்கின்றன. ஒரு குடும்பம் வசதியாக வாழப் போதுமான வகையில் குடியிருப்பு அமைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள வசதிகள்தான் என்ன? தனித்தனி 'மீட்டர்'; நான்கு மின் விளக்குகள்; ஒரு பொது அறை; சமையல் அறை; சாமான்கள் வைக்க வசதிகள்; குளிக்கத் தனி அறை; கழிவறை இப்படி எல்லா வசதிகளும் உள்ள ஒரு குடியிருப்பின் மதிப்பு என்ன தெரியுமா? ரூ. 8,000. இந்தச் செலவுப்படி, வாடகை ரூ. 55 வசூலித்தாக வேண்டும். சென்னை மாநகரில் வீட்டுக்கு அலைவோர் இந்த வசதிக்கு ரூ. 80 கூட நிச்சயம் தருவார்கள். ஆனால், ஏழை எளியவர்களால் இவ்வளவு வாடகை தரச் சக்தி ஏது? எனவே, இவ்வளவு வசதிகளும் உடைய இந்த வீட்டிற்கு மாதம் ரூ. 15 வாடகை கொடுத்தால் போதும் என்று அரசு அறிவித்துள்ளது. இதனைக் கேட்டு இதயம் பூரிக்கிறது இந்த நொச்சிநகர்ப்பகுதி!

அலங்கோலமான தெருக்களையும், ஆங்கே சிதறிக் கிடக்கும் குப்பை கூளங்களையும் முன்பு போல இப்போது காணமுடியாது. தெருக்களெல்லாம் சுத்தமாக—அழகாக—ஒளி விளக்குடன் காட்சியளிக்கின்றன. நிழல் தரும் மரங்களை நடுவதற்கும் ஏற்பாடுகள் நடக்கின்றன. மூன்றாவது மாடியிலிருப்பவர்கூடத் தண்ணீருக்காகக் கீழே இறங்கி வரவேண்டியதில்லை. ஒவ்வொரு குடியிருப்பிலேயும் தனித்தனிக் குழாய் இருக்கிறது. குடி நீருக்காக இப்பகுதியில மூன்று கிணறுகளும், நீரேற்றுப் பெரும் தொட்டிகளும் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடியிருப்பிலிருந்தும் வெளியாகும் கழிவு நீரைப் போக்கக் குழாய்களும் பொருத்தப்பட்டுள்ளன.

முன்பு இப்பகுதியில் ஒரு மாதா கோவிலும், அம்மன் ஆலயம் ஒன்றும் இருந்தது. அவர்கள் விருப்பம் போல, அவற்றையும் அரசு புதுப்பித்து அழகாகக் கட்டிக் கொடுத்துள்ளது. மக்கள் கூடிப் பேசச் சிமென்டால் தளமும் போடப்பட்டிருக்கிறது.

இத்தனை வசதிகளும் வாய்ப்புகளும் பெற்ற இந்த ஏழை எளியவர்களை நல்வாழ்வுப் படுத்த வேண்டாமா? அதற்கொரு பேரவை இங்கே தொடங்கப் பெற்றிருக்கிறது. நாள்தோறும் தமிழ்நாடு அரசின் செய்தித் துறை காட்டும் படக்காட்சியைக் கண்டு, மக்கள் பெரிதும் மகிழ்கின்றனர். வீடுகளைத் தூய்மையாக வைத்துக் கொள்வது—குழந்தைகளை வளர்ப்பது—தாய்மார்கள் ஓய்வு நேரத்தில் ஏதாவதொரு தொழிலைக் கற்றுக்

கொள்ளுதல் போன்ற பலவற்றைக் கற்பிக்க நியூபிகின் என்னும் பாதிரியார் அவர்கள் முன்வந்துள்ளார். இவர் இங்குப் 'புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை' ஒன்றைத் தொடங்கி இதில் படித்தவர்களை நியமித்து இம்மக்களுக்கு நல்வழி காட்ட ஏற்பாடு செய்துள்ளார். இதற்காகும் செலவுகளை இந்தப் பேரவையே ஏற்றுக் கொள்கிறது.

மக்களின் அன்றாடக் குறைகளைக் கேட்டு ஆவன செய்ய ஒரு அலுவலகமும் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றாடம் நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்ளவும், புதிய கருத்துக்களை அறிந்து கொள்ளவும், அறிவு வளர்ச்சி பெறவும் ஒரு நூலகமும் திறக்கப்பட்டுள்ளது; நாளிதழ்கள், கிழமை இதழ்கள் உட்பட 2,000 நூல்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர ஒரு சமூகக் கூடம், இலவச மருந்தகம், பூங்கா ஆகியவையும் விரைவில் உருவாக இருக்கின்றன.

இப்படி ஏழை எளியவர் ஏற்றங்காணும் வகையில் இக்குடியிருப்புகள் அமைந்திருப்பதை இப்பகுதி மக்கள் பாராட்டுவதில் என்ன வியப்பு?

கடைநிலை ஊழியர் 29 வயதுள்ள திரு எஸ். கிருபாநிதி கூறுகிறார் :



''நாங்கள் மொத்தம் ஐந்து பேர். இப்போது குடியிருக்கும் இதே இடத்தில்தான் எங்கள் குடிசை இருந்தது. நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் இந்த மண் குடிசையில்தான்; குடிசையில் இருந்தபோது, அடிக்கடி தீப்பயம் இருந்தது. மழை, காற்று வந்துவிட்டால் கேட்க வேண்டியதில்லை. ஓட்டைக் குடிசையில் எல்லோரும் நனைந்து குளிரால் வேதனைப் பட்டுவந்தோம். இந்தக் குறைகளெல்லாம் இல்லாமல், இனி நிம்மதியாக நாங்கள் வாழத் தமிழ்நாடு அரசு செய்த இந்த உதவியை நாங்கள் என்றைக்கும் மறக்க மாட்டோம்.

* * *

திரு எம். முனுசாமி என்னும் பெரியவர் சொல்கிறார்.



''எங்கள் பூர்வீகமே இந்த நொச்சி நகரம்தான். முன்பு நகரசபையிலே வேலை செய்து வந்தேன். இப்போது கூலி வேலை செய்து பிழைக்கிறேன். குடிசையிலே இருந்தப்ப நாங்க பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. சுருங்கச் சொன்னா குழந்தை குட்டிகளோட குப்பையிலே வாழ்ந்தோம். ஆனா, இப்போ நல்ல கல் வீடு கிடைச்சிருக்கு. இந்த மாதிரி வீடு கிடைக்கும்னு நாங்க கனவிலே கூட நெனைக்கலே. . . .''

* * *

30 வயதுள்ள திருமதி லில்லி

''நாங்கள் பல ஆண்டுகளாக இந்தப் பகுதியில் வாழ்ந்து வருகிறோம். எனக்கு எட்டுக் குழந்தைகள். குடிசையிலே இருந்தப்போ நான் ஒருத்தி இந்தக் குழந்தைகளை வைத்துக்கொண்டு ரொம்பக் கஷ்டப்பட்டேன். காரணம் என் கணவர் கேரளாவில் இராணுவத்தில் இருக்கிறார்;



இப்போ இந்த வீடு கிடைச்சது பற்றி எங்களுக்கெல்லாம் ரொம்ப சந்தோஷமா இருக்குது. என் கணவருக்குக்கூட இதுபற்றிக் கடிதம் எழுதியிருக்கேன். இப்போ எங்களுக்கு இது நல்ல வசதியா இருக்கிறது. தண்ணிக்கு முன்போலக் குழாயடியில் சண்டைபோட வேண்டியதில்லை. நல்ல விளக்கு வெளிச்சமும் இருக்கிறது. . . .'' என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறார்.

* * *



''அசுத்தங்கள் நிறைந்த குடிசைப்பகுதியில் முன்பு வாழ்ந்தோம். சாக்கடை நாற்றம், ஈ, கொசு, எலி ஆகியவற்றின் தொல்லைகளுக்கிடையே, நாங்கள் குழந்தை குட்டிகளோடு குளிரால் வாடிய காட்சியை இப்போது நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது. தண்ணீருக்குச் சண்டைபோடும் பெண்களை நினைத்துக்கொண்டால் இப்போது சிரிப்பாய் வருகிறது. ஆனால் இப்போது காலமே மாறிப்போய்ப் புது மனிச

ஞக வாழ்கிறேம்'' என்று நாற்பத்தாறு வயதுள்ள டேனியல் சம்பந்தம் கூறுகிருர்:

* * *

ஐம்பத்தைந்து வயதுடைய திருமதி இராமாயி கூறுகிருர்:



'' இந்த ஜென்மத்தில் நமக்கொரு நல்ல வீடு கிடைக்குமா என்று எத்தனையோ நாள் ஏங்கியதுண்டு. எங்க ஏக்கத்தைச் சரியாப் புரிஞ்சிகிட்டு நம்ம அரசாங்கத்தார் எங்களுக்குக் குறைஞ்ச வாடகையிலே வசதியான வீட்டைக் கட்டித்தந்திருக்காங்க. . .''

* * *

இப்பகுதியில் வாழும் தையற் கடைக்காரர் திரு எல்.ஆர். ரகுமான்கான் சொல்கிருர்:



'குடிசைக்கே பத்து ரூபா வாடகை கொடுத்து வந்தோம். இப்போ இவ்வளவு வசதியுள்ள இவ் வீட்டுக்குப் பதினைந்து ரூபா தாராளமாகத் தரலாம். எங்களுக்கு நல்வாழ்வு தந்த அரசாங்கத்தை நாங்கள் பாராட்டுகிறேம்''

# கடற்படைப் பெருமை !

அண்மையில் பாகிஸ்தானுடன் நடந்த போரில் இந்தியக் கடற்படை சாதித்த சாதனையைப் பற்றிப் படித்திருக்கிறேம். ஆனல், அதனை நேரில் காணும் வாய்ப்பு 'கடற்படைக் கண்காட்சி'யில் கிடைத்தது.

விசாகப்பட்டினம் அருகே மூழ்கடிக்கப்பட்டது பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பல் காஜி. இதிலிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள்தான் எத்தனை எத்தனை! 14 நாட்கள் நடந்த போரின் விவரங்களைத் தேதிவாரியாக இங்கே குறித்து வைத்திருக்கிருர்கள்.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் விசாகப்பட்டினத்திற்கு எப்படி வந்தது என்பதைக் காட்டும் நிலப்படமும், சிட்டகாங் நகரத்தின் தோற்றமும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் கப்பல் 'காஜி'யிலிருந்து கைப்பற்றப்பட்ட கரன்சி நோட்டுகள், வயர்லஸ் கருவிகள், உயிர்க்காப்பு உடைகள், முக்கியப் பத்திரங்கள், உணவுப் பொருள்கள், புகைப்படக்கருவி, வாயு அழுத்தக் கருவி, தட்டெழுத்துக்கருவி, பாகிஸ்தான் கடற்படைக்கொடி முதலியன பார்க்கத் தக்கனவாகும்.

பயனுள்ள இந்தக் கண்காட்சியில் இருக்கும் பயங்கர டார்பிடோ குண்டுகள், பீரங்கிகள், முதலியவைகளை சீன, அமெரிக்காவிலிருந்து பாகிஸ்தான் வாங்கியுள்ளது, என்பது அவற்றின் மீதுள்ள முத்திரைகளிலிருந்து தெரிகிறது.

வங்கத்தில் இந்தியக் கடற்படை அதிகாரி கிருஷ்ணனிடம் பாக்.அதிகாரி சரணடைந்தபோது கொடுத்த துப்பாக்கியும், பாகிஸ்தானிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகள், பீரங்கிகள், டார்பிட்டோக்கள் ஆகியவையும் ஏராளமாக உள்ளன. அவைகளில்தான் எத்தனை விதங்கள் உள்ளன !

'காஜி' கப்பலில் இருந்த பாக் சிப்பாய்களின் உடைகள் கூடக் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இந்த உடைகளில் அமெரிக்க முத்திரை காணப்படுகிறது.

வங்கத்தில் தளபதி கிருஷ்ணனுக்கு மக்கள் அளித்த வெள்ளிப் பேழையையும் இங்குக் காணலாம்.

இந்திய விமானந்தாங்கிக் கப்பல் 'விக்ரந்த்', நீர்மூழ்கிக் கப்பல் 'கல்வரி' ஆகியவற்றின் மாதிரிகள் பார்க்க வியப்பாக இருக்கின்றன.

''இந்தக் கண்காட்சி நமது கடற்படையின் அரிய பணியை நிரூபிக்கும் விதத்தில் அமைந்துள்ளது'' என்று இதனைத் துவக்கி வைத்த இந்தியக் குடியரசுத் தலைவர் வி.வி. கிரி அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை.

கடற்படையின் மாபெரும் சாதனையை உலகுக்கு உணர்த்தும் வகையில் கண்காட்சி காண்போரைக் கவர்கின்றது. வீரம் செறிந்த நமது போர் வீரர்களின் ஆற்றலைக் கண்டு வியக்க வைக்கின்றது !


செய்திச் சித்திரம்
2 கோடி ரூபாய் செலவில் உருவாகிவரும் கூவம் சீரமைப்புத் திட்டம் ஜூன் மாதத்தில் முற்றுப்பெற்று, ஜூலை மாதத்திலிருந்து உல்லாசப் படகுப் போக்குவரத்துத் தொடங்கும்.
தமிழ்நாடு முழுவதும் நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்களை அமைக்கத் திட்டமிட்டிருக்கும் தமிழ்நாடு அரசு, அந்தப் பணிக்காக செங்கற்பட்டு, வட தென் ஆர்க்காடு, மதுரை, ஆர்க்காடு, தஞ்சை, இராமநாதபுரம், தருமபுரி, திருச்சி, சேலம், நெல்லை ஆகிய மாவட்டங்களில் 40 ஊர்களை முன் மாதிரியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.
கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள்—சொந்த வீடு இல்லாதவர்களாக இருந்தால் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 3 செண்ட் இலவச மனையும், சிறு தொழில் நடத்துவதற்கு வட்டியில்லாக் கடன் 2,500 ரூபாயும் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது.
2,500 ரூ
கோவையில் மூடப்பட்ட ஆலைகளால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கட்கு, முதல்வர் நிவாரண நிதியிலிருந்து 3 லட்ச ரூபாய் அளிக்கப்படுகிறது.



# சிந்தை கவர்ந்த மருத்துவ விந்தைகள்



“அமெரிக்கா போன்ற மேல் நாடுகளில் மருத்துவத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு வாய்ப்புகள் அதிகமிருக்கின்றன. தமிழ்நாட்டுக்கு ஆகும் மருத்துவச் செலவுத் தொகைக்கு ஈடாக, அங்கு ஒரு மருத்துவ மனையிலேயே செலவு செய்கிறார்கள். அங்குள்ள மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பு வசதிகள் இங்குள்ளவர்களுக்கு இருக்குமானால், அங்குள்ள பெரிய மருத்துவர்களுடைய திறமைக்கு அறைகூவல் விடக்கூடிய அளவுக்கு நமது மருத்துவர்களிடம் திறமை இருக்கிறது'' என்று முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னை மருத்துவக் கண்காட்சியைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளின் ஆர்வத்தையும், இத்துறையில் அவர்கள் காட்டும் அக்கறையையும் எடுத்துக்காட்டும் வண்ணம் அமைந்திருக்கிறது இக்கண்காட்சி. உடற்கூறுகளைத் தெள்ளத் தெளிவாகக் கூறும் ஓர் அகராதியாகவும் இது விளங்குகிறது என்றால் அது முற்றிலும் உண்மை.

மனிதனுக்கு வரும் நோய்கள்தான் எத்தனை! எத்தனை! அத்தனை நோய்களுக்கும் அளிக்கப்படும் சிகிச்சை வகைகளோ ஏராளம். தாராளமாக அவை ஒவ்வொன்றையும் பார்த்துத் தெரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சி கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தூட்டுவதாகச் சிறந்து விளங்குகிறது.

மருத்துவ முன்னேற்றங்களைச் சித்திரிக்கும் வகையில் சித்திரங்கள் பேசுகின்றன! பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் நடைபெறும் இந்தக் கவின்மிகு கண்காட்சி ஐந்து கட்டடங்களில் 12 தளங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. 54 பிரிவுகளுள்ள இக்கண்காட்சியைச் சுற்றிப் பார்க்க மூன்று மணி நேரம் ஆகிறது. சுமார் மூன்று இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பார்த்து அறிவு வளர்ச்சி பெறவேண்டிய இந்தக் கண்காட்சியில் என்னென்ன இருக்கின்றன?

மருத்துவக் கல்லூரியில் பயிலும் ஒரு மாணவன் பட்டம் பெற்று வெளிவர ஆறரை ஆண்டுகள் ஆகின்றன. அவனுக்குத் தமிழ்நாடு அரசு செய்யும் செலவு என்ன தெரியுமா? எண்பதாயிரம் ரூபாய்! இதைச் சித்திரித்துக் காட்டும் ‘ஒலி-ஒளிச் சித்திரம்’ அனைவரின் பாராட்டுதல்களையும் பெறுகிறது.

மனித உடற்கூறுகளைப் பற்றிப் படித்திருக்கிறோம்; படங்களில் பார்த்திருக்கிறோம். ஆனால், அதை நேரில் பார்த்திருக்கிறோமா? இங்கு ஒரு முழு மனிதன் உடலில் உள்ள உறுப்புக்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடிகிறது. தலை, மார்பு, வயிற்றுப் பாகங்களின் உள் உறுப்புகளை எல்லாம் நாம் நேரில் காண முடிகிறது. மனிதக் கரு வளர்ச்சி, பரிணாம வளர்ச்சி, தசை, நரம்பு மண்டலங்கள் போன்ற உடற்கூறுகளை நேரில் காணும் அரிய வாய்ப்பு நமக்கு ஏற்படுகிறது.

புரியாத புதிராக இருந்த புற்றுநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலம் வந்துவிட்டது. ஈரல், குடல் முதலிய இடங்களில் தோன்றும் புற்று நோய்களைப்பற்றி விளக்கப்படங்கள் நன்கு விளக்குகின்றன. புற்றுநோயின் அறிகுறிகள், அது முற்றும் விதம் அதனைக் குணப்படுத்தும் முறை முதலானவைகளை நாம் தெரிந்து கொள்ளவும், நோய் வருமுன் அதனைத் தடுத்துக் கொள்ளவும் கண்காட்சி பயன்படுகிறது.

மூட்டுநோய்! இது மூட்டுகளைத் தவிர மற்ற உறுப்புகளையும் பாதிக்கும் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? சாலையில் தடிகளை ஊன்றிக் கொண்டு செல்லும் நோயாளிகள் பெரும்பாலும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். இவற்றிலிருந்து விடுதலை கிடைக்குமா? கிடைக்கும் என்கிறது இந்தப் பிரிவு.

இப்போது இருப்பவன் அடுத்த நிமிடம் இருப்பதில்லை. எல்லாம் இரத்த அழுத்தத்தினால் வரும் மாரடைப்புத்தான் காரணம். இரத்த அழுத்தம், மாரடைப்பு இவை இரண்டும் இணைந்து செயல்படுபவை. இவை வயதான காலத்தில் மட்டுமல்ல, இளமையிலும் கூட வரலாம். சிறுநீரகம் பாதிக்கப்படுவதாலும், நாளமில்லாச் சுரப்பிகள் அதிக வேலை செய்வதாலும் இளமையில் இரத்த அழுத்தம் வருகிறது. இரத்த அழுத்தமே மாரடைப்புக்கும் காரணம், என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிந்து கொள்கிறோம். இவற்றின் கோரப்

பிடியிலிருந்து விடுபடும் வகையில் செயலாற்றுகிறது, துரித இருதயப் பாதுகாப்புப் பிரிவு ! சென்னைப் பொது மருத்துவ மனையில் இந்தப் பிரிவுக்காகத் தமிழ்நாடு அரசு அதிகத் தொகை ஒதுக்கியுள்ளது. வசதிகள் பல கொண்ட இது தமிழகத்தில் முதன்மையாகத் திகழ்கிறது.

இரத்தச் சோகை:— இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஒரு சிறிய கொக்கிப்புழு, நமது குடலில் புகுந்துகொண்டு நம்மை எவ்வாறு ஆட்டிப் படைக்கிறது என்பதைக் காணலாம். தேவையான சத்துப் பொருள்கள் உணவில் இல்லாததே இந்நோய்க்கு மூல காரணம் என்பதை முன் கூட்டியே எச்சரிக்கிறது இந்தப் பிரிவு.

தொற்றுநோய்ப் பிரிவில் நமக்குத் தோற்றமளிப்பதென்ன?

வைசூரி:— இது மக்களின் வைரி. இது எவ்வளவு கொடியது என்பதை, குருடர்கள், செவிடர்கள், அங்கஹீனமுற்றவர்கள், முகச் சேதமடைந்தவர்கள் ஆகியோரைப் பார்க்கும் போது தெரிந்து கொள்ளலாம். குறிப்பாகக் குழந்தைகள் இந்நோயினால் பெரிதும் பாதிக்கப்படுவதைப் பார்க்கிறோம். அசுத்த நீரும், உணவுப் பண்டங்களுமே மஞ்சள் காமாலைக்குக் காரணம். இதனால் ஈரல் பாதிக்கப்படுவதை ஒரு பிரிவு உணர்த்துகிறது.

கண்பார்வை இருந்தால் தானே கண்காட்சியைக் காண முடியும் ? ஒளிமிக்க கண் ஒளியிழக்கக் காரணம் ? மேக நோய்கள், நுண்கிருமி நோய்கள் முதலியவைகளால் கண்களின் நிறம், தோற்றம், ஒளி எல்லாம் மாறுகின்றது. தைராய்டு சுரப்பி அதிகமாக வேலை செய்வதால், கண் வீக்கமும், விழிப் பிதுக்கமும், இரத்த அழுத்த நோய், நீரிழிவு முதலியவைகளால் விழித்திரை பாதிப்பும் ஏற்படுகின்றன. இவைகளைக் கண்கூடாகக் கூறுகிறது சென்னை கண் மருத்துவ மனை அமைத்திருக்கும் கண் பிரிவு.

' முடியாது என்பது என் அகராதியில் இல்லை ' என்றான் ஒரு வீரன். அதைப்போல யானைக்கால், தொழுநோய், புற்றுநோய், காசநோய் போன்றவைகளைக் குணப்படுத்த முடியாது என்பது மருத்துவ அகராதியில் இல்லை எனலாம். முன்னேறி வரும் இன்றைய மருத்துவ உலகில் இக்கொடுமைகளை வெல்லும் வழி வகைகள் நிறைய இருக்கின்றன. உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகள் செய்து கொள்வதன் மூலம் இந்நோய்களிலிருந்து நாம் தப்பலாம். அதற்கான நூதன சாதனங்கள் இன்று ஏராளம் உண்டு. வெள்ளத்துக்கு அணை போடுவதுபோல நோய்களுக்கும் அணைபோட அறிவுறுத்துகின்றன கண்காட்சிப் பிரிவுகள்.

குழந்தைகள் நல மருத்துவ மனை அமைத்துள்ள பகுதிக்குள் செல்கிறோம். குழந்தையின் வளர்ச்சி, உணவுச் சத்துக் குறைவால் வரும் கேடுகள், அவற்றைப் போக்கும் முறைகள் முதலியவற்றைக் காண்கிறோம். பிறவிக் குறைகள், தீக்காயங்கள், விபத்துக்கள், வயிற்றுப்பூச்சி நோய்கள், அம்மை நோய், தொண்டைக் கரப்பான் போன்ற தொத்து நோய்களைத் தடுக்கும் முறைகளென்ன ? இவற்றிற்கு விடையளிக்கிறது இப்பிரிவு. குழந்தைகள் பராமரிப்புச் சம்பந்தப்பட்ட புகைப் படங்கள் அனைவரையும் கவர்கின்றன.

இதயத்துடிப்பை உணர முடிகிறது; நன்றாகக் கேட்க முடிகிறதா ? இதயப் பிரிவில் இந்த ஒலியைப் பெரிதுபடுத்திக் கேட்கவும், இதயம், நுரையீரல், போன்றவைகள் வேலைசெய்வதையும் நேரில் பார்க்கவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இதனை ஓர் உயிருள்ள நாயின் மூலம் நன்கு விளக்கிக் காட்டுகிறார்கள். இரத்தம் இருதயத்துக்குச் சென்று எப்படிச் சுத்தமாக்கப்படுகிறது என்பதையும் நேரில் அறியலாம். இதயம் வேலை செய்யாமல் நின்றுவிட்டால் அப்போது அதை இயக்கவும் ஒரு விந்தைக்கருவி இப்போது





வந்துள்ளது. இதன் உதவியினுல் மனிதனுக்கு உயிரூட்ட முடியும். மனிதனின் இரத்தக் குழாய்களை இந்தக் கருவியுடன் இணைத்துவிட்டால், அசுத்த இரத்தத்தைச் சுத்தமாக்கி விடுகிறது, இதயத்தின் உதவி இல்லாமலேயே !

தமிழ் மருந்துகளைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் முறையும் காட்டப்படுகிறது. தமிழகத்தில் கிடைக்கும் சில மூலிகைகள் ஆஸ்துமா, புற்றுநோய், கீல்வாதம் போன்றவைக்கு எவ்வாறு உதவுகிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பிரபல கொலை வழக்குகள் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள், கொலைக் கருவிகள், நஞ்சு வகைகள் போன்றவைகளும் காட்சியில் இடம் பெற்றுள்ளன. கலப்படம், மோசடி போன்ற குற்றங்களிலிருந்து காவல் துறையினரிடமிருந்து தப்பமுடியாது என்பதைச் சித்திரிக்கிறது இந்தக் காட்சி.

கிண்டி கிங் ஆராய்ச்சி நிலையம் அமைத்துள்ள பிரிவில் நுண்கிருமிகள் உண்டாக்கும் நோய் வகைகள் பற்றி அழகாகச் சித்திரித்திருக்கிருர்கள். இந்தக் கிருமிகள் வேளாண்மை வளர்ச்சிக்கும், பிளாஸ்டிக், ஒயின் தயாரிப்புக்கும் பயன்படும் விதம் விந்தையாக இருக்கிறது.

இவை மட்டுமா ! மனிதன் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் எப்படி இருப்பான் என்பதைக் கற்பனைக் கண் கொண்டு பார்க்கும் காட்சி மாட்சிமையுடையதாகும். பல் மருத்துவம், குறைந்த தொகையில் உடற் பரிசோதனை, ஊனமுற்ருேரின் குறையை நிறை செய்யும் வகையில் செயற்கை உறுப்புகள் பொருத்துதல், அறுவைச் சிகிச்சை முறைகள் முதலியன பார்க்கத் தக்கனவாகும்.

மக்களின் சிந்தை கவர்ந்த மருத்துவ விந்தைகள்தாம் எத்தனை ? எத்தனை ? சுழலும் நாற்காலி, நடனமிடும் பந்து, மாயக் குழாய், சுழலும் தண்ணீர்த் தொட்டி, நீருக்குள் எரியும் மெழுகுவர்த்தி, உருகும் மனிதன், வருகைப் பதிவுமானி, பென்சில் வானொலி, எலுமிச்சம் பழம் டிரான்சிஸ்டர், கூத்தாடும் முட்டைகள், இப்படி ஏராளமான அரிய காட்சிகள்.

குடும்ப நல அறுவைச் சிகிச்சை கடந்த ஆண்டு 72 ஆயிரம். இவ்வாண்டுச் சாதனை 2 இலட்சத்து 2 ஆயிரம் என்ற புள்ளி விவரத்தைக் காணும் போது குடும்ப நலத்தில் மக்கள் காட்டும் ஆர்வத்தை நன்கு உணரமுடிகிறது. இந்தப் பிரிவு மக்களைப் பெரிதும் கவர்கிறது.

மனித குலம் நோய் நொடியின்றி வாழ்வதற்கான வழி வகைகளைக் கூறி, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது இந்த அரிய மருத்துவக் கண்காட்சி !

# தமிழரசு மார்ச் 1ம் இதழ்

# குமரி மாவட்டச் செய்தித் தொகுப்பு




**தமிழரசு**

**சந்தா**

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 2


பீங்கானில்
கலைப்பொருள்
உருவாக்கப்

# பெரம்பூரில் பயிற்சி நிலையம்!







ஜனவரித் திங்களின் முதல் வாரம்!

சென்னை இராஜாஜி மண்டபத்தை நோக்கி மக்கள் நாள் தோறும் ஆவலுடன் செல்கிறார்கள்.

இளைஞர்கள் மிடுக்குடன் செல்கிறார்கள்.

முதியவர்கள் மெல்ல-மெல்ல ஆனால் ஆர்வம் நிறைந்த முகத்துடன், அந்த மண்டபத்தின் எண்ணற்ற படிகளில் ஏறிச் செல்கிறார்கள்.

குழந்தைகள் குதித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

மக்களிடம் ஏற்பட்ட இந்த ஆர்வத்துக்குக் காரணம் என்ன தெரியுமா?

இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற பீங்கான் கலைப் பொருட்களின் கண்காட்சியைக் காண்பதற்குத்தான்.

உள்ளே நுழைந்ததும் ஒரே வியப்பு!

அப்பப்பா! எத்தனை விதமான கலைப் பொருட்கள்! கண்ணைக் கவரும் வண்ணங்கள்! கருத்தைக் கவரும் படையல்கள்!

மக்கள் வெள்ளம் அதிசயத்தில் மூழ்குகிறது.

அவர்களுக்கு ஒரு சந்தேகம்!

அனைத்தையும் காண்பதற்குக் கண்கள் இரண்டு மட்டும் போதுமா என்பதே அது!

என்ன செய்வது! வேறு வழியின்றித் தங்களின் இரு கண்களாலேயே காட்சியைக் காண்கிறார்கள்.

நுழை வாயிலில்-போர் வீரர்கள் சிலர் மக்களை வரவேற்கிறார்கள்.

மெய்யான வீரர்களல்ல அவர்கள்! பீங்கானால் உருவாக்கப்பட்ட பாங்கான வீரர்கள்!

கண்காட்சியைக் காண்பவர்கள் தங்களின் வியப்புச் சுவையைச் சொற்களாக வடிக்கத் தொடங்குகிறார்கள்.

"இந்தப் பீங்கான் பொம்மையைப் பார்த்தீர்களா, பிரமாதமாக இல்லே?"—என்கிறார் ஒருவர்.

"ஆமாமா! அசல் செம்பிலே செய்தது மாதிரியே இருக்குதே!" பதிலளிக்கிறார் மற்றொருவர்.



"விலையைப் பார்த்தீர்களா, பத்து ரூபா தானும்!"—முதலாமவர் மகிழ்ச்சி அலைமோதக் கூறுகிறார்.

"எங்கே செய்தது பாருங்க"—என்கிறார் இரண்டாமவர்.

இருவரின் உரையாடலையும் கவனித்துக் கொண்டிருந்த கண்காட்சி ஊழியர் குறுக்கிடுகிறார்.

"பெரம்பூரிலுள்ள பீங்கான் கலைத் தொழில் பயிற்சி நிலையத்தில் செய்யப்பட்டது இந்தப் பொம்மை"—பதிலளிக்கிறார்.

"நம்ம ஊருலேயே இவ்வளவு அழகாகச் செய்யிறாங்களா?" என்று மீண்டும் வியப்பினைத் தெரிவிக்கிறார்கள் அந்த இரண்டு நண்பர்களும்.

அவர்கள் மட்டுமல்ல—அவர்களைப் போன்ற எண்ணற்ற நண்பர்களையும், தாய்மார்களையும் வியப்புறச் செய்து வருகிறது, தமிழ்நாடு அரசின் தொழில் துறையைச் சேர்ந்த—பீங்கான் கலைப் பொருள் பயிற்சி நிலையம்.

பெரம்பூரில் உள்ள இந்தப் பயிற்சி நிலையம்—பயிற்சி தரும் நிலையமாகவும், அதே நேரத்தில், பீங்கான் கலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற் கூடமாகவும் திகழ்கிறது.

1960-ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கிய இந்த நிறுவனம் 1963-ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து மாணவர்களுக்குப் பயிற்சி தரத் துவங்கியது.

பயிற்சிக் காலம் 12 மாதங்கள்.

பயிற்சிக்கு மாணவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் தெரியுமா?

பயிற்சியில் சேருவதற்கு மாணவர்கள் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரத்தைப் பார்த்துவிட்டு எண்ணற்றவர்கள் மனுச் செய்கிறார்கள். அவர்களின் தேர்வு மதிப்பெண்களைக் கொண்டு அவர்களில் ஒரு சிலருக்கே நேர்முகப் பேட்டி அழைப்பு அனுப்பப்படுகின்றது. அப்படி வருகின்றவர்களுக்கு ஒரு சோதனை வைக்கப்படுகிறது. சோதனை என்ன தெரியுமா? பென்சிலையும், தாளையும் அவர்கள் கையில் கொடுத்துச் சில சித்திரங்களை வரையச் சொல்லுகிறார்கள். சித்திரங்கள் வரைவதில் வல்லமை பெற்றிருப்பவர்களைக் கண்டுபிடித்து, மொத்தம் 10 மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இது வெறும் பீங்கான் தொழில் மட்டுமல்லாமல் கலைப் பொருட்களைப் படைக்கும் தொழிலாகவும் இருப்பதால், இதில் பயிற்சி பெறும் மாணவர்கள், ஓரளவு சித்திரம் வரையும் ஆற்றலுடையவர்களாகவும் கலை உள்ளம் படைத்தவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அதனால்தான் இதில் சேர விரும்பும் மாணவர்களுக்குச் சித்திரம் வரையும் சோதனை வைக்கப்படுகிறது.

இந்தச் சோதனைக்குப் பின்னர் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் யார் தெரியுமா? தனிப்பட்ட ஒருவர் அல்ல. 3 அல்லது 5 பேர் கொண்ட ஒரு குழு இவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அந்தக் குழுவில் இடம் பெறுபவரில் ஒருவர், பீங்கான் தொழிலில் நிபுணராக இருப்பார்; மற்றொருவர் ஓவியக் கலையில் வல்லவராக இருப்பார். பொதுவாக, ஓவியக் கல்லூரியின் முதல்வர் இந்தக் குழுவில் இடம்பெறுவார். அனைவரும் சேர்ந்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்த மாணவர்களுக்குத் தேவையான கல்வித் தகுதி ஒன்றும் அதிகமில்லை. பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள் இதற்குத் தேவை இல்லை. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பவர்களே போதும், 18 வயதுக்குக்

கீழே இருக்கக் கூடாது; 35 வயதைத் தாண்டவும் கூடாது.

மாதம் 40 ரூபாய் உதவிப் பணம் தரப்படுகிறது. ஆண், பெண் இரு பாலரும் இந்தப் பயிற்சிக்குக் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இதில் பயிற்சி பெற்ற சில பெண்கள் இந்தப் பீங்கான் தொழிலுக்குக் கிடைத்த பெரும் பேறாகத் திகழ்கிறார்கள். அந்த அளவுக்குத் திறமை அவர்களிடம் காணப்படுகிறது.

ஓராண்டு முடிந்ததும், பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் தரப்படுகிறது. இதுவரை 7 பிரிவினர் ( Batches ) பயிற்சி முடிந்து சென்றிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் தற்போது அலுவல் செய்கிறார்கள். ஒரு சிலர் அரசினரின் தொழிற் கூடங்களிலும், வேறு சிலர் தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிகிறார்கள்.

இந்த நிறுவனத்தில் 3 ஓவியர்களும், மாதிரி செய்வோர் ( designer ) ஒருவரும் இருக்கிறார்கள். புதிய வகையில் செய்ய வேண்டிய பொருள்களின் வரைபடங்களை ஓவியர்கள் தீட்டித் தருகிறார்கள். அதனைக் கொண்டு, மாதிரி வடிவத்தைக் கொண்டு ஒரு வகைக் களிமண்ணால் ( Plaster of Paris) அச்சு ( Mould ) உருவாக்குகிறார்கள். அந்த அச்சின் உள்ளே (பீங்கான் பொருள்கள் செய்வதற்குரிய) மூலப் பொருள்களின் குழம்பை ஊற்றித் தேவையான அளவு கால வரையறை கொடுத்து, பொருள்களை உருவாக்குகிறார்கள். உருவாக்கிய பொருளுக்குப் பளபளப்பு ஏற்படுத்துவதற்கு, ஒருவகைக் குழம்பில் மூழ்கவைத்து எடுக்கிறார்கள். சில வகைப் பொருள்களுக்கு வண்ணக் கலவையைத் தெளிக்கவும் ( Spray ) செய்கிறார்கள். இவ்வாறு, கண்ணைக் கவரும் பீங்கான் கலைப் பொருட்களை உற்பத்தி செய்துவிடுகிறார்கள்.

**இது போன்ற பயிற்சி நிலையம் நமது தென்னகத்தில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது—தமிழ்நாட்டைத் தவிர !** அதுமட்டுமல்ல, பீங்கான் கலைப் பொருட்களின் தயாரிப்பில் அனைத்திந்தியாவிலும் நமது தமிழகம்தான் புகழ் பெற்று விளங்குகிறது.

இந்தத் தயாரிப்புகளுக்குச் சில மூலப் பொருள்கள் தேவைப் படுகின்றன. சைனா களிமண் ( China clay ) ஃபெல்ஸ்பார் பாறை ( Felspar ) க்வார்ட்ஸ் ( Quartz ) ஜிப்சம் (Gypsum) ஆகியவை, இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

சைனா களிமண் கேரளத்தில் உள்ள குண்டராவில் கிடைக்கிறது. நமது மாநிலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் நெய்வேலியில் கிடைக்கிறது.

ஃபெல்ஸ்பார் பாறை, க்வார்ட்ஸ் கல் ஆகிய இரண்டும் கரூர், சேலம், மணப்பாறை ஆகிய இடங்களில் கிடைக்கின்றன.




**காசியிலே சென்று வழிபட்டவர்கள் அதன் பயனை முற்றிலும் பெறவேண்டுமானால் கன்னியாகுமரியையும், இராமேசுவரத்தையும் வழிபட வேண்டும் என்பது தொன்றுதொட்டு வழங்கி வரும் ஒரு கருத்தாகும். காசி, கன்னியாகுமரி, இராமேஸ்வரம் என்பது ஒரு தொடர்மொழியாக இருந்து ஒருமைப்பாட்டை உணர்த்தி வருகிறது.**

ஜிப்சம்—இது அரியலூரிலும் தூத்துக்குடியிலும் கிடைக்கிறது.

இவை தவிர இன்னும் சில பொருள்களும் இந்தத் தொழிலுக்குத் தேவைப்படுகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் புதிய புதிய தினுசுப் பொருள்களை உற்பத்தி செய்வது இந்த நிறுவனத்தின் தனிச் சிறப்பு. சென்ற ஆண்டு செய்யப்பட்ட பொருள்கள் 150 தினுசுகள் என்றால் இந்த ஆண்டில் அவற்றில் 50 தினுசுகள் மட்டுமே செய்யப்படுகின்றன. மீதி 100 பொருள்கள்—புதிய மாதிரிகளில் உருவாக்கப்படுகின்றன. தொழில் திறமையையும் கலைத் திறமையையும் தெளிவாக்குவதற்காகவே இந்தப் புதிய வடிவங்களை உருவாக்குகிறார்கள். இதன் காரணமாகப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

சென்ற ஆண்டு டெல்லியில் நடைபெற்ற பீங்கான் கலைப் பொருட் கண்காட்சியின் போது 30 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகியது.

டெல்லியில் நடைபெற்ற கண்காட்சியைப் பார்த்த டெல்லி மக்கள் வியப்படைந்திருக்கிறார்கள். அங்குள்ள பத்திரிகைகள் வியந்து பாராட்டியுள்ளன.

இந்த ஆண்டு சென்னையில், நடைபெற்ற ஒரு வாரக் கண்காட்சியின் போது 58 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகியது.

அண்ணா சாலையில் தமிழரசு அச்சகத்தின் அருகே உள்ள காட்சி அறையில் ஒவ்வொரு ஆண்டும் 75 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகி வருகிறது.

பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களுக்கெல்லாம் இந்தக் கலைப் பொருள்கள் விற்பனைக்கு அனுப்பப்படுவதில்லை. ஆனாலும், அங்குள்ளவர்களின் இல்லங்களிலெல்லாம் இந்தக் கலைப் பொருள்கள் கொலு வீற்றிருக்கின்றன. இந்த அதிசயம் எப்படி நிகழ்கிறது தெரியுமா? எல்லாம் சுற்றுலாவின் தொண்டினால்தான் ! நாள்தோறும் வட இந்திய மாநிலங்களிலிருந்து நமது தமிழகத்தைக் காண வரும் சுற்றுலாப் பயணிகள், இந்தக் கலைப் பொருட்களை ஏராளமான அளவில் வாங்கிச் செல்கிறார்கள். அதனால்தான் வட இந்தியாவில் இந்தப் பொருட்களின் புகழ் ஓங்கி நிற்கிறது.

இந்தப் பொருட்களை உருவாக்கும் நிறுவனம்—இந்தப் பொருட்களை உருவாக்கும் வல்லவர்களைத் தனது பயிற்சியின் மூலம் உருவாக்கும் இந்தப் பயிற்சி நிலையம் என்றும் புகழ் ஓங்கி நிலைத்து நிற்கும் என்பது உறுதி. இந்த அருங்கலைத் தொழிலைத் தமிழக அரசு அன்புடன் ஆதரித்து வரும்போது, இந்த நிலையமும் இந்தத் தொழிலும் புகழ் ஓங்கி நிற்பதில் சந்தேகம் என்ன?



காந்தியடிகள் கனவை நனவாக்கி
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள்
தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, உ. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.



# புற்றுநோய்ச் சிகிச்சையில் ஒரு புதுமை!

"ஏழைகளைப் பாதிக்கும் நோய்கள் இன்று ஏராளம்; அவைகளைப் போக்க மருத்துவர்கள் சிந்தித்துச் செயல்பட முன்வரவேண்டும். புதிய கண்டுபிடிப்புகள் மூலம் இந்தக் குறையை நாம் போக்கலாம் என்றாலும், இத்துறையில் அக்கறையும் ஆர்வமும் கொள்ள வேண்டும்'' என்று இரக்க சிந்தையோடு கூறுகிறார் சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் டாக்டர் எம். நாராயணன் அவர்கள்.

ஏழைகளை அதிகம் பாதிக்கும் நோய்களில் புற்றுநோய், தொழுநோய், ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம். வாயில் வரும் புற்றுநோய் மேலை நாட்டில் இரண்டு சதவிகிதம் என்றால், நம் நாட்டில் நாற்பது சதவிகிதம் வளர்ந்து இருக்கிறது. உலகிலேயே நம் நாட்டில்தான் தொழுநோய் அதிக அளவில் இருக்கிறது. இந்த இரண்டு வகைப் பயங்கர நோய்களும் குறிப்பாகப் பாமர மக்களை—ஏழை எளியவர்களைப் பற்றிக் கொண்டு அவர்கள் வாழ்க்கையைப் பாழடித்து வருகின்றன. இதிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்க வழியே இல்லையா?

இதுபற்றி டாக்டர் நாராயணன் தீவிரமாகச் சிந்தித்தார். 'பணம் படைத்தவர்களுக்கு எந்த நோய் வந்தாலும் அதனைப் போக்கிக் கொள்ள வசதி நிறைய இருக்கிறது; ஆனால், ஏதுமில்லா ஏழை என்ன செய்வான்?' இப்படி எண்ணி இவர் மனம் நொந்தார். அதன் விளைவுதான், 'புற்றுநோய்ச் சிகிச்சையில் ஒரு புதுமை' யினை இவர் கண்டறிந்தது.

வாயில் புற்றுநோய் எப்படி வருகிறது? வெற்றிலையோடு புகையிலையைக் குதப்பி வாயில் மணிக்கணக்காக அடைத்து வைத்துக் கொள்வதால், வாயின் தாடையினுள் புற்றுநோய் வருகிறது. இது நாளடைவில் வளர்ந்து வெளிப்புறம் கன்னத்தில் துவாரம் ஏற்பட்டு விகாரமான தோற்றத்தை உண்டு பண்ணுவதுடன் உயிருக்கே ஆபத்தையும் உண்டாக்கும்.

இதனை முதலில் கோபால்ட் அல்லது ரேடியம் ஆகிய மின் கதிர்களால் பொசுக்கும் வகையில் சிகிச்சை செய்வார்கள்; அப்படியும் பெரும்பாலோருக்குச் சில நாட்கள் கழித்து மீண்டும் அதே இடத்தில் புற்றுநோய் வளரும். அந்த நேரத்தில் அறுவைச் சிகிச்சை மூலமே அதனைக் குணப்படுத்த வேண்டி வரும். பொதுவாக அறுவை செய்து விட்டால், விகாரமான தோற்றத்தை மூடச் சுமார் ஆறு மாதத்திலிருந்து ஒரு ஆண்டு பிடிக்கும். இந்த ஆறு மாத காலத்தில் நாக்கு வெளியே தொங்கிக் கொண்டு, கன்னத்தில் துவாரத்தோடு இருந்தால், இதே நோய் வந்த மற்ற நோயாளி அறுவைச் சிகிச்சைக்குப் பயந்து மறுத்து விடுவான். புற்றுக்கு வேண்டிய அறுவை செய்து, கன்னத்திலுள்ள துவாரத்தை ஒரே நாளில் மூடி விட்டால் மற்றவர்கள் சிகிச்சை செய்து கொள்ள முன்வருவார்கள் அல்லவா? இந்த முயற்சியில் டாக்டர் நாராயணன் வெற்றி கண்டுள்ளார்.

வாயில் புற்றுநோய் வந்த ஒரு பெண்ணின் படத்தைப் பார்க்கிறோம். வாயிலிருந்து சதை குலையாக வெளியே தொங்குகிறது. பார்க்க அருவருப்பாகவும், விகாரமாகவும் அதே சமயத்தில் பரிதாபமாகவும் இருக்கிறது. அந்தத் தொங்கும் சதையை மட்டும் வெட்டி விடுவதல்ல இவர் வேலை. கன்னத்தின் தோலையே வெட்டி எறிந்துவிடுகிறார்! தோலற்ற ஒரு பக்க முகம், பல், நாக்கு முதலிய உள்ளுறுப்புகளுடன் பார்க்கப் பயங்கரமாகக் காட்சியளிக்கிறது. இப்போது அந்தப் பாகத்தை இன்னொரு தோலால் மூட வேண்டும். தோலுக்கு என்ன செய்வது?

அதற்கும் ஒரு வழி நம் உடலிலேயே இருக்கிறது. தலையின் மேலுள்ள தோலை வெட்டி எடுத்துக் கன்னத்தில் அறுவை செய்யப்பட்ட அளவுக்கு வைத்துத் தைத்துவிடுவதுதான் இவர் செய்த புதுமை! ஒரே நாளில் இந்த வேலையைச் செய்து முடித்து விடுகிறார் இவர். இந்த அறுவைச் சிகிச்சை செய்வதற்கு ஐந்து மணி நேரமாகிறது. சில நாட்கள் கழித்து இது நன்கு ஆறிவிடுகிறது. இம்மாதிரியான சிகிச்சை செய்வது உலகத்திலேயே இதுவே முதல் தடவை!



டாக்டர் எம். நாராயணன்.

சில சமயங்களில் அறுவைச் சிகிச்சையின் போது, நாக்கு, உதடு, பாதிக்கப்படுவதுண்டு. அப்போது சேதமடைந்த நாக்கும், உதடும் வேறு சதைகளை வைத்து ஒட்ட வைக்கப்படுகின்றன!

டாக்டர் நாராயணன் இந்தச் சிகிச்சை முறையை விளக்கி ஒரு கட்டுரையை எழுதினார். அமெரிக்காவில் அதிக அளவு விற்பனை உள்ள ஒரு ஆங்கில மருத்துவ இதழுக்கு (Plastic and Reconstructive Surgery) இது சம்பந்தமாகக் கடிதம் எழுதினார். இந்த இதழ் மருத்துவச் சம்பந்தமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி உலகம் முழுவதும் விநியோகிக்கப்படும் மிகச் சிறந்த இதழாகும்.

இந்த இதழின் ஆசிரியர் ஃபிராங்க் மக்டௌவல் இவருக்குப் பதில் எழுதினார். அதில்,

"....Publication in our Journal would give this new procedure circulation to every major medical library and medical school in the world, and would reach nearly every surgeon doing this kind of work...."

பிறகு டாக்டர் நாராயணன் தாம் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையை இந்தப் பத்திரிகைக்கு அனுப்பினார். அவர்கள் கட்டுரையை வரவேற்றுத் தம் இதழில் வெளியிட்டார்கள்.

அடுத்த இதழிலும் இது சம்பந்தமாக இன்னொரு கட்டுரையும் வெளிவந்தது. புகைப் படங்களுடன் வெளிவந்த இந்தக் கட்டுரை பல நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்களைக் கவர்ந்தது. அமெரிக்கா, ஜெர்மனி, பெர்லின், பிரான்ஸ், ஹங்கேரி, கிரீஸ், நார்வே, வாஷிங்டன், இஸ்ரேல் முதலிய நாடுகளிலிருந்து மருத்துவர்கள் பலர் இவரைப் பாராட்டும் வகையில் இந்தக் கட்டுரையின் பிரதியொன்றை அனுப்பிவைக்கும்படிக் கோரியுள்ளனர்.

இதுவரை இவர் இராயப்பேட்டை மருத்துவமனையில் அறுபத்தெட்டுப் பேருக்கு இந்த நவீன அறுவைச் சிகிச்சையைச் செய்துள்ளார். புற்று நோய் அறுவைச் சிகிச்சைக்காக ஒரு தனிப் பகுதி கோரி, தமிழ்



நாடு அரசிடம் இவர் விளக்கியதின் விளைவு நமது அரசு அதற்கு அனுமதி தந்தது. பரிசுச் சீட்டு மூலம் ரூ. 2.5 இலட்சமும், ஆண்டுக்கு 40,000 ரூபாயும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

''புதிய முயற்சிகளுக்கும், ஏழைகள் துயர் துடைக்கவும் அரசு செய்துவரும் உதவிகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நோயற்ற வாழ்வுக்கு வழிவகை காணும் முறையில் அரசும், குறிப்பாக மருத்துவர்களும் முன்வர வேண்டும்''



என்று கூறும் டாக்டர் நாராயணன் அவர்கள் எளிமையானவர். இன்சொல் பேசும் இயல்பினர்.

இவர், மருத்துவத்தில் இன்னொரு போற்றத்தக்கச் செயலைச் செய்து வருகிறார். அதுதான் தொழுநோயாளியின் மடங்கிய விரல்களை நிமிர்த்துவது! ஆம்! அறுவைச் சிகிச்சையின் மூலம் விரல்கள் மடங்கி விகாரமாக இருப்பதைப் பழைய நிலைக்குக் கொணரும் திறமையை நாம் பாராட்ட வேண்டும்.

தொழுநோய் வந்தவன் புருவம் சிதைந்தும், மூக்கு உருவிழந்தும் காணப்படும். இந்த மூக்கையும், புருவத்தையும் கூட அறுவைச் சிகிச்சையின் மூலம் இவர் குணப்படுத்துகிறார்.

'எண்ணற்ற ஏழை மக்கள் தொழுநோயால் படும் அல்லல் கொஞ்ச நஞ்சமன்று. சிறுகச் சிறுகச் சாகடிக்கும் அந்தக் கொடிய நோய் வந்தவன், சமூகத்திலிருந்து தள்ளி வைக்கப்படுகிறான்; நண்பரிடமோ மற்றவரிடமோ பேச அவன் கூச்சப்படுகிறான். அத்தகையவனைக் காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பல்லவா?' இவர் இப்படிக் கேட்பதோடு மட்டுமல்ல, அத்தகையவர்களிடம் இன்சொல்பேசி, அவர்கள் மனத்துயரைத் துடைக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறார்.

''தொழுநோய் வராமல் தடுக்கவும், வந்தால் அதனைக் குணப்படுத்தவும் நான் முயன்று வருகிறேன். இதுவரை ஐம்பது பேருக்குத் தொழுநோய்ச் சிகிச்சை செய்துள்ளேன். எனக்குள்ள மன நிறைவு எல்லாம் ஒரு நோயாளியைக் குணப்படுத்தினேன் என்பதுதான்'' என்று பெருமிதத்துடன் கூறும் டாக்டர் நாராயணன் அவர்கள், இதுபோன்று நோய் வந்தவர்கள் தயக்கமில்லாமல், தாராளமாகத் தம்மை வந்து பார்க்கலாம் என்று அன்புடன் அழைக்கிறார். இத்தகைய நல்ல எண்ணமும் ஆராய்ச்சித் திறனும், மருத்துவத் துறையில் புதுமை காணத் துடிக்கும் இவரையும், இவரை மருத்துவராகப் பெற்றுள்ள அரசினர் இராயப்பேட்டை மருத்துவ மனையையும், தமிழக அரசையும் ஏழை எளியவர்கள் போற்றிப் பாராட்டுவதில் விந்தையேதுமில்லை.



# எலிகளை ஒழிப்போம்!

வளரும் பயிர், சேமித்துவைக்கப்பட்ட தானியங்கள், மற்றப் பொருட்கள் யாவற்றையும் சேதப்படுத்துவதுடன் பல தொற்று நோய்களையும் பரப்புவதன் மூலம் நீண்ட காலமாக மக்களுக்குத் தொல்லை கொடுத்து வருபவை எலிகள். பயிரிடும் வயல்களில் காணப்படும் எலி இனங்களைப் பற்றிய ஆராய்ச்சி, ஆடுதுறை வேளாண்மைப் பண்ணையில் மத்திய—மாநில அரசுகளின் உதவியுடன் நடந்து வருகிறது. இவ்வாராய்ச்சியின் பலனாக அறிந்த சில உண்மைகளை இக்கட்டுரையில் காணலாம்.

எலிகளுள் பல இனங்களுண்டு. தமிழ்நாட்டின் நன்செய் நிலங்களில் வயல் எலி (இதற்கு வரப்பெலி, அரவானெலி, கரம்பெலி என்ற பெயர்கள் உண்டு) புல் எலி, சுண்டெலி, என்ற இனங்களும், புன்செய் நிலங்களில் இவற்றுடன் வெள்ளெலி, கல்லெலி, குன்னெலி என்ற இனங்களும் காணப்படுகின்றன. இவற்றில் குன்னெலி வேலியோரம் உள்ள புதர்களில் கூடு கட்டி வாழும். மற்றவை வயல்களிலும் வரப்புகளிலும் வளை தோண்டி அவற்றில் வாழ்கின்றன. எல்லா இன எலிகளும் பெரும்பாலும் பகலில் ஓய்வெடுத்து இரவில் நடமாடும் இயல்புடையன.

நன்செய், புன்செய் நிலங்களில் பயிராகும் நெல், கேழ்வரகு, சோளம், கரும்பு, கடலை, எள், பயறு வகைகள், பருத்தி போன்ற எல்லாவிதப் பயிர்களையும் எலிகள் சேதப்படுத்துகின்றன. எனினும், அதிகமாகப் பாதிக்கப்படுவது நெற்பயிரே. நெற்பயிரின் முளைக்கும் விதைகள், நாற்று நட்ட பயிர், முற்றிய கதிர் யாவுமே எலிகளுக்கு உகந்தவை. இதில் கதிர் வரும் தருணத்தில் உள்ள பயிரின் குருத்து, எலிகளால் பெரிதும் விரும்பி உண்ணப்படுகிறது என்பது பயிரிடும் காலங்களில் பிடித்த எலிகளின் வயிற்றை அறுத்துச் சோதனை இட்டதால் தெரிய வந்தது. இதனால்தான் கதிர் வரும் பருவத்தில் நெல் வயலில் அதிக எலி வெட்டு காணப்படுகிறது.

இத் தருணங்களில் எலிகளின் எண்ணிக்கை அதிகமானால் வரப்பு ஓரங்கள் தவிர மற்றப் பகுதியில் உள்ள பயிர் பூராவுமே எலிகளால் வெட்டப்படுவதுண்டு. இவ்வாறு கதிர் வரும்போது வெட்டப்பட்ட பயிரில் மறுதாம்பு வளர்ந்து சுமார் ஒரு வார காலம் தாமதமாக முற்றிய போதிலும், மகசூல் 75 சதவீதத்துக்கும் மேலாகக் குறைந்து விடுகிறது. எனவே ஏக்கருக்குச்சுமார் 2,000 கிலோ மகசூல் கொடுக்கக்கூடிய பயிரில் இவ்வாறு எலி வெட்டும் போது 1,500 கிலோ (அல்லது ரூ. 750) வரை நட்டம் ஏற்பட ஏதுவாகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு மொத்த விளைச்சலில் சுமார் 10 சதவிகிதம் எலிகளால் சேதமாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வயலில் பயிர் இல்லாதபோது வயல் எலிகள் புல்விதை, பசுந்தழை, உரச்செடியின் விதை, நண்டு, நத்தை, மண்புழு, வெட்டுக்கிளி போன்ற பூச்சிகள் இவற்றையும் உண்பது ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிய வந்தது.

இந்த எலிகளின் மற்ற வாழ்க்கை முறைகளும், இவை பல்கிப் பெருகுவதற்கு மிக ஏற்றதாயுள்ளன. நன்கு வளர்ந்த வயல் எலி (வரப்பெலி)கள் வளைக்கு ஒன்றுக்குமேல் இருப்பதில்லை. புல்லெலி, சுண்டெலி, கல்லெலி, வெள்ளெலி இனங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட எலிகள் ஒரே வளையில் வசிப்பதுண்டு. தஞ்சை நெல்வயல்களில் வயல் எலி, புல்லெலி, சுண்டெலி இனங்கள் செப்டம்பர், அக்டோபர், ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பயிர் முற்றும் தறுவாயில் குட்டிகளை ஈன்றெடுக்கின்றன. வயல் எலி ஒரு தடவைக்கு 10 முதல் 15 குட்டிகள் வீதம் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை குட்டிகளை ஈன்றெடுக்கும். பிறந்த குட்டிகள் மயிர் இன்றி, கண் திறக்காமலும், நகர இயலாமலும் இருக்கும். பின் தாய்ப் பாலுண்டு வளர்ந்து சுமார் 3 மாதத்தில் முழுவளர்ச்சி அடையும். ஒரு இணை (ஜோடி) எலிகள் ஒரு ஆண்டில் சுமார் 200 ஆகப் பெருக இயலும். ஒவ்வொரு எலியும் சுமார் இரண்டு ஆண்டுகள் உயிருடனிருக்கும்.

புன்செயில் வாழும் இனமான வெள்ளெலிக்கு நீந்தத்தெரியாது. ஆனால், மான்போல் துள்ளி விரைவாக ஓடும். நன்செய்யில் வாழும் வயல் எலி, புல்லெலி, சுண்டெலி இனங்கள் நன்றாக நீந்த வல்லவை. இவற்றில் வயல் எலி நீண்ட நேரம் வரை தண்ணீருக்குள் மூழ்கியும், தண்ணீர் மட்டத்திலும் நெடுந்தூரம் நீந்த வல்லவை. இதனால்தான் வயலில் தண்ணீர் இருந்தபோதும் பயிருக்கு எலியின் சேதம் குறைவதில்லை.

வயலில் எலிகளின் உத்தேச எண்ணிக்கையை சிறுமண் குவியல்களுக்கருகமைந்த அவற்றின் வளைகள், சேற்றில் பதிந்த காலடிகள், புழுக்கைகள், வழக்கமான பாட்டைகள் இவற்றைக்கொண்டு மதிப்பிடலாம். சாதாரணமாக ஏக்கருக்கு 10 முதல் 15 எலிகள் வரை காணப்படலாம். வயல், வரப்புகள் பெரிதாயும், புதர் செடி கொடிகளால் மூடப்பட்டும் இருந்தால் அதிக எலிகள் இருக்க ஏதுவாகும். 200 அல்லது 300 அடிகளுக்கு அப்பாலிருந்தும் வயல் விட்டு வயல் எலிகள் மேய்ச்சலுக்கு வருவதுண்டு. சமீபத்தில் ஆடுதுறைப் பண்ணையில் நடந்த சோதனைகளில் இவ்வாறு சுமார் 2½

ஏக்கர் நிலத்துக்கு ஒரு நாளிரவில் 200-க்கும் மேற்பட்ட எலிகள் வருவது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தனித்து ஓரிரு வயல்களில் முன்னதாகக் கதிர் வரும் போதும், தஞ்சையில் கோடை காலத்தில் சிறுபரப்பில் நெல் பயிரிடும் போதும், பயிருக்கு அதிக சேதம் இவ்வாறு வயல்விட்டு வயல் மேய்ச்சலுக்கு வரும் எலிகளால் ஏற்படுவதே ஆகும்.

இவ்வுண்மைகளைக் காணும் போது எலிகளைக் கட்டுப்படுத்த ஓரிரு வயல்களில் மட்டும் தனி முயற்சி செய்வதைவிடத் தீவிர திட்டமிட்டு, ஒரே சமயத்தில் எல்லா வயல்களிலும் . கட்டுப்பாடு முறைகளைக் கையாள்வது தேவை என்பது புலனுகும்.

இவ்வாறு எலிகளைக் கட்டுப்படுத்த பரிசோதிக்கப்பட்ட பல முறைகளில் பயனுள்ளவை பின் வருவன:—

*1. நஞ்சு வைத்தல்:*—சிங்க் பாஸ்பைடு என்ற நச்சு மருந்தை நெல், பொரி போன்ற உணவுடன் 1:49 என்ற விகிதத்தில் கலந்து வயல், வயலைச் சுற்றியுள்ள தரிசுகள், வரப்புகள் எங்கும், எலி நடமாடும் எல்லா இடங்களிலும் வைக்கவேண்டும். தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் நஞ்சு வைக்கத் தேவை இல்லை. இவ்வாறு நஞ்சு வைக்குமுன் நஞ்சு கலக்காத உணவை இரண்டு அல்லது மூன்று நாட்கள் மேற்கண்ட இடங்களில் வைப்பதும், பொரியுடன் சிறிது தேங்காய் எண்ணெய், வறுத்த வெங்காயம், மீன் இவற்றைக் கலப்பதும், எலிகள் நஞ்சு கலந்த உணவை விரும்பி உண்ண வகை செய்யும். ஒரு ஏக்கருக்கு ஒருமுறை வீதம் வைக்க ஆகும் செலவு:—

| | ரூ. | காசு. |
|---|---|---|
| பொரி .. .. | 0 | 30 |
| வெங்காயம், மீன், எண்ணெய் .. | 0 | 25 |
| நஞ்சு மருந்து வைக்க ஆகும் செலவு .. | 0 | 30 |
| நஞ்சு .. .. | 0 | 15 |
| மொத்தம் .. | 1 | 00 |

சுமார் ஒரு மாத இடைவெளிகளில் ஒரு பயிருக்குச் சுமார் மூம்முறை இவ்வாறு நச்சு மருந்து இடுவது ஏற்றது. எலிகளுக்கு இயற்கை உணவு குறைவான கோடை காலங்களிலும், நஞ்சிடுவது நன்மை பயக்கும். நஞ்சு வைத்த சிலநாட்களுக்குக் கோழி, கால்நடைகள், நஞ்சுவைத்த இடங்களை அணுகா வண்ணம் பாதுகாப்பது அவசியம்.

*(2) கிட்டி வைத்தல்:*—தஞ்சாவூர் கிட்டிகளை முக்கியமாகக் கதிர் வரும் முன் பயன்படுத்துவது நல்ல பலனைத் தருகிறது. ஏக்கருக்குச் சுமார் 25 கிட்டிகள் வரை வைக்கவேண்டும். ஒருவர் நாளொன்றுக்குச் சுமார் 60 கிட்டிகள் வைக்க இயலும். எலிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப



4 அல்லது 5 நாட்கள் தொடர்ந்து கிட்டி வைக்க வேண்டி வரும். ஒரு கிட்டியின் விலை 30 காசு. இதை சுமார் இரண்டு ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம்.

*(3) வெட்டிப் பிடித்தல்:*—பயிர் முற்றும் போது எலிகள் குட்டிகளை ஈனுவதால் அக்காலங்களில் வளைகளை வெட்டி தாய் எலிகளைக் குட்டிகளுடன் பிடித்து அழிக்கலாம். வளையொன்றுக்குச் சுமார் இரண்டு அல்லது மூன்று கிலோ வரை எலிகள் சேர்த்து வைக்கும் நெற் கதிர்களையும் இவ்வாறு வெட்டும் போது எடுக்க இயலும்.

*(4) இயற்கை விரோதிகள்:*—கீரி, பாம்பு, காட்டுப் பூனை போன்றவைகள் எலிகளின் இயற்கை விரோதிகள். இவற்றின் நடமாட்டம் வரப்போரங்களில் அதிகம் இருப்பதால்தான் எலிகள் வரப்பை ஒட்டிச் சுமார் 5 முதல் 10 அடி வரை உள்ள பயிரை அவ்வளவாக வெட்டுவதில்லை. எனவே, இவற்றைக் கொல்லாமல் காப்பதும் எலிகளைக் கட்டுப்படுத்த உதவும்.

இத்துடன் வயலுக்குப் புதுத் தண்ணீர் விடும்போது ஒளி மிக்க டார்ச் லைட், பெட்ரோமாக்ஸ் இவற்றின் உதவியுடன் இரவில் மேய்ச்சலுக்கு வரும் எலிகளை அடித்துக் கொல்வது, வரப்புகளைக் குறைத்துச் சிறியனவாக்குவது, வரப்புகளில் புதர் இன்றிச் சுத்தமாக வைப்பது, இவையும் மேற்கண்ட முறைகளும் நல்ல பலனைத் தர உதவும்.

மின்சார வேலி அமைத்தும், எலிகளின் சேதத்தை முற்றிலும் தடுக்க முடியும் என்பது ஆடுதுறை வேளாண்மைப் பண்ணையில் செய்த சோதனைகள் வாயிலாகத் தெரிகிறது. ஆயினும், பரவலாக எல்லா உழவர்களும் இதைப் பயன்படுத்துவது கடினம்.

'பாஸ்டாக்சின்' என்ற நச்சுப் புகை மாத்திரைகளை வளைகளில் போடுவதன் மூலமாக எலிகளைக் கட்டுப்படுத்த இயலுமா என்பதும் தற்போது ஆடுதுறைப் பண்ணையில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

வயல் எலிகளை ஒழிக்கத் தமிழக அரசு, 15 சதவீதம் மான்ய விலையில் 'சிங்க் பாஸ்பைடு' மருந்தை விற்க வகை செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அவ்வப் போது 'எலி ஒழிப்பு வாரங்கள்' ஏற்பாடு செய்யப்படுகின்றன. உழவர்கள் ஒருமித்த முயற்சியுடன் தக்க காலங்களில் தடுப்பு முறைகளைக் கையாண்டால் பயிருக்கு எலிகளினுல் ஏற்படும் சேதத்தைப் பெரிதும் குறைக்க இயலும் என்பது திண்ணம்.

—தி. சந்தானராமன், பி.எஸ்சி(வே).,
பூச்சியியலறிஞர்.

—பி. வேலாயுதம், பி.எஸ்சி(வே).,
பூச்சியியல் துணையறிஞர்.

# தியாகம்

## சோம. மகாதேவன்



மின்சார இரயில் துரித கதியில் ஓடிக் கொண்டிருந்தது.

பின்புறமிருந்து ரகுபதியின் குரலைக் கேட்டுச் சுந்தரேசன் திடுக்கிட்டார்.

சுந்தரேசன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்று இன்னும் ஓராண்டு முடியவில்லை. தகுந்த பேச்சுத் துணையொன்று இல்லாமல், வீட்டிலேயே அடைந்து கிடக்க முடியாமல், தாம்பரத்திலிருக்கும் நண்பரொருவரைப் பார்க்கச் சென்றவர், திரும்புவதற்குள் இப்படிப் பொழுதடைந்து விட்டது.

கண்டுவிட்டால், முன்பனிக் காலத்தில் இப்படியேன் வெளியில் சுற்றவேண்டும் என ரகுபதி கோபித்துக் கொள்வான்.

ரகுபதி–சுந்தரேசனுக்கு மூத்த மகன். கம்பெனியொன்றில் வேலை செய்கிறான்.

மறுபக்கத்தில் மகனும், அவனது நண்பரும் பேசுவதைக் கேட்கும் சந்தர்ப்பம் இன்றைக்குத்தான் நேரிட்டிருக்கிறது.

'' எங்கே திரும்பினாலும்— குடும்ப நலத் திட்டப் பிரச்சாரமாகத்தான் இருக்கு. இடைவெளியே இல்லை. '' என்று

# "வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிடுவதால் தீமைகள் ஏற்படலாம் என்பது வைத்திய மேதைகளின் கருத்து"

வைத்திய திலகம்



வைத்திய ராஜ்

R. M. P. (IND.) V. V. C., A. M. I. H.

வாழ்க்கையில் சுகபோகங்களை இழந்த வாலிப வயோதிக அன்பர்களுக்குப் பிரபல-பழனி வைத்திய திலகம்-வைத்தியராஜ் S. காளிமுத்து R.M.P. (IND), V.V.C., A.M.I.H. அவர்களின் ஆலோசனையும்-கருத்தும்.

ஆடவர்களில், படித்த பட்டதாரியும், பாமரரும், தங்கள் வாழ்க்கையில் முன் நடந்த தீய வழக்கங்களால் தங்கள் உடல் பலகீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, உடல்மெலிவு, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு, தளர்ச்சி, வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகிக் குடும்ப வாழ்க்கையில் மனவேதனையும் அதிருப்தியும், சஞ்சலமும், நிம்மதியில்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வருடக் கணக்கில் மருந்துகள் சாப்பிட்டுப் பலனில்லாமல் பின் நம்மிடம் சிகிச்சை பெற்று விரைவில் குணமடைந்தோர்கள் ஏராளம்.... 'வீட்டு வாடகை தருவதுபோல் மாதாமாதம் பணம் செலுத்தி வருடக்கணக்கில் மருந்துகள் சாப்பிட்டேன்; ஒன்றும் பலனில்லை' என்றும் ஏராளமான கடிதங்கள் நமக்கு தினசரி வந்துகுவிகின்றன! பழனி மருந்தைப் பற்றித் தெரியாதவர் பாரில் உண்டோ? மருந்தை உபயோகிக்கும் போதே பலனைப்பெறும் அன்பர்கள் மட்டும் எம்மிடம் சிகிச்சை பெறலாம்—வருடக் கணக்கில் சிகிச்சை பெற நினைக்கும் அன்பர்களுக்குக் கண்டிப்பாக நாம் சிகிச்சை தர இயலாது.

கேம்புகளில் நேரில் மருந்துகள் பெற முடியாதவர்கள் வி.பி. பார்சலுக்கு ஆர்டர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். போஸ்டேஜ் இலவசம்.

—: 1 மாத சிகிச்சை மருந்துகள் :—

| மிக உயர்தரம் | தங்க பஸ்பம் | உயர்தரம் | முதல் தரம் | இரண்டாந் தரம் |
|---|---|---|---|---|
| ரூ. 90-00 | ரூ. 120-00 | ரூ. 42-00 | ரூ. 33-00 | ரூ. 24-00 |

கிளை : 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1. போன்: 21448.

சென்னை கிளை ஆபிசில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்

GOVT. REGD. T. M. No. 204841 REGD 15443.

வைத்தியத் திலகம், வைத்திய ராஜ டாக்டர் S. காளிமுத்து R.M.P., (IND.), V.V.C., A.M.I.H.

## பழநி சித்தர் வைத்தியசாலை (T) பழநி S.I.

போன் : 316 தந்தி : சித்தர்

அங்கலாய்த்துக் கொள்கிறார் நண்பர்.

"இவ்வளவு இருந்தும் மென்மேலும் குழந்தைகளைப் பெத்துக்கிட்டு, முறையோட வளர்க்கவும் முடியாம, வாழ்க்கையில் எந்தவிதமான களிப்பும் இல்லாம இருளில் மூழ்கிப் போறாங்களே அதைச் சொல்லுங்க" என்கிறான் ரகு.

"குழந்தைகளும் வளர்ந்து-சம்பாத்யம்னு செய்யுறப்ப தகப்பனுக்கு உதவியாகத்தானே இருக்கும்." என்கிறார் நண்பர்.

இப்படியெல்லாரும் நினைக்கிறதுனாலேதான், இப்ப வேலை வாய்ப்புங்கிறது அரிதாகிக்கிட்டே வருது. அதிலும், குடும்பத்திலே மூத்த மகனாப் பிறந்து, கல்யாணம்னு ஆகி நிக்கிறப்பவே, சின்னஞ் சிறுசுகளாகத் தம்பி, தங்கைகளை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு ஏற்படுது பாருங்க—அது இந்தப் பிறவிக்கெல்லாம் போதும்." என்கிறான் ரகுபதி சற்று வேகமாக.

"உங்க அனுபவத்தைச் சொல்றிங்களா?" என்று கேட்கிறார் நண்பர்.

அதற்குள் வண்டி சைதாப்பேட்டையில் நின்றது. இருவருக்குமே இங்கு என்ன வேலையோ இறங்கி நடக்கின்றனர்.

அந்தக் குளிர்ந்த நேரத்திலும் சுந்தரேசனுக்கு வியர்த்துக் கொட்டியது. அப்படியே சாய்ந்து விட்டார். அவரது நெஞ்சில் ஏதோ ஒன்று வேகமாக அழுத்துவது போலிருந்தது.

சொல்ல வேண்டியதை எவ்வளவு ஆவேசத்தோடு சொல்லுகிறான் ரகு.

சுந்தரேசனுக்கு ரகுபதி மூத்த மகன். அவனுக்குப் பிறகு பத்து ஆண்டுகள் குழந்தையே தரிக்காதிருந்து, கடைசிக் காலத்தில், இரண்டு பெண்களும், கடைக் குட்டிகளாக இரு ஆண்களுமாகப் பிறந்தார்கள். மேலும் கீழுமாக—எல்லாருமே இப்போது பள்ளியில் படிப்பவர்கள்.

'இரண்டு வருடங்களுக்கு முன்பே ரகுவுக்குத் திருமணம் நடந்தது. பின் நடப்பை இருந்து பார்க்காமல், எதையோ சாதித்துவிட்ட நிம்மதியோடு போய்ச் சேர்ந்து விட்டாள் அவள். சுந்தரேசனுக்கு வரும் ஓய்வு ஊதியத்திலிருந்து எதைச் சாதித்து விட முடியும்?

ரகுபதிக்கும் குழந்தைகள் பிறந்துவிடும் போது—அவன் எந்தக் கடமைகளைத்தான் நிறைவோடு செய்துவிட முடியும்?

அந்தப் பொறுப்பு இந்தப் பிறவிக்கெல்லாம் போதும் என்கிறானே.

அவன் சொல்வது மெய்யல்லவா?

இல்லறத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்தக் கட்டத்தில் எத்தனை யெத்தனை பொறுப்புக்கள்தான் ரகுவின் தலை மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

## பிழைபட எழுதேல்!

### ஏறத்தாழ—சுமார்

'ஜெமினி மேம்பாலத்திற்கு ஏறத்தாழ சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவாகலாம் என்று சொல்லப்படுகிறது' என்கிறோம். இதில், ஏறத்தாழ சுமார் என்று குறிப்பிடுவது தவறு. ஏறத்தாழ என்றோ சுமார் என்றோ மட்டும் குறிப்பிட்டால் போதும். அதாவது,

ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் செலவாகலாம்

அல்லது

சுமார் 65 இலட்சம் ரூபாய் செலவாகலாம்

என்றோ குறிப்பிடலாம். ஏறத்தாழ—சுமார் இரண்டும் ஒரே பொருளை உணர்த்தும் சொற்களே.

மணம் முடித்து ஈராண்டுகள் முடிந்து விட்டது. இதுவரை ஒன்றும் இல்லை. நாளை, அவனுக்கும் குழந்தை குட்டிகளென்று ஆகும் போது எங்குத் திரும்புவான்? எதைச் சமாளிக்கப் போகிறான்?

கலங்கிக் குளமாகி விட்ட கண்களை, பக்கத்திலிருப்பவர்கள் அறியா வண்ணம், குனிந்து மேல் துண்டால் துடைத்துக் கொண்டார் சுந்தரேசன்.

எதிர் காலத்தைப் பற்றியே நினைக்காதிருந்து, ஒரு தந்தை மகனுக்கு அளிக்கும் நல்வாழ்வா இது?

எவ்வளவு நொந்து கொண்டு சொல்லுகிறான் மகன்.

சுந்தரேசனுக்கு உடம்பே நடுங்கியது. நாக்கு வரண்டு விட்டது.

சேத்துப்பட்டில் வண்டி நின்றது.

தடுமாற்றத்துடன் எழுந்து, கும்பலைத் தள்ளிக் கொண்டு கீழே இறங்கினார்.

பல ஒட்டுக் குடித்தனங்களுக்குள்ளே — 'டோபிகானா' வின் எதிரே வீடு. அந்தப் பக்கமாகத் திரும்பக் கால்கள் தயங்கின. உடம்பு கொதிப்பது போலிருந்தது. வெகு நேரம் வரை, எதையெதையோ நினைத்தவாறு ரயிலடியிலேயே நின்று கொண்டிருந்தார்.

அப்போதே நிற்பதற்கும் சக்தியற்றவையாகக் கால்கள் துவண்டன.

வீட்டிற்குப் போய்ச்சேர்ந்து விட முடியுமா?

இரவு மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது.

ரகுபதியின் இல்லாள் மைதிலி ஒன்றும் ஓடாமல் வீட்டுக்கும் வாசலுக்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

நாலு மணி சுமாருக்குத் தாம்பரம் போய்த் திரும்புவதாகச் சொல்லிச் சென்ற மாமனார், இன்னும் வீடு திரும்பவில்லை. என்றைக்கும் இந்த நேரத்தில் இப்படிப் பெரியவர் வெளியில் தங்கியதே இல்லையே. எட்டு மணிக்கு அவர் வீட்டிற்கு வந்தவர், சாப்பிடக்கூட இல்லை. வந்த காலோடு அப்பாவைத் தேடி ஓடி இருக்கிறார்.

மைதிலிக்குக் கவலையாக இருந்தது.

மெதுவாக ஏறி வாங்க தாத்தா என்று பக்கத்து வீட்டுப் பையனின் குரல் கேட்டது.

மைதிலி முன் வாசலுக்கு ஓடினாள்.

மாமனாரைத் தான் தாங்கிப் பிடித்தவாறு அழைத்து வந்து கொண்டிருந்தான் பையன்.

"என்ன மாமா உங்களுக்கு" என்று பதறிக் கொண்டே முன்னால் வந்தாள் மைதிலி.

"தாத்தா பாலத்துக்கடியிலே விழுந்து கிடந்தார். நடக்கவே முடியலே" என்றான் பையன்.

பதறிப்போன மைதிலி, மாமனாரைக் கைத்தாங்கலாக வீட்டிற்குள்ளே அழைத்துச் சென்று, முன் அறையில் கட்டிலிலே படுக்கச் செய்தாள். நெற்றியிலே கைவைத்துப் பார்த்த போது..

'என்ன மாமா இது. டாக்டரைக்கூப்பிடச்சொல்லட்டுமா?' என்று பயத்துடன் கேட்டாள் மைதிலி.

சுந்தரேசன் கையசைத்து விட்டு, கண்களை மூடிக்கொண்டார். இமைகளில் நீர் கோத்திருந்தது.

"அவர் உங்களைத் தேடிட்டுப் போயிருக்கார். உடம்பு நெருப்பா இருக்கே." என்றாள் கலவரத்துடன்.

சுந்தரேசன் கண்களைத்திறந்து, அவளைப் பார்த்தார். முன் பிறவியில் செய்த புண்ணியமோ, மருமகள் குணவதியாக வாய்த்திருக்கிறாள்.

"மைதிலி" என்றழைத்தார்.

அவரது முகத்திற்கு நேராக முகம் கவிழ்ந்து, "என்ன மாமா?" என்று பதட்டத்துடன் கேட்டாள் அவள்.

"வாழ வேண்டிய உங்க தலையிலே பெரிய பொறுப்பைச் சுமத்திட்டேம்மா? அந்த நாளையிலேயே வருங்காலத்தைப் பத்தி நான் நினைச்சிருக்கணும்" என்ற போது சுந்தரேசனின் கண்களில் நீர் வழிந்தது.

"இப்ப எதுக்குத் திடீருன்னு இந்தக் கவலை வந்திருக்கு உங்களுக்கு" என்று விளங்காமல் கேட்டாள் மைதிலி.

"இல்லேம்மா, உங்க வாழ்வையே சீரழிக்க நானே காரணமா இருந்திட்டேன். நாளைக்கு உங்களுக்கும் குழந்தைகள் பிறக்கும் போது, இந்தப் பெரிய குடும்பத்தை எப்படியம்மா தாங்கப் போறான் ரகு?" என்று தயங்கித் தயங்கிச் சொன்னார்.

"நல்லா இருக்கு. இதைப் பற்றிக் கவலைப் பட்டுக் கிட்டிருந்தா தீருமா?" என்றவள், சற்றுக் கழித்து, "வீட்டிலிருக்கும் குழந்தைகள்தான் எங்களுக்கும். கல்யாணத்துக்கு முன்னாலேயே நாங்க முடிவு செய்திட்டோம்." என்றாள் மைதிலி.

'என்னம்மா சொல்றே மைதிலி' என்று நடுக்கத்துடன் கேட்டார் சுந்தரேசன்.

"எங்களுக்குக் கல்யாணமாகி முதல் மாதத்திலேயே—உங்க மகன் குடும்பக் கட்டுப்பாடு செய்திருக்கார் மாமா" என்ற மைதிலி, முகம் சிவந்து, தலை கவிழ்ந்து கொண்டாள்.

சுந்தரேசனின் குழிந்த விழிகளில் தேங்கி நின்றிருந்த கண்ணீர் மைதிலியின் உருவத்தை மறைத்தது.

## கூட்டுறவுத் துறையின் 'நிப்' தொழிற்சாலை



பேனா நிப்புத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நாடெங்கிலும் 30-க்கு அதிகமாக இருந்தாலும் அவை யாவும் தனியார் துறையில் உள்ளவையே. இந்தியாவிலேயே கூட்டுறவுத் துறையில் நிப்புத் தயாரிக்கும் ஒரே 'நிப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசியில்தான் உள்ளது.

இத் தொழிற்சங்கத்தில் 141 உறுப்பினர்கள் உள்ளனர். வேலை செய்யும் பங்குதாரர்கள் 11 பேர் உள்ளனர். இத்தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தமிழ்நாடு அரசு பங்குத் தொகைக் கடனாக ரூ. 10,000 வழங்கியுள்ளது. தமிழ்நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி ரூ. 50,000 கடனாகவும், ரூ. 5,000 மானியமாகவும் வழங்கியுள்ளது.

இத்தொழிற்சாலை ஒரு மாதத்திற்கு ரூ. 9,000 மதிப்புள்ள 3,000 குரோஸ் நிப்புகளைத் தயாரித்து விற்பனை செய்கிறது. நிப்புகள் தரமானவைகளாக உள்ளன. விரைவில், இத்தொழிற்சாலை பேனாக்களையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது.

# சிற்பச் சிலம்பு





"ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஒரே மாதிரியான சிற்பக் கலையே தமிழ் நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது. பல தலைமுறைகளாகச் சிற்பிகளும் தாங்கள் செய்துவந்ததையே திரும்பத் திரும்பச் செய்து வந்தார்கள்.





ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது !

முதல்வர் கலைஞரின் முயற்சியால் கல்லிலே காப்பியம் உருவாகி வருகிறது.

தமிழக வரலாற்றில் இதற்கு முன்னர் இலக்கியத்தில் உள்ள பாத்திரங்கள் அனைத்தையும் சிற்பத்தில் வடித்ததில்லை. சிற்பக்கலையிலேயே புதிய திருப்பம் உருவாகி வருகிறது. இதனால் சிற்பக் கலைஞர்களே புதிய வகையில் உருவாகி வருகிறார்கள். இந்தப் பெருமை அனைத்துக்கும் தமிழக அரசும் முதல்வர் கலைஞர் அவர்களுமே காரணம்” என்கிறார் மாமல்லபுரத்தில் உள்ள சிற்பக் கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தின் கண்காணிப்பாளரான சிற்பி கணபதி அவர்கள்.





ஒரே கல்லில் ஆன சிலம்பு, இளங்கோ அடிகள் சிலை போன்றவற்றுடன் சிலப்பதிகார நிகழ்ச்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

அங்கேதான் சிற்பத்தில் சிலம்பு உருவாகி வருகிறது.

விரைவில் பூம்புகாரில் அமைக்கப்படவிருக்கும் சிலப்பதிகாரக் கலைக் கூடத்திற்கான சிலப்பதிகாரக் காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.





மாமல்லபுரத்திற்கு இப் பொழுது போகும் வெளி நாட்டார்கள் எல்லாரும் சிற்பக் கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தில் செய்யப் பட்டுள்ள சிற்பச் சிலம்புக் காட்சிகளைக் கண்டு வியக்கி ருர்கள். தங்களுக்கும் இது போன்று செய்து தர வேண்டும் என்று கேட்கிருர் கள்.



எட்டரை அடி உயரத்தில் செய்யப்பட்டுள்ள மாதவி யின் சிலை மற்றும் பெரிய அளவில் செய்யப்பட்டுள்ள கோவலன், கண்ணகி சிலை கள் காண்போர் கண்ணை யும் கருத்தையும் ஒருங்கே கவரும் வகையில் உள்ளன.



## கல்லிலே கதை

ஒரு கதை முழுமையும் சிற்பங்களால் வடிக்கப்பட்டு இருப்பதைக் காணும் அயல் நாட்டவர்கள் மட்டுமல்ல, நாமும் வியப்புக்கு ஆளாகிறோம். முதன்முதலாகக் கதை முழுவதையும் சிற்பத்தில் வடிக்கும் முயற்சி இது தான்.

யுனெஸ்கோ நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் ரைட் அவர்கள் இந்தச் சிற்பங்களைப் பார்த்துப் பாராட்டியதுடன், வேறொரு முக்கியச் செய்தியையும் தெரிவித்தார்.







அவர் சொன்னார்: "நான் உலகம் முழுவதும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். ஆனால், சிற்பக் கலையை இப்படிச் சொல்லிக் கொடுக்கும் சிற்பக்கலைப் பயிற்சிக்கூடம் உலகில் வேறு எங்குமே கிடையாது. சோவியத் நாட்டில் சிற்பக் கலை மிகச் சிறு அளவில்

சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்றாலும், அது முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. இதற்கு இணையாக வேறெங்கும் சிற்பக்கலை கற்பிக்கும் இடத்தைக் காண முடியாது."

ஆமாம், பேராசிரியர் ரைட் சொல்லியது போல் உலகிலேயே சிற்பக்கலை கற்பிப்பதில் சிறந்த இடத்தைப் பெற்றுள்ள மாமல்லபுரத்துச் சிற்பக்கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தில் உள்ள சிற்பக் கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவாகியன அல்லவா சிலப்பதிகாரச் சிற்பங்கள்! அவைகள் சிறப்பாய் இருப்பதில் வியப்பேது !

## காஞ்சிக்கல்

சிலப்பதிகாரச் சிற்பங்கள் அனைத்தும் காஞ்சிக்கு அருகிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள கற்களால் செய்யப்பட்டுள்ளன.

காஞ்சிபுரத்துக்கு அருகிலுள்ள பழைய சீவரம்பட்டு மலைக் குப்பத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கற்களால் இந்தச் சிற்பங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஏனெனில், தமிழ்நாட்டில் சிலைகள் செய்வதற்குரிய சிறந்த கற்கள் பழைய சீவரம் மலையில் உள்ளவைதாம்.

தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான கோவில்களில் உள்ள மூல விக்ரகங்கள் அனைத்தும் பழைய சீவரம் கற்களால் செய்யப்பட்டவைகளே !

## ஆறு மாதங்களில்

சிலப்பதிகாரக் கலைக்கூடம் இன்னும் ஆறு மாதங்களில் பூம்புகாரில் அமைக்கப்பட்டு விடும். கலைக்கூடம் அமைக்கப்பட்ட பின்னர், மாமல்லபுரத்துச் சிற்பக்கூடம் இன்னும் பலமடங்கு புகழடையும் என்று சிலப்பதிகாரச் சிற்பங்களைப் பார்ப்பவர்கள் அனைவரும் கூறுகிறார்கள்.

1957 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ள சிற்பத் தொழிற் பயிற்சிக் கூடத்திலிருந்து இதுவரை 88 பேருக்கு மேல் பயிற்சி பெற்றுச் சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் இந்தியாவின் பல பாகங்களில் இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் சிற்பக்கலை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துள்ளது. ஆனால், இடைக்காலத்தில் இந்தக் கலை மறைந்து விட்டது. எனவே, மறைந்து போன தமிழகச் சிற்பக்கலை மரபுகளை உயிர்ப்பித்து வளர்க்கும் உயரிய நோக்கோடு மாமல்லபுரத்துச் சிற்பக்கலைத் தொழிற் பயிற்சிக்கூடம் இயங்கி வருகிறது.



## தமிழில்
## சிற்பச் செந்நூல்

சிற்பக்கலை பயிலும் மாணவர்கள் சிற்பக் கலையைப் பயில்வது வடமொழியில் தான். தமிழ் நாட்டிலுள்ள சிற்ப நூல்கள் அனைத்தும் வடமொழியில்தான் உள்ளன. இடைக் காலத்தில் வட மொழி பெற்றிருந்த செல்வாக்கால் வந்த விளைவு இது ! தமிழில் இருந்த சிற்ப நூல்கள் அருகிவிட்டன. எனவே, இப்பொழுது தமிழக அரசின் முயற்சியால் சிற்பச் செந்நூல் தயாரிக்கப்பட்டு வருகிறது.



## சிற்பக்கலைப் பயிற்சி



மாமல்லபுரத்துச் சிற்பக் கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தில் பயிலும் மாணவர்கள் நான்கு ஆண்டுகள் அங்கே பயிற்சி பெறுகிறார்கள்.

இரண்டாவது ஆண்டு, பச்சைக்கல்லில் சிற்பங்கள் செய்யக் கற்றுக் கொள்கிறார்கள். இந்தப் பச்சைக்கல் வட ஆர்க்காடு மாவட்டம் போளூர்ப் பகுதியில் இருந்து கொண்டுவரப்படுகிறது.

இந்தச் சிற்பக் கூடத்தில் தயாரிக்கப்பட்டுள்ள சிலைகள் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஹாலந்து முதலிய நாடுகளிலிருந்து வந்திருந்த வெளிநாட்டவர்கள் இங்கிருந்து ஏராளமான சிலைகளை வாங்கிச் சென்றுள்ளனர்.

கடந்த ஓராண்டு மட்டும் இங்கிருந்து ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிற்பங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைந்த பிறகு தமிழகச் சிற்பக் கலைக்கு ஒரு பொற்காலம் பிறந்தே தீரும்.

நான்காம் ஆண்டு இறுதிக்குள் கருங்கல்லில் சிலை வடிக்கப் பயிற்சி பெற்று விடுகிறார்கள். அறிவுக் கூர்மையுடன் உடலுழைப்பும் சிற்பக் கலைக்குத் தேவைப் படுகிறது.





கல்லிலே கலையை உருவாக்க அரும்பாடுபட்டு உழைக்கும் இக்கலைஞர்களின் திறன் நாளுக்கு நாள் மெருகேறி வருவது தமிழகச் சிறப்புக் கலைக்கே உரிய சிறப்பாகும்.

மலையைச் சிலையாக வடிக்க நாள்தோறும் இங்கே தயாரிக்கப்படும் உளிகளும் ஏராளம். நாள்தோறும் உளிகளின் முனைகள் தோயப்படுகின்றன.

இந்தப் பயிற்சிக் கூடமே மேனாட்டாருக்கு அற்புதமாக இருக்கும்பொழுது, இங்கே உருவாகும் சிற்பச் சிலம்பின் சிறப்பினை எப்படி வார்த்தைகளால் வடிக்க முடியும்?




உதய சூரியன் தன் ஒளிக் கதிர்களை நீலவண்ணக் கடலிலே பாய்ச்சிப் பளபளப்பாக்கும் காலைநேரம்.

கடலோரப் பகுதிகள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன; கட்டு மரங்கள் கட்டான இளைஞர்களைத் தாங்கி அலையோடு அழகாய் மிதந்து செல்கின்றன. பொன்னாய் மின்னும் அந்தக் காலை நேரக் காட்சியைக் கண்ணாரக் காணும்போதெல்லாம் நம் சிந்தனை சிறகடித்துச் செல்கின்றது.

உழைப்பின் சின்னமாய் உற்றாரையும், மற்றோரையும் பிரிந்து, பரந்த கடல்நீரிலே தம் பிழைப்புக்கு வழிதேடுகிறானே மீனவத் தோழன்—படகோட்டி, அவனை ஒருகணம் நினைத்தால். . . . . .

அவனுக்கு எப்படி இந்தத் துணிவு வந்தது?

பரந்து விரிந்த கடலில் பாறையும் பெருத்த மீன்களும் அவனைத் தாக்கக்கூடும்; புயலோ இடிமழையோ அவனைக் கடலிலே தள்ளக் கூடும். இவற்றையெல்லாம் சமாளிக்கும் மனத் துணிவு அவனுக்கு இருக்க வேண்டுமே, அது எப்படிவந்தது?

எல்லாம் பயிற்சிதான்! பயிற்சியால் வந்த அனுபவம் தான்!

இந்தப் பயிற்சிக்கு ஒரு பள்ளி இருக்கிறது, சென்னையில்! ஆம்! கடலிலே சென்று மீன் பிடிப்பது எப்படி? அதற்கான வழிமுறைகள் என்னென்ன? என்பனபோன்ற செயல்முறை விளக்கங்கள் அலைகடலிலேயே சொல்லித் தரப்படுகின்றன. இந்தப் பயிற்சி நிலையம் தோன்றுவதற்குக் காரணம் லூசின் என்னும் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர்தான். அவர் சொன்ன யோசனைகளின் பேரில் இது துவக்கப்பட்டது.

மக்களுக்குச் சத்துள்ள உணவை அளிக்க இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. அத் திட்டங்களின்படி மக்களுக்கு மிக அதிக அளவில் புரதச்சத்து அடங்கிய மீன் உணவை வழங்குவதற்காகச் சில திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவற்றுள் கடலில் விசைப்படகுகளைக் கொண்டு நவீன முறையில் மீன்களைப் பிடித்தல் முக்கியமான ஒரு திட்டமாகும். இத் திட்டத்தின் முன்னோடியாக, விசைப்படகுகளைச் சரிவர இயக்கவும், பராமரிக்கவும், நவீன முறையில் மீன்களைப் பிடிக்கவும், மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டன.

சென்னை அடையாற்றிலுள்ள இந்நிலையம் தவிர, தூத்துக்குடி நாகைப்பட்டினம், கடலூர், கொளச்சல், மண்டபம் முதலிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் செயலாற்றி வருகின்றன. இந்தப் பயிற்சி நிலையங்கள் ஆண்டுதோறும் 300 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றன.

1961-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்தத் தமிழ்நாடு அரசினர் மீனவர் பயிற்சி நிலையம் ஐம்பது மீனவ மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை இத்துறையில் தேர்ந்தவர்களாகத் தயார்ப்படுத்துகிறது. இவர்களுக்கான பயிற்சிக்காலம் பத்து மாதங்கள். பயிற்சியின்போது இவர்களுக்கு மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் இவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. முதலில் பத்துப் பேருடன் துவங்கிய இந்நிலையம்




உலகில் ஆண்டொன்றுக்கு ஏறக் குறைய 77,88,900,000 இராத்தல் அளவுள்ள மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஆயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாக இத் தொழில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கின்றது. அதனினும் நார்வே, ஜப்பான் நாட்டிலும் கூடுதலான மக்கள் இத் தொழிலால் பயனடைகின்றனர்.

உலகில் 30,000 வகையான மீன் இனங்கள் உள்ளன. ஏரிகள், கடல், ஓடைகள் முதலியவற்றில் மீன்கள் கிடைத்த போதிலும் மீனே இல்லாத நீர் நிலைகள் சிலவும் உலகில் உள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆண்டுதோறும் 1,70,00,000 மக்கள் மீன் பிடிப்பதற்குரிய அனுமதிச் சீட்டுப் பெறுகின்றனர். மீனவர்களாக இருப்பவர்களில் குறிப்பிட்ட வயது வரை உள்ளவர்களுக்கும் உப்பு நீரிலே மீன் பிடிப்பவர்களுக்கும் இத்தகைய அனுமதிச் சீட்டுத் தேவையில்லை. எனவே, மீன்பிடிப்பவர்களின், மொத்தத் தொகை 30,000,000 ஆகும். அதாவது மக்கள் தொகையில் அறுவருக்கு ஒருவர் ஆவர்.

தான், இந்த மண்டலத்திலேயே முதலாவதாகத் தொடங்கப் பட்ட நிலையமாகும்.

மீன்பிடிப்புத் துறையில் தேர்ந்தவர்கள், இம் மாணவர்களுக்கு வகுப்பிலும், கடலிலும் பயிற்சி தருகிறார்கள். படிப்பதற்குப் பாட நூல் ஒன்றும் உள்ளது. அதன் பெயர் : 'கப்பல் வழிநிலை தெரிமுறை கடலாண்மை நூல்' ( Elementary Navigation and Seamanship ). இதுவரை பதினொரு அணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, இப்போது பன்னிரண்டாவது அணியைத் தயார்ப்படுத்துகின்றனர். கடந்த ஆண்டு பர்மா அகதிகள் பத்துப்பேருக்கும் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.

முதலில் இம்மை மாணவர்களுக்குப் பாடம்தான் முக்கியம். சூரிய மண்டலம், கிரகங்கள், பூமி, சந்திரன், தீர்க்கரேகைகள், அட்சரேகைகள், காந்தச் சக்தி, கடலின் தூரங்களையும் ஆழங்களையும் அளத்தல், புயல், காற்றுகள் முதலியவைகளைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். மேலும், கீழ்காணும் அடிப்படைக் கருத்துக்களும் போதிக்கப்படுகின்றன :

1. கப்பலோட்டும் கலையின் அமைப்பும், அடிப்படைப் படிப்பும். திசை காட்டும் கருவியும் அதன் பயனும், அதனைப் பயன்படுத்தும் முறைகளும்.

2. கடலுக்குள்ளாந்த இயந்திரங்களை இயக்கும் முறைகளும் அவற்றைப் பராமரித்தலும்.

3. நவீன மீன்பிடி முறைகளும், இதற்கான புதிய சாதனங்களைப் பயன்படுத்தும் முறைகளும்.

இவை மட்டுமா?

மாணவர்களுக்குக் கடலில் செல்லும்போது எதிர்பாராமல் ஏதேனும் விபத்து நேர்ந்தால், முதல் சிகிச்சை அளிக்க வேண்டி இதற்கான முதல் சிகிச்சை வகுப்பும் நடத்தப்படுகின்றது.

பயிற்சி பெறும் மாணவர்களுக்குப் பொதுவாக எல்லா வகைகளிலும் செயல்முறைப் பயிற்சிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது மீனவர்களுக்கு இரண்டு நிலையில் பயிற்சி அளிக்கப் படுகின்றன. (1) நவீன மீன்பிடிப்புப் பாடமுறை. (2) இளையோர் இயந்திரவியல் பாட முறை.

இந்த நிலையத்தில் யார் வேண்டுமானாலும் சேரலாமா?

படிப்பறிவில்லா மீனவர்களும் ஐந்து ஆண்டுக் கடல் அனுபவம் இருந்தால் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி நிலையங்களில் (1) மீன் பிடிப்பு முறை, (2) மீன் பிடிப்புக் கருவி நுண்ணியல், (3) கப்பலோட்டும் கலையின் அடிப்படை அறிவு முதலியவை போதிக்கப் படும் விரிவான பாடத் திட்டமாகும்.

இயந்திரங்களை இயக்குதலும் மற்றும் பராமரித்தலும் மாணவர்களின் செய்முறைப் பயிற்சிக்காக 30 குதிரை ஓட்டமுள்ள இரண்டு 30 அடிப் படகுகளும், ஒரு 67 குதிரை ஓட்டமுள்ள 32 அடிப் படகும் உள்ளது. இப்படகுகளின் மூலம் மாணவர்களைக் கடலுக்கு அழைத்துச் சென்று அங்கு, நவீன மீன்பிடி முறைகளையும் கப்பல் சாத்திரமும், இயந்திரங்களை இயக்கும் விதங்களையும், பராமரிக்கும் முறைகள் குறித்தும் செய்முறைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மீனவர்களுக்கு நவீன மீன் பிடிப்பு முறையில் பயிற்சி அளிப்பதல்லாமல், கல்வி அறிவுள்ள மீனவர்களுக்கு இயந்திர நுணுக்கங்களை அறிந்து கொள்வதற்காக இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனால் அவர்களால் 'டீஸல்' இயந்திரங்களை 'சர்வீஸ்' செய்து கொள்வதற்கும் அவ்வப்போது இயந்திரங்களில் ஏற்படும் சிக்கல்களைப் பழுது பார்த்துக் கொள்வதற்கும், சிறு குறைகளைச் செப்பனிட்டுக் கொள்ளவும் ஏதுவாகிறது. கடல் மீன் பிடிப்பில் அனுபவமுள்ள எட்டாவது வகுப்பு வரை படித்த மீனவர்கள் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தவிர மீனவர் பயிற்சி, நிலையங்களில் படித்து வெற்றி பெற்ற மாணவர்களும் இரண்டு ஆண்டு விசைப் படகில் அனுபவம் பெற்றிருந்தாலும் இந்தப் பாட முறையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும், மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்தங்கிய சமூகத்தினருக்கும், பயிற்சி நிலையத்தில் சேர்ந்து பயிற்சி பெற வாய்ப்பு உண்டு. இப்பயிற்சி நிலையத்தில் சேரும் மாணவர்கள் 18 வயதுக்குட்படாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். குறைந்தது ஐந்தாம் வகுப்பு வரையிலாவது படித்திருக்க வேண்டும். ஆனால், படிப்பில்லாமல் குறைந்தது 5 ஆண்டுக் கடலில்



மீன் பிடிப்பில் அனுபவம் பெற்றிருந்தால் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மீன் பிடிப்பதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது வலை. இந்த வலையில் தான் எத்தனை வகை : (1) வழி வலை, இது கடல் நீரோடு மேல் மட்டத்தில் மிதந்து படகோடு வரும். (2) இழு வலை—இது நீரில் ஆழ்ந்து மீன்களை இழுத்துவரும். (3) தடுப்பு வலை—நீருக்கு அடியில் நிற்கும். (4) செவுள் வலை-மீனின் செவுளில் மாட்டி இழுத்துவரும். இவை பெரும்பாலும் நைலானுல் பின்னப்படுகின்றன. ஒரு நைலான் வலையின் விலை சுமார் 400 ரூபாய். இந்த வலைகளை உபயோகிக்கும் முறைபற்றி விசைப்படகின் மூலம் கடலில் கற்றுத் தருகிருர்கள். கடலில் பயிற்சி வகுப்பு காலை ஆறு மணிக்கே தொடங்கிவிடும். சுமார் பத்து மைல் தூரம் வரைதான் இந்தப் பயிற்சி நடைபெறும். காரணம், பயிற்சிக்கு மட்டுமே படகு செலுத்தப்படுகிறது வியாபார நோக்கில் மீன்களைப் பிடிக்க அல்ல. ஆகவே, பயிற்சிபெறும் மாணவர்களுக்கு அதிகத் தொந்தரவு இல்லாதிருக்கவும், அதிக தூரம் போவதற்கு உணவு முதலிய வசதிகள் இல்லாததாலும் இந்த அளவில் பயிற்சி தரப்படுகிறது.

கடலில் மீன்கள் பிடிக்கும்போது பருவ நிலை ஒரே மாதிரியாகவா இருக்கும்? புயல், காற்று, இடி, மழை, மின்னல் இப்படி இயற்கைச் சக்திகளோடு மீனவன் போராட வேண்டி வருமே? நிலப் பகுதியாக இருந்தால் ஓரளவு சமாளித்துக் கொள்ளலாம். அலை மோதும் கடலில் என்ன செய்ய முடியும்? முதலில் ஒரு மீனவன் பருவ நிலைகளை நன்கு அறிந்தவனுக இருக்க வேண்டும். புயல் வருவதை எப்படி அறிந்து கொள்வது?

வெப்பத்தின் காரணமாக உண்டாகும் காற்றின் அழுத்த மாறுபாடுகளால் புயலும், சுழற் காற்றும் ஏற்படுகின்றன. காற்றின் அழுத்த மாறுபாடுகளைத் தெளிவாகக் காட்டுவது பாரமானி என்னும் கருவியாகும். குழப்பமான வானிலை ஏற்படும் போது மணிக்கொருதரம் பார



மானியைக் கவனித்துப் புயல் அணுகுவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். இவை தவிர, வானில் பலவகைக் கரு மேகங்களும் கடல் கொந்தளிப்பும் ஒரே திசையில்லாத கோரக் காற்றும் குறிப்பாகப் புயலின்ஆபத்தை உணர்த்தலாம். இவை பற்றியெல்லாம் இங்குக் கற்றுத் தரப்படுகின்றன.

மிகவும் கொந்தளிப்பான கடலில் பெரிய அலைகள் எழுந்து, வெண்ணுரையுடன் உடைந்து பாயும் இடங்களில் கப்பல்கள் நாலா பக்கமும் உழன்று நிலை தடுமாறும். அந்தச் சமயத்தில் என்ன செய்ய வேண்டும்?

எண்ணெய் இந்தச் சமயத்தில் நமக்குக் கைகொடுத்து உதவுகிறது. பொங்கும் அலைகளைத் தணிக்க 'மோபில் ஆயிலை'க் கொஞ்சம் கொஞ்சமாக, பலமான காற்றுத் தாக்கும் பகுதியில் கொட்டினுல் காற்றின் சீற்றம் கொஞ்சம் தணியும்! கப்பலும் கவிழாமல் பாதுகாக்கப்படும்.

கடலில் ஆழங்களைத் தெரிந்து கொள்வது எப்படி?

கப்பல்கள் கடலில் செல்லும் போது அவ்வப்போது தண்ணீரின் ஆழம் எவ்வளவு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். துறைமுகங்களிலும் ஆழம் குறைந்த பாகங்களிலும் செல்லும் போது கப்பலை அபாயமில்லாமல் செலுத்த ஆழங்களை அறிந்து கொள்வது முக்கியமாகும். இதற்கு 'எக்கோ சவுண்டிங் மெஷின்' என்னும் கருவி பயன்படுகிறது. கடல் நீரில், ஒலி, வினுடிக்கு 5,000 அடி. வீதம் செல்கிறது என்று கணக்கிட்டிருக்கிருர்கள். அந்த ஒலி அலைகளைக் கடலின் அடியைத்தட்டித் திருப்பிக் கப்பலின் அடித்தளத்திற்கு எதிரொலியாக வந்து சேரும் நேரத்தை இந்த இயந்திரம் கணக்கிட்டு, அதை அடிகளாக மாற்றி அதில் பாதியைக் கடலின் ஆழம் என்று காட்டுகிறது.

பயிற்சின்போது நிறைய மீன்கள் பிடிபடும். அவைகளைக் கெடாமல் பத்திரமாகக் கொண்டுவர வேண்டும். கரையிலிருந்து போகும்போதே பனிக் கட்டி கொண்டு செல்வார்கள். பிடித்த மீன்கள் கெடாமலிருக்கப் பனிக்கட்டியைப் பயன்படுத்திக் கொள்வார்கள். பெரிய மீன்கள் பிடிபட்டால் அதன் குடல்களை எடுத்து விடுவார்கள். இதனுல் மீன் கெடாது. இவ்வாறு பிடிபட்ட மீன்கள் பிறகு விற்கப்பட்டு விடும்.

மீனவர் வசதிக் கேற்பவும், அதே சமயத்தில் மீன்பிடி தொழிலில் பயன்படும் விதத்திலும் விசைப்படகுகள் 25 அடி, 30 அடி, 32 அடி, நீளங்களில் செய்யப்படுகின்றன.

படகுகள் கட்டும் தொழிற்சாலைகள் சென்னை இராயபுரத்திலும், நாகைப்பட்டினம், மண்டபம் ஆகிய இடங்களிலும் இருக்கின்றன. 30 அடி நீளமுள்ள ஒரு விசைப்படகின் விலை ரூ. 40,000. அப்படியானால் இவ்வளவு விலை கொடுத்து ஒரு மீனவனால் இந்தப் படகை விலைக்கு வாங்க முடியுமா? முடியும்! கடந்த இருபது ஆண்டுகளில் இதர தொழில்கள் பெருகிச் சிறப்புற்ற வகையில் மீன் பிடி தொழில் முன்னேற்றம் அடையவில்லை. அதிக மீன்களைப் பிடித்துத் தொழிலைத் திறம்பட நடத்தி மீனவர் சமுதாயம் உயர்நிலையடையப் பல வசதிகள் தேவைப்படுகின்றன. மீனவர் தேவைகளைப் பரிசிலனை செய்து உணர்ந்து நிவாரணமளிக்க அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றில் ஒன்றுதான் மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்குவது.

கட்டுமரங்கள், பாய்க்கப்பல்கள் இவற்றைக் கொண்டு காற்றையும், கடலையும் நம்பித் தொழில் செய்யும் நம் மீனவரின் உடலுழைப்பும் நேரமும் அதிக விரயமாகின்றன. இவ்விதமாகச் சுமார் 2½ இலட்சம் மீன்பிடி தொழிலாளர்கள் இன்னலுற்றுத் தகுந்த பலன் காணுமல் வறுமையில் வாடுகின்றனர். எனவே, நவீன சாதனங்களை உதவி அவர்களுக்கு ஊக்கமளித்து மீன் பிடி தொழிலை நல்லமுறையில் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தொழிலில் இலாபமடைந்தால் மீனவர் வாழ்க்கையும் வளம் பெறும்.

மீனவர் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசினர் மேற்கொண்டுள்ள பல திட்டங்களில் மிகவும் முக்கியமானவை மீனவர்களுக்கு விசைப்படகுகள், நைலான் நூல் சகாய விலையில் வழங்குவது. காற்றை எதிர்நோக்கி அல்லது தண்டு வலித்துக் கட்டுமரங்களையும், படகுகளையும் கொண்டு கடலில் மீன் பிடி இடங்களை அடைய அதிக நேரமும், உடலுழைப்பும் வீணுகின்றன. மேலும் கடலில் தங்கி அதிக நேரம் மீன்பிடிக்க இயலாமலிருக்கிறது. கிடைத்த மீன்கள் பதங்கெடுவதற்கு முன்பு கரைசேர வேண்டியிருக்கிறது. இந்தக் குறைகளையும், மீனவர் காலத்தையும், திறனையும் வீணுக்காமல் விரைவில் சென்று அதிக நேரம் மீன்பிடிக்க உதவுவது விசைப்படகு. கடலில் அதிக நேரம் தங்கி மீன்பிடிப்பதைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விசைப்படகுகள் தவணை முறையில் வழங்கப்படுகின்றன.

ஒரு படகை நான்கைந்து பேர் கூட்டாகச் சேர்ந்து வாங்கிக் கொண்டு, பத்தாண்டுக் காலத்துக்குள் தவணையில் அந்தப் பணத்தைக் கொடுத்து



விடலாம். இந்நிலையில் பயிற்சி முடிந்தவர்களுக்கோ, அல்லது தனிப்பட்ட இந்தப் படகுகள் வழங்கும் திட்டம் வகை செய்கிறது. இதுவரை 1,200 படகுகள் தவணை முறையில் கொடுக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மீன் உணவாம் சத்துணவை அதிக அளவில் வழங்கும் கடற்பகுதியைத் தன்னகத்தே கொண்டுள்ள கரையோரப் பகுதி 1,000 கிலோ மீட்டர் நீளமுடையதாகும். இந்தியாவின் கடலோரப் பகுதியில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்காகும். இந்தியாவில் ஒன்பது கடற்கரை வளமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இது இந்தியாவின் மொத்த நிலப்பகுதியில் 20 சதவிகிதமாகும்.

ஆழ்கடலில் கிடைக்கும் செல்வங்கள் கணக்கிலடங்காதவை. அவற்றுள் ஒன்று மீன்கள் ஆண்டொன்றுக்கு 5,942 டன் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மதிப்பு ரூ. 248.69 இலட்சங்களாகும். கடல் மீன் உற்பத்தி 1,58,487 டன். இதன் மதிப்பு ரூ. 1,791 இலட்சங்கள். படகு கட்டுதல், பயிற்சி நிலையம், மீன்பிடித்தல் முதலானவற்றுக்காக அரசு செலவிடும் தொகை ரூ. 47,74,500.

மீன் வளம் கொழிக்க அரசு பல்வேறு வகைகளில் சிறந்த திட்டங்களைத் தீட்டிவருகிறது. குறிப்பாக மீனவச் சமுதாயம் அரசு தரும் நல்வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, பிற நாடுகள் போற்றும் அளவுக்கு மீன் உற்பத்தித் துறையில் மேலோங்கி நிற்குமாக!




செந்தமிழ் முதலும் நீயே
சிவப்பணுத் திரளும் நீயே
சிந்தனைத் தேனும் நீயே
திங்களின் நலமும் நீயே
சொந்தமுந் துணையும் நீயே
சுவைதரும் விருந்தும் நீயே
வந்தனைக் குரியை நீயே
மயக்கிசைப் பாடல் நீயே!

பனிமழைக் குளிரும் நீயே
பரிதியின் ஒளியும் நீயே
தனிமனைப் பேறும் நீயே
தமிழ்க்கடல் முத்தும் நீயே
கனிந்தநல் வரவும் நீயே
கவிதையின் நயமும் நீயே
இனிமையின் வடிவம் நீயே
இன்புறும் பாலும் நீயே!

மாந்தளிர்க் கொழுந்தும் நீயே
மரகதச் சிலையும் நீயே
நீந்திடுங் கனவும் நீயே
நிழல்தரும் தருவும் நீயே
சாந்தியின் வானம் நீயே
சந்தனப் பொதிகை நீயே
காந்தமும் விசையும் நீயே
கருணையும் நீதியும் நீயே!

காரிருள் விளக்கம் நீயே
கன்னலின் சாறும் நீயே
ஆரமும் அணியும் நீயே
அருண்மொழிச் செல்வம் நீயே
வீரமுந் துணிவும் நீயே
வெற்றியின் விருதும் நீயே
சீரிய கூத்தும் நீயே
தென்றலின் மணமும் நீயே!

உயிர்உடற் கூட்டும் நீயே
உணர்ச்சியின் உருவம் நீயே
பயிர்களின் பசுமை நீயே
பரம்பரைச் சொத்தும் நீயே
முயற்சியின் விளைவு நீயே
முன்னுரைப் படிவம் நீயே
மயக்கமுந் தெளிவும் நீயே
வாழ்க்கையின் பிணைப்பும் நீயே!





# ஏழையின் தோழன்
## எச்.பி.3.கம்பு

" அத்தான் ! பொங்கலுக்கு எனக்குப் புடவை வாங்கி வர வில்லையா ? குழந்தைகளுக்குச் சட்டை தைத்து வரவில்லையா ? வெறுங்கையோடு திரும்பி வந்திருக்கின்றீர்களே !" என்று கேட்டாள் கைக்குழந்தையுடன் உட்கார்ந்திருந்த அன்னம்.

" நாளை வாங்கி வருகிறேன்"

" கம்பு விற்கப் போனீர்களே! விற்கவில்லையா ? "

" விற்று விட்டேன் ! " என்று கூறி விட்டுக் கீழே உட்கார்ந்து, தன் சட்டைப் பையில் இருந்த பொட்டலத்தை எடுத்துப் பிரித்து அதிலிருந்த பத்து ரூபாய் நோட்டுகளை எண்ணிக் கொண்டிருந்தான் எழிலரசன்.

அன்னம் ஆவலுடன் பத்து ரூபாய் நோட்டுகளை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள். எழிலரசன் மீண்டும் மீண்டும் நோட்டுகளைத் திருப்பித் திருப்பி எண்ணிக் கொண்டிருந்தான்.

" என்ன அத்தான் ! உங்களுக்குப் பணப் பைத்தியம் பிடித்து விட்டதா ? "

எழிலரசன் எந்தவிதப் பதிலும் கூருமல், நோட்டுகளை எண்ணுவதிலேயே முனைந்திருந்தான். அதுகண்ட அன்னம் பொறுமை இழந்து எழுந்தாள்.

" அவசரப்படாதே ! சற்று நேரம் பேசாமல் உட்கார் !" என்று எழிலரசன் கூறினன்.

அன்னம் மீண்டும் உட்கார்ந்தாள். சற்று நேரத்திற்குப் பிறகு, பத்து ரூபாய் நோட்டுகளை மீண்டும் காகிதத்தில் மடித்து அன்னத்திடம் நீட்டினன்.

" பணம்தான் கிடைத்திருக்குதே. புடவையும், சட்டைகளும் வாங்கி வந்திருக்கலாமே!" என்ருள் அன்னம்.

" வாங்கி வந்திருக்கலாம் ; ஆனல், பணத்தைச் செலவு செய்ய மனம் வரவில்லை !"

" ஏன் ?"

" எனக்கும் வயது முப்பது ஆகிறது. நானும் பத்து ஆண்டுகளாக நிலத்தில் பாடு பட்டு வருகின்றேன். இதுவரை இவ்வளவு பணத்தை நான் பார்த்ததில்லை ! பணத்தின் மேல் ஏற்பட்ட ஆசையினல், செலவிட மனமில்லாமல், ஒரு நாளைக்காவது இந்தப் பணம் முழுவதையும் நம் வீட்டில் வைத்திருக்கணும் என்று ஆசைப் பட்டே பேசாமல் வந்து விட்டேன்."

" கம்பு விற்று அப்படி என்ன ஆயிரம் இரண்டாயிரமா கொண்டு வந்து விட்டீர்கள் ?"

" ஆயிரமும் இல்லை ; இரண்டாயிரமும் இல்லை. மூவாயிரம் ரூபாய் !"

" மூவாயிரமா ?"

" உஸ்.. சத்தம் போடாதே ! மெதுவாகப் பேசு ! யாரோ வருகிருர்கள் " என்று கூறிவிட்டு எட்டிப் பார்த்தான் எழிலரசு. எழிலரசனின் எட்டு வயது மகன் செங்குட்டுவன் பள்ளியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான்.

அப்பாவைக் கண்ட செங்குட்டுவன் " தீபாவளிக்கே எனக்குப் பட்டாசும், சட்டையும் வாங்கித் தரவில்லை. பொங்கலுக்கு வாங்கித் தருகிறேன் என்று கூறினீர்கள். பொங்கல் இன்னும் 2 நாள்தானே இருக்கிறது. எப்பொழுது சட்டை வாங்கி வரப் போகிறீர்கள் ?" என்று கேட்டான்.

தீபாவளி என்றதுமே எழிலரசனுக்குப் பழைய நினைவுகள் வந்தன

விடிந்தால் தீபாவளி ! ஊரெங்கும் ' டுமீர் !' ' டுமீர் !' என்று வெடிச்சத்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது. ' பட்டாசு வாங்கிக் கொடு ', ' சட்டை வாங்கிக் கொடு ' என்று செங்குட்டுவன் அடம் பிடித்தான். கையில் காசில்லாததால், தன் பிள்ளை விரும்பிக் கேட்பதை வாங்கிக் கொடுக்க முடியாத எழிலரசன் செங்குட்டுவனை அடித்து விட்டான். செங்குட்டுவன் அழுது கொண்டே அயர்ந்து தூங்கி விட்டான். காலையில் எல்லா வீட்டிலும் இட்லி, தோசை, வடை என்று இருந்தன. ஆனல், எழிலரசன் வீட்டில் பழைய சோறுதான் இருந்தது. அதைச் சாப்பிட விரும்பாத செங்குட்டுவன் எழுந்து விளையாடச் சென்று விட்டான். அதைப் பார்த்த அன்னத்திற்கு மனம் பொறுக்காமல், " பட்டாசும், சட்டையும் வாங்கி வருகிறேன் என்று பணத்துடன் போனீர்கள். அவைகளை வாங்கி வராமல், கடனுக்கு வட்டி கொடுத்து விட்டதாகச் சொல்லித் திரும்பி விட்டீர்கள். செங்குட்டுவனுக்கு நம்ம கஷ்டம் தெரியுமா ? சோறு கூடச் சாப்பிடாமல் கோபமாகப் போகிருனே !" என்ருள்.

" கடனைக் கொடு அல்லது வட்டியைக் கொடு என்று பெரிய பண்ணையார் மறித்து விட்டார். மானம்தான் பெரியது என்று எண்ணி அந்தப் பணத்தை வட்டியாகக் கொடுத்து விட்டேன். இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே ?" என்று எழிலரசன் கோபமாகப் பேசினன்.

அன்னம் பேசாமல் இருந்து விட்டாள். எழிலரசன் வீட்டை விட்டு வெளியே வந்தான். தெருவில் குழந்தைகள், வண்ண வண்ணச் சட்டையுடன் பட்டாசு கொளுத்திக் கொண்டிருந்தன. அதைக் கவலையுடன் செங்குட்டுவன் ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருந்தான். யாரிடமாவது கடன்கேட்டுப் பார்க்கலாம் என்று எண்ணிப் பக்கத்து ஊரை நோக்கி 'விடு விடு' என்று நடந்தான். அங்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியாற்றும் துணை வேளாண்மை அலுவலர் முத்துவை எதேச்சையாகச் சந்தித்தான். தன் நிலையை விளக்கினன்.

எழிலரசனின் நிலையைக்கேட்டு வருத்தப்பட்ட முத்து 85 நாட்

களில் மாருவாரியாக விளையக்கூடிய எச். பி. 3 கம்பு பயிரிடும் முறையை விளக்கி அதற்கு வேண்டிய விதை, உரம், மருந்து ஆகியவைகளைக் கடனாய்த் தருவதாகச் சொல்லிக் கடன் மனுவில் கையெழுத்து வாங்கிக் கொண்டு அவைகளைக் கொடுத்ததுடன், தன் கையிலிருந்த 2 ரூபாயைக் கொடுத்துப் பட்டாசும் வாங்கிக் கொடுத்தார். அந்தப் பட்டாசுகளை வெடித்துச் செங்குட்டுவன் மகிழ்ந்தான். அன்றிரவு நல்ல மழை பெய்தது. மறுநாளே 6 ஏக்கரிலும் முத்து கூறியபடி எழிலரசு எச். பி. 3. கம்பு விதைத்தான். அதிலிருந்து ஏக்கருக்கு 900 கிலோ மகசூல் வீதம் கிடைத்தது. அவ்வாறு கிடைத்த 5,400 கிலோவில் 5,000 கிலோவைக் குவிண்டால் ரூபாய் 60 வீதம் விற்று விட்டு வந்ததில் கிடைத்த ரூபாயே 3,000.

* * *

பழைய நினைவுகள் ஏற்பட்டதால், அந்த ரூபாய் 3,000 கிடைப்பதற்குக் காரணமாயிருந்த முத்துவை மனமார வாழ்த்தினான். முத்துவைக் கண்டு நன்றி தெரிவிக்க விரும்பினான். தன் மனைவியிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான்.

“ நாளையே போய் அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு வாருங்கள் !” என்றாள் அன்னம்.

மறுநாள் முத்துவைப் பார்க்க மாலையும் கையுமாகச் சென்றான். முத்து அலுவலகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். திடுதிப்பென்று அவர் கழுத்தில் மாலையைப் போட்டு விட்டு, கையில் ஒரு எலுமிச்சம் பழத்தையும் கொடுத்து விட்டு, பொங்கல் வாழ்த்து ஒன்றை நீட்டினான் எழிலரசு.

“ அன்பு இருந்தால் போதும் ! ஏனுங்க இதெல்லாம் ?” என்றார் முத்து.

“ ஐயா, உங்க உதவியால் 6 ஏக்கர் எச். பி. 3 கம்பு மூலம் எனக்கு ரூபாய் 3,000 வருவாய் கிடைத்துள்ளதுங்க ! உங்கள் உதவியை என்றும் மறவேன் !”

“ அப்படியா ? மிகவும் மகிழ்ச்சி ! பணத்தை வீணாகச் செலவு செய்து விடாமல், கடனைத் திருப்பிச் செலுத்தி விட்டு, முன்னேற முயலுங்கள் ” என்று கூறிவிட்டு ஏதோ ஒரு சிறு புத்தகத்தை எடுத்து “ இந்தாங்க வேளாண்மைத் துறையின் பொங்கல் பரிசு ” என்று கூறிக் கொடுத்தார். பிரித்துப் பார்த்தால் அதில் பொங்கல் வாழ்த்தும், ஐ. ஆர். 20 நெல் பயிரிடும் குறிப்பும் அடங்கியிருந்தது.

“ ஒரு ஏக்கர் நன்செய் நிலம் பயிரிடாமல் கிடப்பதாகச் சொன்னீர்களே ! அதில் ஐ. ஆர். 20 நெல் பயிரிடலாமே ! ஐ. ஆர். 20 நெல் பயிரிட இது நல்ல பருவம். பணம்தான் கையிலிருக்கே ! பயிரிட்டுப் பாருங்களேன் !” என்றார் முத்து.

“ ஒரு ஏக்கருக்கு ஐ. ஆர். 20 நெல் விதை கொடுங்கள்” என்று கேட்டு வாங்கிக் கொண்டு, “ஐயா எனக்குத் தீபாவளி அன்று 2 ரூபாய்க்குப் பட்டாசு வாங்கிக் கொடுத்தீர்களே ! அந்தப் பணத்தைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறி 2 ரூபாயை முத்துவிடம் நீட்டினான் எழிலரசன்.

“ மன்னித்து விடுங்கள் ! அந்த 2 ரூபாயை உங்களுக்குச் செலவிடவில்லை. உங்கள் குழந்தைக்குத் தான் ! அதுவும் தீபாவளிப் பரிசாகத் தான் கொடுத்தேன். கடனாக அல்ல ! எனவே தயவு செய்து வேண்டாம் ”

“ ஐயா, உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே புரியவில்லை.”

“ நன்றி சொல்ல வேண்டிய அவசியமே இல்லைங்க ! நான் என் கடமையைத் தானே செய்தேன். அதற்கு எதுக்குங்க நன்றி ?”

“ கடமையைச் செய்தாலும், அதை அன்புடனும் ஆர்வத்துடனும் செய்தீர்கள் ! உடனடியாகக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்தீர்களே ! அதற்காகவாவது நன்றி செலுத்தணுமே !”

“ பேரறிஞர் அண்ணா அவர்கள் ‘ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் ’ என்று கூறித் திட்டமிட்டார். அதைத் திறமையோடு செயல் படுத்தி வருகிறார் நமது முதல்வர் டாக்டர் கலைஞர். விதைப்பதற்குக் கடன் கேட்டால், அறுவடை முடியும் வரை கடன் கிடைக்காத காலம் ஒன்றிருந்தது . அதை மாற்றி உடனுக்குடன் கடன் கிடைக்க வழி செய்தார் நம்



முதல்வர். எனவே, உங்கள் நன்றியும், பாராட்டும் அன்னையுக்கும் கலைஞருக்குமே உரியது!''

'' சின்னஞ்சிறு விவசாயியாகிய நான் அவர்களுக்கு எப்படிங்க நன்றி தெரிவிக்க முடியும் ?''

'' நீங்கள் சாகுபடி செய்த முறைகளை எல்லாம் சொல்லி, மற்ற உழவர்களையும் அதுபோல் செய்யச் சொல்லி, அவர்களையும் முன்னேற்றப் பாடுபட வேண்டும். அதுவே, நீங்கள் அன்னையுக்கும் கலைஞருக்கும் செலுத்தும் நன்றிக் கடனாகும் !''

'' அப்படியே செய்யுறேனுங்க ! வணக்கம் ! போய்வருகிறேனுங்க '' என்று கூறி முத்து விடம் விடைபெற்றுக் கொண்டு எழிலரசு புத்துணர்வுடன், அலுவலகத்தை விட்டு வெளியே வந்தான். தன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும், புடவையும் சட்டைகளும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

## பிழைபட எழுதேல்!

துணைவியார்க்கு—துணைவியர்க்கு

துணைவி என்பதுனோடு ஆர் விகுதி சேர்த்தால் துணைவியார் என்றாகும். 'தங்கள் துணைவியார்க்கு எங்கள் அன்பையும் வணக்கத்தையும் தெரிவியுங்கள்' என்றே எழுத வேண்டும். அதை விடுத்துத் தங்கள் துணைவியர்க்கு என்று எழுதுவது பிழை. துணைவியர்—பன்மை. துணைவியார் என்பதே ஒருமை.

மறுநாள் பொங்கல் ! பொங்கலைச் சீரோடும் சிறப்போடும் கொண்டாடி மகிழ்ந்தான். மூன்றாம்நாள் மாட்டுப் பொங்கல் !

'' பொங்கலோ ! பொங்கல்!'' என்று செங்குட்டுவன் கூவுகிறான். அதைக் கண்டு எழிலரசனும் அன்னமும் மகிழ்கிறார்கள். அந்த மகிழ்ச்சிக்குக் காரணமான முத்துவை அவர்கள் நினைக்கத் தவறவில்லை.

அன்றிரவு '' பால் பொங்கியதா ?'' என்று கேட்டுக்கொண்டு ஏழை எளியவர்கள் எழிலரசன் வீட்டிற்கு வந்தார்கள். அலங்கரிக்கப்பட்ட அன்னை—கலைஞர் படத்திற்கு அருகில் அமர்ந்து கொண்டு எழிலரசன் அவர்களுக் கெல்லாம் வெற்றிலை பாக்குக் கொடுத்துக் கொண்டிருந்தான். அன்னம் அவர்களுக்குச் சோறும், சாம்பாரும், வடையும் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

'' என்னைப் போல் நீங்களும் எச். பி. 3 கம்பு பயிரிட்டால் உங்கள் வருவாய் பெருகும் ! வாழ்வும் வளம் பெறும் !'' என்று எழிலரசன் இடையிடையே சொல்லிக் கொண்டிருந்தான்.


Your deposits with

THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS

Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy.

*Schedule of Rates.*

| | Per cent per annum. |
|---|---|
| Current Account | 0·50 |
| Savings Bank account (on monthly minimum balances) | 4·00 |
| **SEASON DEPOSITS—Rs. 1,000 and over** | |
| 15 days | 3·00 |
| 46 days | 5·00 |
| **FIXED DEPOSITS—Rs. 100 and over** | |
| 91 days | 4·75 |
| 6 months | 5·25 |
| 12 months | 6·25 |
| 24 ,, | 6·75 |
| 36 ,, | 7·25 |
| 60 months and over | 7·50 |

*Additional*—1/2 per cent per annum *for* deposits of *Charitable, Religious, and Educational Institutions.*
*Interest Paid Monthly* on Rs. 1,000 and over and for periods of one year and over.

RECURRING DEPOSITS—

Rs. 5 per month in

| Months | | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Yields | Rs. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

*Local Branches*—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Kellys, Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar, Anna Nagar, Anna Salai (Anna Silai).

Opening shortly: Nungambakkam and Jawaharnagar.

R. KANAKASABAI,
*Chairman.*

P. N. T. CHARY,
*Secretary.*

# மெத்த வளருது சேலம்!

சேலம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருப்பது சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை. இந்த ஆலை எண்ணற்ற ஏழை நெசவாளர்களுக்கு வாழ்வளித்து வருகிறது. மனிதனின் இன்றியமையாத் தேவையான உணவு , உடை, இருப்பிடம் ஆகியவற்றுள் மானத்தைக் காக்கும் ஆடைகளை உருவாக்கித் தருகின்ற நெசவாளர்களின் வாழ்வை வளப்படுத்தும் வகையில் பல திட்டங்கள் இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய அரசினரால் நியமிக்கப்பட்ட விசைத்தறி வளர்ச்சிக் குழு, தமிழ்நாட்டிற்கு 12,500 விசைத்தறிகள் ஒதுக்கப் பரிந்துரை அளித்துள்ளது. இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட நெசவாளர்களுக்கும், 12,500 விசைத்தறிகளைத் திட்டமிட்ட அடிப்படையில் சிறிது சிறிதாக முடிவு செய்தது.

## புதியதோர் ஆலை அமைப்போம்

இந்த விசைத்தறிகளுக்கு, வேண்டிய பாவுகள், நூலிலிருந்து பாவுகளாகத் தயாரிக்கப்பட்டு பாவுகளாகவே முதன் முதலில் 1,000 விசைத்தறிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் சேலம் கூட்டுறவு நூற்பு ஆலையில் ஒரு பாவு ஆலையும், மதுரை (ஒமலூர்) கூட்டுறவு நூற்பாலையில் ஒரு பாவு ஆலையும் தொடங்கத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது.

இந்தத் திட்டத்தின்படி இந்நூற்பு ஆலையில் 1,000 விசைத்தறிகளுக்குப் பாவுகள் வழங்கும் நோக்கத்துடன் இந்த விசைத்தறிப் பாவு ஆலை திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்நூற்பாலையில் உற்பத்தியாகும் நூலையும் தேவையானல் இதர கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தியாகும் நூலினையும் பாவுகளாக மாற்றி, கஞ்சிப் பதப்படுத்திப் பாவுகளாக விற்பதே இந்த விசைத்தறிப்பாவு ஆலையின் செயல் முறையாகும். இதன்படி இவ்வாலை தற்போதிருக்கும் 14,080 கதிர்களிலிருந்து அடுத்த ஆண்டு 25,000 கதிர்களாக வளர இருக்கிறது. இதனல் புதியதாக நுழைக்கப்படும் கதிர்களில் தற்பொழுது இந்த ஆலையில் உற்பத்தியாகாத ரகங்களான 34;40 ரகங்களையும் உற்பத்தி செய்வோமானல் நமது விசைத்தறிப்பாவு ஆலைக்கு வேண்டிய நூல் ரகங்கள் ஏறக் குறைய அனைத்தும் (அதாவது 34; 40; 60; 80; 100) நாமே உற்பத்தி செய்கிற தன்னிறைவு அடைய இயலும்.



## மூன்று நிலைகள்

நெசவுப் பாவு உற்பத்தியில் வைண்டிங் ( Winding ) வார்ப்பிங் (Warping) சைசிங் (Sizing) (அதாவது நூல் கம்புருளையாகச் சுற்றுதல், பாவு ஆக அமைத்தல், கஞ்சியினல் பதப்படுத்தல்) என்ற மூன்று கட்டங்க்ள் இருக்கின்றன. இவற்றில் வைண்டிங் இந்நூற்பாலையிலேயே அமைந்திருக்கிறது. ஆகவே புதிதாக ஏற்படுத்தப் படுகிற விசைத்தறிப் பாவு ஆலையில் ஏற்படுத்த வேண்டிய இருகட்டங்கள், பாவு அமைத்தலும், பதப்படுத்தலுமேயாகும். முதன் முதலில் பாவு அமைக்கும் இயந்திரத்தின் மூலம் சிறிய பாவுகள் (அதாவது சுமார் 300-லிருந்து 400 இழைகள் கொண்ட பாவுகள்) தயாரிக்கப்படுகின்றன.

## பாவு அமைத்தலும் பதப்படுத்தலும்

நெசவுக்கு வேண்டிய பாவுகள் சுமார் 54 அங்குல அகலத் துணிக்குச் சுமார் 2,000-லிருந்து 4,000 இழைகள் கொண்டவையாகும். ஆதலின் பாவு இயந்திரத்தின் மூலம் (Warping Machine) தயாரிக்கப்படும் சிறிய பாவுகள் பலவற்றைச் சேர்த்து அருகருகே அமைப்பதன் மூலம் நமக்குத் தேவையான 2,000 இழைகளிலிருந்து 4,000 இழைகள் வரையான பாவு கிடைக்கப் பெறுகிறது. இந்த வார்ப்பிங் இயந்திரத்தில் பெறுகிற சிறிய அகலப் பாவுகளை ஒன்றுசேர்த்துப் பெரிய அகலப் பாவு பெறும்

# வளம் கொழிக்க வழி வகுக்கும் மின்சக்தி

நாட்டில் மின்சக்தி பெருகிட வளம் பெருகிடும், மக்கள் வாழ்வு மலர்ந்திடும். நம் நாட்டின் வளம்பெருக்க தம் பங்கை ஆற்றும் பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் கொதிகலன் தொழிலகம் தம் சக நிறுவனங்களான ஹைதராபாத், ஹரித்வார் தொழிற் கூடங்களுடன் வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்தி பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

## அனல் மின் நிலைய நீராவி கொதிகலன்கள்

இவை அமையப்பெற்ற அனல் மின் நிலையங்கள்: எண்ணூர் (தமிழ் நாடு), ஹர்துவாகஞ்ச் (உ.பி), ஓப்ரா (உ.பி), பன்கி (உ.பி), ஃபரிதாபாத் (ஹரியானா), இந்திரப் பிரஸ்தா (டெல்லி), பதார்பூர் (டெல்லி), கொத்தகூடம் (ஆந்திரா), பத்ராது (பீகார்), நாம்ரூப் (அஸ்ஸாம்), பாடிண்டா (பஞ்சாப்), உகாய் (குஜராத்), கொரடி (மஹாராஷ்டிரா), பட் (குஜராத்), பரௌனி (பீஹார்) மற்றும் துங்கு ஜா அபர் (மலேசியா)



## தொழிலக நீராவி கொதிகலன்கள்

இவை அமையப்பெற்ற இரசாயன தொழிற்சாலை: ரசாயனி (மஹராஷ்டிரா), அலுமினியம் தொழிற்சாலை: கோர்பா (மகாராஷ்டிரா), பெட்ரோலியம் தொழிற்சாலைகள்: ஹால்டியா (மேற்கு வங்காளம்), பரோடா (குஜராத்) மற்றும் உரத் தொழிற்சாலைகள்: துர்காபூர் (மேற்கு வங்காளம்), நாம்ரூப் (அஸ்ஸாம்), மணலி (தமிழ் நாடு), பரௌனி (பீஹார்), சிந்திரி (பீஹார்) மற்றும் கோவா.

பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
(இந்திய அரசு நிறுவனம்)
கனரக கொதிகலன் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி-14
பதிவுபெற்ற அலுவலகம்: 5, பார்லிமென்ட் தெரு, புதுடில்லி-1

**BHEL**
வளம் கொழிக்க மின்சக்தி உற்பத்தி பணியில்



2-வது கட்ட இயந்திரம் சைசிங் இயந்திரம் (Sizing Machine) ஆகும். இந்தச் சிறிய அகலப் பாவுகள் பலவற்றை ஒருங்கிணைத்துப் பெரிய அகலப் பாவு எடுக்கும் கட்டத்தில் இடையிலேயே கஞ்சியால் நனைக்கப்பட்டுப் பதப்படுத்தப்பட்டு, உலர்த்தப்படும் செயலும் நிகழ்ந்து விடும்படி இந்த இயந்திரம் (Sizing Machine) அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சைசிங் இயந்திரத்திலிருந்து பெறுகிற பாவுகளைத் தேவையான நீளத்திற்கு (அதாவது 1,000, 2,000 மீட்டர்கள் என்ற கணக்கில்) வெட்டி நெசவாளர்களுக்கு வழங்கலாம்.

எனவே இந்த விசைத்தறி ஆலைக்கு வார்ப்பிங் இயந்திரம் ( Warping Machine ) சைசிங் இயந்திரம் இவற்றுடன் கஞ்சிப் பதப்படுத்தித் தரும் பானைகள் (Kettles) உலர்வதற்கு நீராவியும், கஞ்சி சமைப்பதற்கு வெப்பம் தருகிற கொதிகலன் (Boiler) போன்ற இயந்திரங்களும் முக்கியத் தேவைகளாகும்.

### கட்டட மதிப்பு

இந்த விசைத்தறிப் பாவு ஆலையின் கட்டட மதிப்பு ரூபாய் 2.90 இலட்சம். ஒரு பாவு இயந்திரம், ஒரு சைசிங் இயந்திரம், இரு கஞ்சி பதப்படுத்தும் பானைகள் கொண்ட ஒரு யூனிட்டுக்கு மதிப்பு ரூ. 4.60 இலட்சம். கொதிகலன் மற்றும் துணை இயந்திரங்கள் அமைக்க மதிப்பு ரூ 1.00 இலட்சம்.

### கூட்டுறவு நூற்பு ஆலையின் மூலதனம்

சேலம் நூற்பாலையின் மூலதனத்தில் தமிழ்நாடு அரசும் கூட்டுறவுச் சங்கங்களும், தனி நபர்களும் பங்கெடுத்துள்ளனர். ஆலையின் மொத்த மூலதனம் ரூ. 28,99,350 ஆகும். இதில் ரூ. 14,74,000 தமிழ்நாடு அரசின் பங்கு ஆகும். ரூபாய் 14,25,350 கூட்டுறவுச் சங்கங்கள், தனி நபர்களின் பங்கு ஆகும்.

### உற்பத்தி

இவ்வாலை வாரத்தின் ஏழு நாட்களிலும், நாளின் 24 மணி நேரமும் வேலை செய்கிறது. மாதமொன்றிற்குச் சுமார் 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. சிலோனுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அண்மையில் ஓர் ஒப்பந்தமும் ஏற்பாடாகியுள்ளது. நெசவாளர் சங்கத்திற்குத் தேவையானது போக மீதியுள்ளதைத் தமிழ்நாட்டில் பாவு நூலாகவும் பம்பாய் வணிகச் சந்தையில் தோய் நூலாகவும் விற்கப்படுகிறது.

### இலாபம்

இவ்வாலை 1969-70-ஆம் ஆண்டில் ரூ.4.24 இலட்சம் இலாபம் தந்தது. 1970-71-ஆம் ஆண்டில் சுமார் ரூ. 8 இலட்சம் அளித்தது. இந்த இலாபமானது தேய்மானங்கள், வட்டி போன்ற செலவினங்களுக்கு நிதி ஒதுக்கிய பின்னர் ஏற்பட்டது. ஆகக் கடந்த ஆண்டுகளில் சேர்ந்து நட்டம் அனைத்தையும் சென்ற இரண்டு ஆண்டுகளில் சரிசெய்து மேலும் சற்று இருப்பும் சம்பாதிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குப் போனசாக 4 சதவீதமும் முன்பணமாக 4½ சதவீதமும் கொடுத்ததுமன்றிப் பங்குதாரர்களுக்கு ஈடும் கொடுக்க இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வாடாத ரோஜா

வசந்த விழாவிற்கு ரோஜா மலர்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. அந்த ரோஜா மலர்களைப் பல நாட்கள் வரை கெடாமல் பாதுகாக்க, ஓர் அறைக்குள் காமாக் கதிர்களைச் (Gamma Rays) செலுத்தி, அவ்வறைக்குள் ரோஜா மலர்களைக் கொட்டிவைத்தால் அவை கெடாமல் பாதுகாப்பாக இருக்கும் என்று தாவர இயலார் கண்டுபிடித்துள்ளனர். இவ்வாறு காமாக் கதிர்களைச் செலுத்துவதன் மூலம், உருளைக்கிழங்கு, வெங்காயம், கேரட்டு, ஆப்பிள் முதலிய காய்கறிகள் கனிவகைகளையும் கெடாமல் பாதுகாக்கலாம். காய்கறிகளையும், கனிவகைகளையும் அழுகவைக்கும் பாக்டீரியாக்களைக் காமாக் கதிர்கள் அழித்துவிடுகின்றன.



## பழம் பெருந்தொழில்

உலகிலே மிகப்பழமையும் முக்கியமும் வாய்ந்த தொழில்களில் ஒன்று மீன் பிடித்தலாகும். ஆறு, ஏரி, கடல் ஆகியவற்றிலே மீன் பிடிக்கும் தொழில் தொடங்கி, ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கடந்து விட்டன. எகிப்திய தூபி ஒன்றில் மீனவன் ஒருவனுடைய படமொன்று காணப்படுகிறது. இது கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்னமே எழுதப்பட்டது என அறிகிறோம். உலக மக்களின் உணவுப் பொருளில் மூன்று சதவிகித உணவு இந்தத் தொழிலால் கிடைக்கிறது. ஜப்பான் நார்வே போன்ற சில நாடுகளில் மக்கள் தொகையில் பத்தில் ஒரு பகுதியினருக்கு இது உணவளிக்கிறது.

உலகமுற்றிலும் 2,500,000 மீனவர் கடலிலே சென்று மீன் பிடிக்கின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 160,000 மக்கள் மீனவர்களாகத் தம் வாழ்க்கையை நடத்துகின்றனர். வட அட்லாண்டிக் கடற்கரைப் பகுதிகளில் ஆண்டுதோறும் 500,000 டன் மீன்கள் பிடிக்கப் படுகிறது. மத்திய அட்லாண்டிக் நாடுகளில் பல்வகைப் பட்ட கடல் வாழ் உயிரினங்கள் பிடிக்கப்படுகின்றன. 435,000 டன் அளவுள்ள கடலிலிருந்து உற்பத்தியாகும் பொருள்கள் ஆண்டுதோறும் இந்த இடத்திலிருந்து கரை யேற்றப்படுகின்றன.

வட அமெரிக்காவில் மிசிசிப்பி ஆற்றில் பெரும் ஏரிகள் மற்றும் பல்வகை நிலப்பகுதியில் உள்ள நீர் நிலைகளில் இருந்து ஆண்டு தோறும் 100,000 டன் மீன்களைப் பிடிக்கின்றனர்.

# ஏலம் எடுத்தவர் ஒருவர்



ஏலம் விடும்பொழுது கேட்டவர் மட்டுமே பணம் கொடுத்துப் பொருளைப் பெற்றுக்கொள்வர். ஏலத்தில் தோற்றவரும் பணம் கொடுத்ததற்கு வரலாற்றில் இதுவரை சான்று இல்லை ! அந்தக் குறையை அகற்றி, ஏலத்தில் தோற்றவரும் கொடுத்தார் என்ற புதிய வரலாற்றை ஏற்படுத்திவிட்டார் நமது முதலமைச்சர் !

உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் திறக்கப்பட்டபோது இப்புதிய வரலாறு பிறந்துள்ளது. பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக, திரு அனிபா என்ற தோழர் தன் 'கெமி' கைக்கெடிகாரத்தைக் கழட்டி முதலமைச்சரிடம் கொடுத்தார். முதலமைச்சர் கூறியபடி, அக்கைக்கடிகாரத்தைச் சட்ட மன்ற உறுப்பினர் திரு பொன். சொக்கலிங்கம் அவர்கள் 100 ரூபாயில் தொடங்கி ஏலம் விட்டார். ரூபாய் 200, 300, 500 என்று படிப்படியாக ஏலக்கேள்வி ஏறி ரூபாய் நாலாயிரத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. நேரம் ஆகிக் கொண்டிருப்பதைக் கண்ட முதலமைச்சர் அவர்கள் "ஏலத்தைச் சீக்கிரம் முடியுங்கள்" என்றார்.

அரகண்டநல்லூர் திரு அப்துல் சலாம் அவர்கள் 4,000 ரூபாய்க்கு அந்தக் கெமி கைக்கெடிகாரத்தை ஏலம் எடுத்து அதற்கான காசோலையை முதல்வரிடம் கொடுத்தார். முதலமைச்சர் அவர்கள் அப்துல் சலாமுக்கு மாலை அணிவித்துக் கைக்கெடிகாரத்தைக் கொடுத்தார்.

# பணம் கொடுத்தவர் இருவர்

"ஏலம் எடுப்பதிலே நண்பர் சலாம் அவர்களுடன் நண்பர் கேசவலு எம்.எல்.ஏ. அவர்கள் போட்டியிட்டு வெற்றிபெற முடியாமல் போனார். ஐயோ ! பிச்சைக்காரர் நிதிக்கு நம்மால் கொடுக்க முடியவில்லையே என்று அவருக்கு வருத்தம் இருக்குமேயானால், கடைசியாக அவர் கேட்ட ஏலத் தொகையை நிதியாகக் கொடுத்து உதவலாம்" என்று முதலமைச்சர் கூறியவுடன் திரு கேசவலு அவர்கள் எழுந்து தானும் 4,000 ரூபாய் கொடுப்பதாக வாக்களித்தார்.

"கைக்கெடிகாரம் 8,000 ரூபாய்க்கு ஏலம் போனதாக எண்ணி அத்தொகையை நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு பெற்றுக்கொள்கிறோம்" என்றுமுதல்வர் கூறியவுடன் மக்கள் விண்ணதிரக் கையொலி செய்தனர்.

ஏலத்தில் வென்றவரும் கொடுத்தார் ! தோற்றவரும் கொடுத்தார்! யாருக்காக ? பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக !



# வீரியச் சோளம் பயிரிட விரைவீர்!

**மாசி** மாதம் முதல் வைகாசி மாதம் வரை தண்ணீர் வசதியுள்ள இடங்களில் வீரியச்சோளம் பயிரிடுவது வெகு இலாபகரமான செயலாகும். ஏனெனில், வீரியச் சோளம் பயிரிடுவதால் 90 முதல் 95 நாட்களில் ஒரு ஏக்கரிலிருந்து ரூபாய் 700 முதல் ரூபாய் 900 வரை நிகர இலாபம் கிடைக்கிறது. இது பலருக்கு வியப்புக்குரிய செய்தியாக இருக்கலாம். ஆனால், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல உழவர் பெருமக்கள் ஒரு ஏக்கர் வீரியச் சோளத்திலிருந்து 3,000 கிலோ தானியம் விளைவித்து ரூபாய் 1,500க்கு மேலும் இலாபம் பெற்றுள்ளனர் என்பது உண்மை.

வீரியச்சோளம் பயிரிட்டால் சராசரியாக ஏக்கருக்கு 2,500 கிலோ தானியமும், 4,500 முதல் 5,000 கிலோ சோளத் தட்டையும் கிடைக்கிறது. ஒரு ஏக்கர் வீரியச் சோளம் பயிரிட ரூபாய் 400 முதல் ரூபாய் 600 வரைசெலவு ஆகலாம். ஒரு ஏக்கர் வீரியச்சோளம் பயிரிட்டுக் கிடைக்கும் 2,500 கிலோ தானியத்தைக் குறைந்த விலையில் விற்பதாகக் கணக்கிட்டால் கூட, ரூபாய் 1,300 வருமானம் கிடைக்கும். அதில் சாகுபடிச் செலவு போக ரூபாய் 700 முதல் ரூபாய் 900 வரை நிகர இலாபம் கிடைக்கும். நல்ல விலை விற்கும் போது நிகர இலாபம் அதிகமாகும். சென்ற வாரத்தில் ஒரு குவிண்டால் (100 கிலோ) சோளம் ரூபாய் 82·14 வரை கோயம்புத்தூரில் விற்பனையாகியுள்ளது. என்னதான் விலை குறைந்தாலும், குவிண்டால் ரூபாய் 55-க்குக் குறையாது என்பது கடந்தகால விற்பனை விலை நிலவரங்களிலிருந்து உறுதியாகிறது.

எனவே, குறைந்த விலையில் சோளத்தை விற்பதாகக் கொண்டாலும், ஒரு ஏக்கர் வீரியச் சோளத்திலிருந்து 90 முதல் 95 நாட்களில் ரூபாய் 700 முதல் ரூபாய் 900 வரை நிகர இலாபம் கிடைக்கும் என்பது திண்ணம்.

வீரியச்சோளம் அரிசியைவிடப் புரதச்சத்து மிகுந்த தானியமாகும். வீரியச் சோளத்தையும் நமது உணவில் சேர்த்துக் கொண்டு கலப்புணவுப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் நமது உடலுக்கு வலிவும்வனப்பும் ஏற்படுவதுடன், அரிசியின் தேவையையும் ஓரளவுக்குக் குறைக்கலாம். சோளத்தை நேரடியாகச் சமைத்துச் சாப்பிட விரும்பாவிட்டாலும், உப்புமா, முறுக்கு, கிச்சடி, கேசரி முதலியவைகளாகச் செய்து சாப்பிடலாம். கோவை மாவட்டத்தில் பெரும் பணக்காரர்கள் கூட வீரியச் சோளத்தை உணவாகச் சாப்பிடுகிறார்கள். எனவே, வீரியச் சோளம் பயிரிட்டுக் கலப்பு உணவாகப் பயன் படுத்துவது, நாம் அனைவரும் நாட்டிற்குச் செய்யும் நல்ல பணியாகும்.

வீரியச் சோளத் தட்டைகள் சாறுமிகுந்தும், சுவையாகவும், பசுமையாகவும் இருப்பதால், மாடுகள் அவற்றை விரும்பி உண்கின்றன. வீரியச்சோளம் மக்களுக்கும், மாடுகளுக்கும் குறுகிய காலத்தில் பயனளிக்கும் ஓர் பயனுள்ள பயிராக இருப்பதுடன், மறுதாம்புப் பயிர் (கட்டைப் பயிர்) செய்வதற்கும் ஏற்றதாக இருக்கிறது. மறுதாம்புப் பயிரும் 85 முதல் 90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடுவதுடன், முதல் பயிரைவிட, அதிக மகசூலும் அளித்துள்ளது. மறுதாம்புப் பயிரிலிருந்து ஏக்கருக்கு 2,600 கிலோ வரை தானியம் கிடைத்துள்ளது. மறுதாம்புப் பயிருக்குச் சாகுபடி செலவு குறைவு. எனவே, நிகர இலாபம் கூடுகிறது. எனவே கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு வீரியச் சோளம் பயிரிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

### சாகுபடி முறைகள்

**ரகம்:**— மாசி, பங்குனி மாதங்களில் விதைப்பதற்கு சி. எஸ். எச். 1, சொர்ணா ஆகிய ரகங்கள் ஏற்றவை.

**வயது** :—சி. எஸ். எச். 1—90 நாட்கள் ; சொர்ணா-90 முதல் 95 நாட்கள்.

## முன்னேற்றத்திலும் செழிப்பிலும் எமது பங்கு

# TANSI

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

### தொழில்

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இருமல், டிசிசி கம்பிகள்

### விவசாயம்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசையேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

### அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாழ்ப்பாள்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

### ஏற்றுமதி

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற ஈரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்
நிர்வாக இயக்குநர்

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(இது ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

35/2 உட்ஸ் சாலை, சென்னை-2.

**நிலம் தயாரித்தல்** :—ஏக்கருக்கு 15 முதல் 20 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு விட்டு, மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட்டு, புழுதியாகச் செய்யவேண்டும். அதன் பின் நிலத்தில் சொர்ணு ரகம் பயிரிட 1 அடி இடைவெளியிலும், சி. எஸ். எச் 1 ரகம் பயிரிட 1½ அடி இடைவெளியிலும் பார்கள் அமைக்க வேண்டும்.

**அடி உரமிடுதல்**:—ஒரு ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக் கிடைக்க 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 112 கிலோ சூப்பர் பாஸ்பேட், 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இடவேண்டும். அல்லது 125 கிலோ 14 : 14: 14 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் உரத்தையோ அல்லது 120 கிலோ 15 : 15: 15 என். பி. கே. காம்ப்ளெக்ஸ் உரத்தையோ அல்லது 200 கிலோ தரப்படுத்தப்பட்ட கலவை உர எண். 5 (9 : 9: 9)-யோ அடியுரமாக இடலாம். இவ்வுரங்களைப் பார்களின் ஒருபக்கச் சரிவின் கீழ்ப் பாகத்தில் 3 அங்குல ஆழத்தில் இட்டு மண்ணால் மூட வேண்டும்.

**விதையளவு** :—சி. எஸ். எச். 1 ரகம் பயிரிட ஏக்கருக்கு 4 கிலோ விதையும், சொர்ணு ரகத்திற்கு ஏக்கருக்கு 6 கிலோ விதையும் தேவை. சி.எஸ்.எச். 1 ரகத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு முறையும் புதுவிதைகளையே வாங்கி விதைக்க வேண்டும். சொர்ணு ரகத்திற்கு, முன் பயிரிலிருந்து எடுக்கப்பட்ட தரமான விதைகளையும் விதைப்பதற்காகப் பயன்படுத்தலாம்.

**விதையுடன் மருந்து கலக்குதல்**:—சான்றிதழ் பெற்ற விதைகளில் மருந்து கலக்கப்பட்டிருக்கும். மருந்து கலக்கப்படாத விதைகளென்றால், அக்ரசான், டை. எம் டீ. டி., கேப்டான் போன்ற மருந்தில் ஏதேனும் ஒன்றை ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் இட்டு, விதை கலக்கும் கருவியில் இட்டு, விதையும் மருந்தும் நன்கு கலக்குமாறு நன்கு சுற்ற வேண்டும்.

**விதைத்தல்** :— பார்களின் சரிவில் உரமிட்ட வரிசைக்குமேல் 6 அங்குல இடைவெளியில், ஒரு அங்குல ஆழத்தில், இரண்டிரண்டு விதைகளாக ஊன்ற வேண்டும்.

**நீர்ப்பாசனம்** :—விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த மூன்றும் நாள் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு மண்ணின் தன்மைக்கு ஏற்றவாறு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**களையெடுத்தல்** :—விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் களையெடுக்க வேண்டும். அத்துடன் வரிசையில் 6 அங்குலத்திற்கு ஒரு பயிர் வீதம் விட்டு, மற்றப் பயிர்களை அகற்றிவிட வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு**:—வீரியச் சோளத்தில் குருத்து ஈ, தண்டுப் புழு, உண்ணி, கால்மிட்ஜ் ஆகிய பூச்சிகளும், தண்டு, வேர் அழுகல் நோய்களும் தோன்றிச் சேதம் விளைவிக்கக் கூடும். அவைகளைக் கட்டுப்படுத்த பின்கண்ட முறையில் தடுப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

**குருத்து ஈ**:—விதைத்த 7-வது நாளிலேயே இது இளம்பயிரை அழிக்கிறது. இதைத் தடுக்க விதைப்பதற்கு முன்பே சால்களில், ஒரு மீட்டர் நீளத்திற்கு 1.5 கிராம் போரேட் 10சதக் குருணைகள், அல்லது 3 கிராம் டைசல்போடான் 5 சதக்குருணைகள், அல்லது 3 கிராம் சால்விரெக்ஸ் 5 சதக் குருணைகள், அல்லது, 1.5 கிராம் ‘டெமிக்’ 10 சதக் குருணைகள் வீதம் தூவ வேண்டும். விதைத்த 7-வது நாளிலும், 15-வது நாளிலும் ஏக்கருக்கு 150 மில்லி லிட்டர் எண்ட்ரின் மருந்தையும் 100 மில்லி லிட்டர் மெட்டாசிஸ்டாக்ஸ் மருந்தையும் 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**தண்டுப்புழு**:—விதைத்த 21-ஆம் நாளிலிருந்து பயிர்களைத் தாக்கும். இதைத் தடுக்க விதைத்த 21-ஆம் நாளும் பின்பு 15 நாட்களுக்கொருமுறை வீதமும் பூப்பூக்கும் வரை ஏக்கருக்கு 4 முதல் 6 கிலோ எண்ட்ரின் 2 சதக் குருணைகளை இலைக் குருத்துகளில் இட வேண்டும்.



**உண்ணி**:—உண்ணிகள் காணப்பட்டவுடன் ஏக்கருக்கு 10 கிலோ கந்தகத் தூளைத் தூவ வேண்டும்.

**கால்மிட்ஜ்**:—பூப் பூத்துக் குலுங்கும் சமயத்தில் இது காணப்படும். இதைத் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 10 கிலோ கார்பரில் 10 சதத்தூளை முதல் முறை பூப்பூக்கும் சமயத்திலும், இரண்டாவது முறையாகப் பால் பிடிக்கும்

சமயத்திலும் தூவ வேண்டும். அல்லது ஏக்கருக்கு 5 கிலோ டி.டி.டீ. 5 சதத் தூளையும், 5 கிலோ பி. எச். சி. 10 சதத் தூளையும் மேற்கூறிய இரு தடவையில் தூவிவிட வேண்டும். இவ்வாறு மருந்து தூவினால் கதிர் நாவாய்ப் பூச்சி, கதிர்ப்புழு ஆகியவைகளும் கட்டுப்படுத்தப் படும்.

**தண்டு, வேர் அழுகல் நோய்**—இந்நோய் காணப்படும் இடங்களில், 1 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் நனையும் செரசான் மருந்து வீதம் கலந்து தெளித்து மண்ணை நனைக்க வேண்டும்.

**அறுவடை**:—கதிர் நன்கு முற்றிய பின்பு அறுவடைசெய்ய வேண்டும்.

**மறுதாம்புப்பயிர்** :— அறுவடை முடிந்த பின்பு, சோளத்தட்டைகளைத் தரை மட்டத்திற்கு வெட்டி விட வேண்டும். அதன் பின் உடனடியாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்பு கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

5-ஆம் நாள்:—நிலத்தை நன்ருகக் கொத்திவிடவேண்டும்.

8-ஆம் நாள்:—மேலுரமாக ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியா உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

15-ஆம் நாள்:—ஒவ்வொரு தூருக்கும் வீரியமான 3 பயிர்களை விட்டு அதிகமாக உள்ளதைக் கிள்ளி எறிந்துவிட வேண்டும். பின்பு ஏக்கருக்கு 6 கிலோ என்ட்ரின் குறுணைகளைப் பயிர்களின் குருத்தில் இடவேண்டும்.

18-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

25 ஆம் நாள்.—என்ட்ரின்குறுணைகள் இடவேண்டும். களை எடுக்க வேண்டும்.

28-ஆம் நாள்:—இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

38-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

40-ஆம் நாள்:—ஒரு கிலோ நனையும் கந்தகத்தை 225 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

48-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

55-ஆம் நாள்—5 கிலோ டி.டி.டீ. 5 சத மருந்தைத் தூவவும்.

58-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

60-ஆம் நாள்:—பி. எச். சி. 10 சதத்தூள் 5 கிலோவையும், டி.டி.டீ. 5 சத தூள் 5 கிலோவையும் கலந்து தூவவேண்டும்.

68-ஆம் நாள்:—தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

85 முதல் 88 ஆம் நாள்:—மறு தாம்புப் பயிர் அறுவடைக்குத் தயாராகிவிடும்.

மறுதாம்புப் பயிர் அறுவடைக்குப்பின், உயர் விளைச்சல் நெல் ரகங்களைப் பயிரிடலாம். இவ்வாறு செய்தால் ஒரே ஆண்டில் மூன்று பயிர்செய்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதுடன், வருவாயையும் பெருக்கிக் கொள்ள முடியுமாதலின் வீரியச் சோளம் பயிரிட விரைந்திடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேம்.

## வெண்பாப் போட்டி-30

முறிப்படி :

வளைகண்டின் புற்றேம் மகிழ்ந்து.

முடிவு நாள் : 15—3—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்
அரசினர் தோட்டம்,
அண்ணு சாலே,
சென்னே-2.

குறிப்பு :—
நேரிசை வெண்பாக்களே அனுப்பப் படவேண்டும். அஞ்சல் அட்டையிலேயே எழுதி அனுப்புதல் வேண்டும்.


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

Sarath

# என் இந்தக் காதல்?

சற்றுத் தொலைவில் சாலையின் குறுக்கே பரபரப்பு எதுவுமின்றி மெள்ள நடந்துகொண்டிருந்தாள் ஒரு பாவை.

அமைதி தவழும் அதிகாலை நேரந்தானே — கார்களுக்கும், பேருந்துகளுக்கும் அஞ்சி நடுங்கிக் கொண்டு எதற்கு நாம் ஓட வேண்டும் என்கிற துணிச்சல் போலும் அவளுக்கு!

எந்த நேரமாக இருந்தாலும், அவசரம் மிகுந்த—ஆத்திரம் மலிந்த—சென்னை மாநகரில் அன்ன நடைகளுக்கோ, அடக்கமான மனிதர்களுக்கோ இடம் ஏது?

ஆயிரங் கரடிகள் ஒன்றாய்க் கூடி உறுமினாற் போல அலறிக் கொண்டு பாய்ந்து வந்தது ஒரு மோட்டார் சைக்கிள்; அந்த ஆரணங்கை ஒரு மோது மோதித் குப்புறத் தள்ளியது; அடுத்த கணமே இமைமூடி இமை திறப்பதற்குள் அது பறந்து மறைந்து விட்டது மின்னலாக!

இளங்காலைப் பொழுதாகையால் மனித நடமாட்டம் அவ்வளவாக இல்லை; நடைபாதையில் சென்றுகொண்டிருந்த ஒன்றிரண்டு மனிதர்களும், எட்டி நின்று வேடிக்கை பார்த்தார்களேயன்றிக் கிட்டே நெருங்கவில்லை.

மாதவனுக்கோ இருப்புக் கொள்ளவில்லை. அவனுடைய தொண்டு நெஞ்சம் துறுதுறுத்தது; கையும் காலுமோ பரபரத்தன.

காரோட்டியை நோக்கி ''வண்டியை நிறுத்து''—என்று உரத்த குரலில் கட்டளை இட்டான் அவன்.

பேரின்பமுத்தும் மற்ற பெரியவர்களும் தனக்காகக் காத்திருப்பார்களே, திருமண நேரம் கடந்து விடுமே என்றெல்லாம் கவலைப்படவில்லை அவன். காரை விட்டுக் கீழே இறங்கினான்.

அவனுடைய கார் திடீரென்று நின்று விடவே, அவனுக்குப் பின்னால் தேன்மொழியைச் சுமந்து வந்த காரும், பிற கார்களும் தேங்கி நின்று விட்டன.

அவனுக்குத்தான் என்னவோ ஏதோ என்று திருமணத்திற்காக வந்தவர்களுள் சிலர் அவனை நோக்கி ஓடி வந்தனர். அவனுடைய அன்னையும் அவர்களோடு விரைந்து வந்தாள்.

தேன்மொழியைக் 'காரைவிட்டு இறங்க வேண்டாம்' என்று கூறிவிட்டு டாக்டர் பூங்கொடியும் தாமரைக்கண்ணியும் கூட விரைந்து நடந்தனர் மாதவனை நோக்கி.

''ஆமாம், என்ன நடந்தது? ஏன் காரை நிறுத்தி விட்டு இறங்கிவிட்டீர்கள்?''

—என்று பதற்றத்துடன் கேட்டாள் பூங்கொடி.

களுக்கு அந்த இரக்க குணம் வரவில்லையா? தன்னைப் பெற்றவர்களுக்கும், தன்னோடு பிறந்தவர்களுக்கும் உழைப்பது தான் நல்லபணி—நன்றிக் கடன்—என்று நினைக்கிறீர்களா? அப்படியானால், பெரியவரே, உங்கள் இதயம் இன்னும் இலையாக விரியவில்லை; குருத்தாகத்தான் சுருண்டு கிடக்கிறது! அதுவும் கிழிந்து கெட்டுப் போன குருத்து! எவளோ ஒருத்தியை, எவனோ ஒருத்தனைத் துன்பக் கேணியிலிருந்து கரையேற்றிக் காப்பதுதான் உண்மையான தொண்டு. மோட்டார் சைக்கிளில் போனானே, அவனைப் போல இரக்கம் இல்லாத அரக்கனாக என்னையும் இருக்கச் சொல்கிறீர்களா?''

—என்றெல்லாம் அந்தப் பெரியவரை மடக்கிப் பேசவில்லை மாதவன்.

ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தான்; ஓசைபடாத ஒரு

## 16. இரத்தக் கறை!

''நீங்கள் கவனிக்க வில்லையா? அதோ ஒரு பெண் மோட்டார் சைக்கிளில் அடிபட்டு விழுந்து விட்டாளே!''

—என்று கூறியவாறே அந்த இரங்கத்தக்கவளை நோக்கிக் கால்களை நீட்டிப் போட்டான் மாதவன்.

ஒரு முதியவர் அவன் முன்னால் வந்து வழி மறித்து,

''என்ன தம்பி இது? நமக்காக எத்தனைபேர் அங்கே காத்துக் கொண்டிருப்பார்கள்? எவளோ ஒருத்தி அடிபட்டு விழுந்ததற்கெல்லாம் நாம் கவலைப்பட்டுக் கவனிக்கப் போனால் நம்முடைய காரியம் என்ன ஆவது? ''—என்றார்.

'' ........ ..இத்தனை வயதாகியும்—இவ்வளவு பக்திக் கோலம் பூண்டும்—இன்னும் உங்

அ. மறைமலையான்

சிரிப்பையும் அதில் இழைய விட்டான்.

அந்தப் பார்வைக்கும், அந்தச் சிரிப்புக்கும் பொருள் புரிந்து விட்டது பெரியவருக்கு; ஒதுங்கிக் கொண்டுவிட்டார்.

இப்போது டாக்டர் பூங்கொடியே அவன் பின்னால் வந்தவாறே இப்படிச் சொன்னாள்:

''பெரியவர் சொல்வதும் சரிதானே! திருமணத்திற்கு நேரந் தவறி விட்டால், தேன்மொழியின் அப்பாவுக்கு ஒரேயடியாகக் கோபம் வந்து விடும். ....... அவளை வேறே யாராவது பார்த்துக்கொள்கிறார்கள் ... ... ... ... ''

—மாதவன் முகத்தைத் திருப்பினான். பூங்கொடியையே வெறிக்கப் பார்த்தான். அவனுடைய உதடுகளில் ஏளனச் சிரிப்பு நெளிந்தது.

''நீங்களுமா டாக்டர், அப்படிச் சொல்கிறீர்கள்?''

—அந்த ஒரு கேள்வியே, தன் மருத்துவக் கல்விக்கு—அதைப் பயின்ற பிறகு தான் வளர்த்துக்கொள்ள வேண்டிய பரிவுக்குப்—பண்பாட்டுக்குச் சரியான சவுக்கடி கொடுத்துவிட்டதாக உணர்ந்தாள். பூங்கொடி மறுபேச்சுப் பேச அவளுடைய நா மறுத்துவிட்டது; மரத்துவிட்டது.

மாதவன், அடிபட்டுக் கிடப்பவளின் அருகே சென்றான். அவள் குப்புறக் கிடந்திருந்தாலும், தலையில் போட்டிருந்த முக்காடு நழுவாததாலும், அவளுடைய முகம் தெரியவில்லை சரியாக. முழங்கால் பகுதியில் மட்டும் புடவையையும் மீறி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பாதங்களிலோ, சாலைக்குத் தார் போடும் பொழுது தொழிலாளிகள் தங்கள் கால்களுக்குத் தடிப்பான துணியையோ, கோணியையோ கட்டிக் கொள்வார்களே, அப்படிக் கட்டிக்கொண்டிருந்தாள் அவள்.

வலிபொறுக்க முடியாமல், 'அம்மா! அம்மா!'—என்று முனகிக் கொண்டிருந்த அவளைத் தோளைத் தொட்டு மெள்ள மல்லாத்த முயன்றான் மாதவன்.

தாமரைக்கண்ணி ஓடி வந்து அவளுடைய கால் பகுதியைத் தொட்டுத் திருப்பிவிட முற்பட்டாள்.

''அய்யோ! காலைத் தொடாதே! காலைத் தொடாதே!''—என்று உயிரைக் கொடுத்துக் கத்தினாள் அவள்.

கால்தான் முறிந்திருக்க வேண்டும் என்று மாதவனுக்குப் பட்டது.

அவளுடைய முகத்தை மூடியிருந்த துணி விலகியது. அடுத்த கணமே—

''அய்யோ! வள்ளியக்கா!'' ........என்னும் அலறல் வெடித்தது மாதவனின் வாயிலிருந்து.

அதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள் தேன்மொழி. காரிலிருந்து இறங்கி அவளும் ஓடோடி வந்தாள்.

''உனக்காக்கா இந்தக் கதி? இந்தக் கோலத்திலா உன்னை நான் சந்திக்கணும்?''

—தலையிலே கையை வைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான் மாதவன். அவனுக்குப் பின்னால் வந்து நின்றுகொண்டிருந்த அவன் தாயும் தன் மகனைக் கட்டிக்கொண்டு 'கோ' வென்று கதறி அழுதாள்.

இதற்குள் ஒரு பெருங்கூட்டம் அங்கே கூடிவிட்டது. சாலையின் குறுக்கே பரவலான ஒரு தடுப்புச் சுவரையே அது எழுப்பி விட்டது.

அதனால், இரண்டு பக்கங்களிலும், பேருந்து வண்டிகளும், கார்களும், சைக்கிள்களும் வந்து மேலே பறக்க முடியாமல் தேங்கி நின்றுவிட்டன. 'எங்களுக்கு வழி விடமாட்டீர்களா?'—என்று கூக்குரலும் எழுப்பின, 'பாம்' 'பாம்'—என்று!

தங்களால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு விட்டதே என்று உணர்ந்துகொண்ட மாதவன், தானே வள்ளியைக் குண்டுக் கட்டாகத் தூக்கினான்; தாமரைக்கண்ணி அவளுடைய கால்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். இருவருமாக அவளை மாதவன் ஏறிவந்த 'பிளைமவுத்' காரின் பின் இருக்கையில் கொண்டுபோய்ப் படுக்க வைத்தனர்.

தேன்மொழியோ என்ன செய்வது—என்ன சொல்வது—என்று தெரியாதவளாக அதிர்ந்து போய் நின்றாள். அவளுடைய விழிகளிலிருந்து கண்ணீர் அருவி பெருக்கெடுத்து வழிந்தது தாரைதாரையாக.

தானும் என்ன செய்ய வேண்டும் என்று புரியாமல் குழம்பிப்போன டாக்டர் பூங்கொடி, காரினுள்ளே தன் தமக்கையைப் படுக்க வைத்துவிட்டு வெளியே வந்த மாதவனின் அருகே சென்றாள்.

''என்னை மன்னித்து விடுங்கள் மாதவன். இனி உங்கள் தமக்கையைக் காப்பாற்ற வேண்டியது என் பொறுப்பு. தயவு செய்து நீங்கள் உடனே திருமண மண்டபத்துக்குச் செல்லுங்கள்.''

''நீங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறதே! என் அக்கா சாவோடு போராடும் பொழுது நான் மட்டும் மகிழ்ச்சியோடு தாலிகட்ட முடியுமா?''—ஆத்திரத்துடன் கேட்டான் மாதவன்.



''உங்களுடைய பாச உணர்ச்சியை நான் குறைத்து மதிப்பிடவில்லை மாதவன்! ஆனால், அதோ நிற்கிறாளே ஓர் அப்பாவிப் பெண், அவளையும் கொஞ்சம் ஏறெடுத்துப் பாருங்கள் என்றுதான் கெஞ்சுகிறேன். உங்கள் அக்காவுக்குக் கால் மட்டுந்தான் ஒடிந்திருக்கலாம்; ஆனால், தேன்மொழிக்கோ அவளுடைய வாழ்க்கையே ஒடிந்து நொறுங்கிவிடும்போல் இருக்கிறதே! அவள் எப்படிப் பட்ட உணர்ச்சிக் குழந்தை என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். இன்றைக்கு மட்டும் திருமணம் நடக்காவிட்டால் அவள் மனம் இடிந்தே போய் விடும் கண்டிப்பாக! இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் மாரடைப்பு வந்து, அவள் இறந்தே போனாலும் நான் வியப்படைய மாட்டேன்.''

—சொல்லி வரும்பொழுதே பூங்கொடியின் குரல் தழுதழுத்து விட்டது; விழிகள் குளமாயின.

'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தில் மாதவனோடு அடிக்கடி பங்குகொண்டு நெருங்கிப் பழகிய தங்கப்பனும், அவன் கையை ஆதரவாகப் பற்றியவாறே,

''எனக்கும் டாக்டர் சொல்வதுதான் சரியென்று படுகிறது; நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாதீர்கள். நானே போய் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறேன்.''

—என்றான் பரிவோடு.

மாதவனின் பார்வை அந்தச் சாலையிலே பசும்பந்தல் விரித்திருக்கும் மரங்களுக்கும் மேலே வானத்தை நோக்கிச் சென்றது; மனம் பெரும் போர்க்களமாகவே மாறிவிட்டது. பூங்கொடி சொல்வதையும் புறக்கணிக்க முடியாமல் அவன் தத்தளித்தான்; பல ஆண்டுகள் கழித்துச் சந்தித்த—அடிபட்டுக் கிடக்கும்—தன் அக்காளின் வாஞ்சைப் பேரலையும் அவனுடைய மனத்தை அமுக்கிச் சுருட்டியது.



வாழ்க்கைத் தேரின் இரண்டு சக்கரங்கள் தானே இந்தக் காதலும், பாசமும்! இதிலே எந்தச் சக்கரத்தை ஒதுக்க முடியும்—உதற முடியும்? ஏதோ ஒன்றை அப்படி உதற நேர்ந்தவர்கள் எல்லாரும் அடைந்த துயரத்தை அறியாதவனா மாதவனும்?

தன் தொண்டையைக் கனைத்துக் கொண்ட அவன், பூங்கொடியை நோக்கிக் கூறினான்:

''சரி டாக்டர். நீங்கள் சொல்கிறபடியே இன்றைக்கு எப்படியாவது தேன்மொழிக்கு நான் தாலிகட்டிவிடுகிறேன்; என் தமக்கையே இறந்து போனாலும் கூடத் தாலி கட்டி விடுகிறேன். ஆனால்—இப்போது என் அக்காளை, மருத்துவமனைக்கு நானே கொண்டு போய் சேர்த்து விட்டுத்தான் திரும்புவேன். நான் ஒரு வாக்குக் கொடுத்தால் அதை உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றியே தீருவேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம் ... ... ...''

—அழுத்தமாகப் பேசிய அவன் அவளுடைய மறுமொழி எதையும் எதிர்பார்க்காமல் காரிலே போய் உட்கார்ந்து விட்டான்.

அதுவரை வாயைத் திறக்காமல் நின்று கொண்டிருந்த தேன்மொழி,

''அப்படியொன்றும் தன் அக்காளை சாகப் போகிற வேளையில் அவர் என்னை வாழவைக்கத் தேவையில்லை; அந்த அளவுக்கு நான் ஒன்றும் தன்னலக் காரியும் இல்லை. வாருங்கள், நாமும் மருத்துவமனைக்குப் போவோம்.''

—என்று பூங்கொடியின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

கார்கள் சில வந்தவழியே திரும்பிப் பறந்தன.

* * *

திருமண மண்டபத்திற்கு முன்பே சென்றுவிட்ட பேரின்ப முத்து குறித்த நேரத்தில் மணமக்கள் வராமல் போனதும் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

சென்னையிலுள்ள பெரும் பெரும் தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகள், அவருடைய நிறுவனத்தில் பணியாற்றும் நூற்றுக் கணக்கான ஊழியர்கள் எல்லாரும் அவர் எதிர்பார்த்ததற்கு மேல் படையெடுத்து வந்த வண்ணம் இருந்தனர்.

வாசலில் நின்று தாமே சந்தனப் பேலாவை எடுத்து நீட்டி வரவேற்பை வழங்கிக் கொண்டிருந்த அவருக்கு, பாதி வழியிலேயே மணமக்கள் திரும்பிவிட்டார்கள் மருத்துவமனைக்கு என்று அறிந்ததும் அவருடைய உற்சாகம் எல்லாம் பறந்தே போய்விட்டது.

தம்முடைய ஒரே மகளின் கோலாகலமான திருமண நாளில் இப்படியொரு இருள் வந்து நிழலாட வேண்டுமா என்று அவரால் வருந்தாமல் இருக்க முடியவில்லை.

நேரம் செல்லச் செல்ல, வந்திருந்த பெரிய மனிதர்கள் எல்லாரும் 'என்ன காரணம்? ஏன் வரவில்லை?' —என்று கேள்விக்கணைகளால் அவரைத் துளைத்து எடுத்து விட்டார்கள்.

பேரின்பமுத்துக்குப் பதில் சொல்லிப்பதில்சொல்லி அலுத்து விட்டது; பைத்தியமே பிடித்து விடும்போலவும் இருந்தது.

தமக்குள்ள செல்வத்திற்கு—செல்வாக்கிற்கு— இவ்வளவு பெரிய மனிதர்களின் முன்னிலையில், தம்முடைய மகளின் திருமணம் நடக்காமல் நின்று

விட்டால் என்ன ஆவது? அது எவ்வளவு பெரிய அவமானம்! என்றுதான் அவர் உள்ளம் நடுங்கிற்று.

ஆனால், மாதவன் எந்தக் காலத்திலும் —எத்தகைய நெருக்கடியிலும்—நாணயத்தைக் காப்பாற்றுவதில் குறியாக இருப்பவன் அல்லவா? பூங்கொடியிடம் வாக்களித்தவாறே தன் தமக்கையை மருத்துவமனையில் சேர்த்து அவளுடைய உயிருக்கு ஆபத்தில்லை என்று உறுதிப்படுத்திக் கொண்டுவிட்ட உடனேயே வந்து சேர்ந்து விட்டான் திருமண மண்டபத்திற்கு.

பத்து மணிக்கே முடிந்திருக்க வேண்டிய மணவிழா, பதினொரு மணிக்கே தொடங்கியது.

இந்த மட்டுமாவது திருமணம் நின்றுபோய் விடாமல் நடக்கிறதே என்று பேரின்பமுத்துக்கு ஒரே பூரிப்பு; இழந்த பொருள் மீண்டும் கிடைத்து விட்ட உற்சாகத்திலே அவர் மிதந்து திளைத்தார்.

மணமேடையில் மாதவனும் தேன்மொழியும் அமர்ந்திருந்த அழகு—அவர்களைப் பற்றி, 'இவர்களைப் போல ஒரு பொருத்தமான இணையை நாம் பார்க்கவே முடியாது!'—என்று தம் செவியில் விழுமாறு மற்றவர்கள் சிந்திய புகழ் மலர்கள்— பேரின்பமுத்துவின் நெஞ்சுக்கு அளவில்லாத நிறைவை—நிம்மதியை —அளித்தன.

அதே நேரத்தில்—

அவருடைய முகத்தில் மட்டுமல்ல, அங்கே குழுமியிருந்த அத்தனை பேருடைய முகத்திலும் கூட ஒரு விதச் சுழிப்பு—சுணக்கம்! மனத்திற்குள்ளும் இனிப்புக்கு நடுவே ஒருவிதக் கரிப்பு!

சுண்டக் காய்ச்சப்பட்ட பசும் பாலில் சீனிக் கட்டியோடு சேர்ந்து உப்புக்கல்லும் விழுந்து விட்டால் எப்படி இருக்கும்? அத்தகைய கரிப்பு !

என்ன காரணம்? மாதவன் உடுத்தியிருந்த புத்தம் புதிய பட்டு வேட்டியிலும், பட்டுச் சட்டையிலும், பொட்டுப் பொட்டாக இரத்தக் கறை படிந்திருந்ததே!

அதைப் பார்த்த பிறகும் மணமக்களுக்குப் பின்னால் நின்றிருந்த மங்கையர் திலகங்களால் வாளாயிருக்க முடியுமா? வாயாடுவது — வம்பளப்பது— என்றால்தான் பெண்களுக்கு மோர்க்குழம்பிலே வடையைத் தோய்த்துத் தின்கிற மாதிரி தானே!

"மாப்பிள்ளைக்கு வேறே கறையில்லாத வேட்டி சட்டை கிடைக்கவில்லையா?" —என்றாள் ஒருத்தி.

"ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டு வந்த அவசரத்தில் அவருக்கு எங்கேடி வேறே உடை மாற்றிக்கொள்ள நேரம் இருந்திருக்கப் போகிறது?"—என்றாள் இன்னொருத்தி.

"ஆமாம்; அடிபட்டவள் மாப்பிள்ளையோட அக்காதானாமே! அதுவும் 'பெருநோய்' பிடித்தவளாமே!

—என்றாள் வேறொருத்தி.

"இந்த இரத்தக்கறை கூட அந்தப் பெருநோயால் வடிந்த கறையாகத்தான் இருக்குமோ?" —ஐயப்பாட்டைக் கிளப்பினாள் மற்றொருத்தி.

"என்ன கருமமோ? இருந்திருந்தும் தேன்மொழியோட தலையெழுத்து இப்படியா தாறுமாறாகப் போகணும்?"

—அந்த அடக்கமான முணுமுணுப்பும் தேன்மொழியின் செவியில் தெளிவாகவே விழுந்தது.

'குப்'பென்று அவளுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. 'கோ'-வென்று கதற வேண்டும் போலவும் இருந்தது. எனினும் பல்லைக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டாள்.

* * *

அன்று இரவு—

ஒளி வெள்ளத்தைப் பொழிந்த வண்ணம் பால்நிலவு வெள்ளிப் படகாய் மிதந்து கொண்டிருந்தது வானக் கடலில்.

குளுமை வழியும் அதன் இன்பத் தழுவலில்—

எத்தனையோ கவிஞர்கள் தங்கள் கவிதைக் குழந்தைகளைப் படைத்துக் கொண்டிருக்கலாம் களிப்போடு.

எத்தனையோ காதலர்கள் தங்கள் இதய உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டிருக்கலாம் வெறியோடு.

எத்தனையோ போதைப்பிரியர்கள் தங்கள் சொர்க்கத்தின் கதவைத் தட்டிக்கொண்டிருக்கலாம் மதுவோடு.

எத்தனையோ நடன நங்கைகள் தங்கள் நளினமான உடலை நெளித்து ஆடவரின் உள்ளங்களையெல்லாம் ஆட வைத்துக் கொண்டிருக்கலாம் சிரிப்போடு.

ஆனால், தேன்மொழியோ ..?

(வளரும்)

### மாவட்டத்தில் மகளிர் நலம்

மகளிர்வாழ்விலும் இராமநாதபுர மாவட்டத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இல்லத்திலே முடங்கிக் கிடந்து விடாமல் சமுதாயத்துடன் இணைந்து அவர்கள் முன்னேறுகின்றனர். இங்குள்ள மகளிர் நலக் கிளைகளில், தையல், அப்பளம் செய்தல், நூல் நூற்றல், ஓயர்பை பின்னுதல் போன்ற சிறு சிறு தொழில்கள் நடைபெறுகின்றன. முதியோர் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. கிராமக் கைத்தொழிற் பிரிவுகள் பெண்களுக்கென 40-க்கு மேற்பட்டவை நடைபெறுகின்றன. பால் சங்கங்கள் பல உள்ளன. 1,326 ஊராட்சிகளில் மகளிர் மன்றங்கள் நடைபெறுகின்றன. சத்துணவு, வீட்டுத்தோட்டம், உரக்குழித் தயாரிப்புப் போன்ற ஆக்க வேலைகளில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இங்குள்ள மகளிர் மன்றங்களுக்குக் கைத்தொழிற் கருவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கிராமத் தொண்டர் படைப் பயிற்சியும் மகளிருக்கு இங்கே வழங்கப்படுகிறது.

போர்வீரர் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கப் பிரம்பு வேலைப் பயிற்சி போன்ற தொழில்கள் வழங்கி அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். பரமக்குடியில் பாய் நெசவுப் பயிற்சி உற்பத்தி நிலையமும் உள்ளது.

# வெண்பாப் போட்டி

## 27. காரைத் தொழுவீர் களித்து

அகமுடையான் அண்ணன் அழிவறிந்தும் போர்க்கு
மகனை எழுகென்ற மாதும்—மகன்மார்பில்
கோரப்புண் கண்டுகளி கொண்டாளும் போல்கலங்
காரைத் தொழுவீர் களித்து.

—த. மு. அகமது, கடையநல்லூர்.

போர்வென்ற வீரர் புனிதவுயிர் தந்திட்ட
தீரர் குடும்பம் செழித்தோங்க— ஊர்தோறும்
பேருதவி செய்துசெய்து பின்னுந்தம் ஆர்வமடங்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் கோம்பைச் சீரான், கோம்பை.

வாழ்வின் நலமெல்லாம் வையமதில் மாய்ந்தாலும்
தாழ்வினை என்றும் தரித்தாலும்—ஆழ்கடல்சூழ்
பாரைத் திருத்திடும் பண்பாம் பணியில்மிக்
காரைத் தொழுவீர் களித்து.

—வெ. சீனிவாசம்மாள், சேலம்-9.

செந்தமிழைக் காப்போரைத் தேம்பா துழைப்போரைச்
சிந்தையிலே அன்புத் திறத்தோரை—உந்துபுனல்
ஏரைத் தொழுவோரை எந்நாளும் தீவழிபோ
காரைத் தொழுவீர் களித்து.

—சு. பொன்னுராசு, பெரியவானவாடி.

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படுமன்றோ!—அச்சமின்றி
யாரையும் எந்நாளும் ஏற்றித் தொழாமல்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—வெ. சுப்பிரமணியன், சென்னை-5.

தானிடர்ப் பட்டாலும் தாளாது செல்வத்தை
மானிடர் கொள்ளவே மாய்கின்றார்—மானிடர்காள்!
பாரைத் திருத்துகின்ற பாட்டாளி அன்றியிங்
காரைத் தொழுவீர் களித்து.

—தமிழ்க்கனல், கோவை-11.

### பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

திரு த. மு. அகமது,
151, புதுத் தெரு, கடையநல்லூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

கோபன்...

முந்நூறு நாள்தன்னில் முற்றிக் கதிராகி
எந்நாளும் காக்கின்ற இங்கிதத்தால்—இந்நாடா!
ஏரோடு நந்நெல்லாம் இன்மலர் தூவிய ''பூங்
காரை''த் தொழுவீர் களித்து.

—வே. குருநாதன், மதுரை-2.

விண்ணில் பகைவர்தம் வீர விமானத்தை
மண்ணிலே வீழ்த்தி மறைந்திட்ட—எண்ணிலார்தம்
சீரைப் புகழ்ந்திடுவீர் சிந்தையிலே வீரமிக்
காரைத் தொழுவீர் களித்து!

—புலவர் ந. கருணாநிதி, அரக்கோணம்.

நல்லது செய்தல் நனியில்லை யாயினும்
அல்லதுசெய் யாரை யறிஞரை—மெல்லவே
பாரை உணர்த்தும் பணியில் தவறிநடக்
காரைத் தொழுவீர் களித்து.

—சொ. சட்டநாதன், மாயூரம்.

கட்டிக் கரும்பே கனிச்சாறே முத்தமிழே!
எட்டாப் பிறைநிலவே என்றெல்லாம்—தொட்டிலினில்
சீராட்டுந் தாயின் திருக்குலத்தை யன்றியிங்
காரைத் தொழுவீர் களித்து.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

இன்னுயிரே போனாலும் எஞ்சும் புகழென்றும்
மன்னுயிரைக் காக்கும் மழைநெஞ்சால்—தன்னுழைப்பைப்
பாரைப் புரக்கப் பயன்படுத்தி வாழுந்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—சி. சொ. கருப்பன்செட்டி, திருச்சி-15.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழையென்னும்—மெய்யுரை
பாரைக் குறித்ததுவே அன்னாள் பிறந்தபூம்பு
காரைத் தொழுவீர் களித்து.

—திரு. இரமணன், மாயூரம்.

நாடு வளம்பெற நாளெல்லாம் பாடுபட்(டு)
ஏடு புலம்பிடும் ஏழையின்—வீடுவளர்ப்
பாரைத் தமிழைப் பரப்புதற் கென்றும்தூங்
காரைத் தொழுவீர் களித்து.

—ஆ. சின்னச்சாமி, கவுஞ்சி.

பொன்னும் பொருளும் புகழ்மிக்க கல்வியும்
இன்னும் பிறநலன்கள் எய்திடினும்—இன்னலுற்றே
ஊரைத் திருத்த உழைத்திடும் பண்புமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

கல்லுடைத்து நற்கழனி யாக்கக் களந்திருத்தும்
நல்லுழவர் நாளும் உழைத்திட்டு—நெல்லளிக்கும்
காரையே நோக்கும் கறையிலாஅத் தன்னலம்நோக்
காரைத் தொழுவீர் களித்து.

—ஆ. வெங்கிடசுப்பிரமணியன், கருங்குளம்.

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்தற்(கு)
அதிகார முள்ளவர் யார்கொல்—மதியொளிபோல்
சீரைத் தருமழலை ஓரிரண்டின் மேல்பெருக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் இர. கி. பூபதி, வெள்ளைநகர்.

வெற்றிமகள் ஆரத்தால் வீரத்தாய் வாழ்த்துசொலச்
சுற்றிவரும் பேய்ப்பகையைத் தூளாக்கி—நற்றிறத்தால்
போரை நடத்திப் புகழுருவைத் தாங்குந்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் அ. ஆறுமுகம், இலப்பைக்குடிகாடு.

அன்பும் அருளும் அடைக்கலமாய்ப் பெற்றேழை
இன்ன லகற்றி இடுக்கணிலே—தன்னையீ
வோரை மிகமதித்தே என்றும் பிறன்மனைநோக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் அ. தங்கவேலு, வாணபுரம்.

நோய்கண்டு மூப்படைந்து நொந்துபல இன்னலுற்றுப்
போய்மடியு முன்உடலைப் போரிட்டு—மாய்த்துத்தம்
ஆருயிரைத் தாய்நாட்டுக்(கு) அர்ப்பணித்த வீரமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—பாக்கியசாமி, சென்னை-3.

துயரின்றி வாழ்ந்தாலும் தூயதமிழ் மேன்மைக்(கு)
உயிரீதல் போலஉயர் வுண்டோ—உயர்தமிழின்
சீரையெலாம் காக்கச் சிறுபொழுதும் கண்ணுறங்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

நெஞ்சில் உரம்தேக்கி நேர்மை வழிநின்று
பஞ்சில் நெருப்பாய்ப் பகைவென்றே—எஞ்சாது
போரை முடித்த புறங்கண்டு தாள்வணங்
காரைத் தொழுவீர் களித்து.

—பாரதி சங்குப்பிள்ளை, உடுமலை.

எங்கும் பிணக்குவியல் எத்தர்கள் போர்மிரட்டல்
தங்கமய வங்கமோ சாக்காட்டில்!—இங்குள்ளார்
போரைத் தமதாக்கிப் போய்மாண்ட வீரமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—புலவர் வீ. கந்தசாமி, வெங்கவல்லி.

நண்பா நலம்நீண்ட நாட்களாய் நானெழுதும்
வெண்பா தமிழரசில் வெல்லாது—கண்டுமிங்
காரையும் நோகவில்லை கண்டுவிட்டால் அச்சீர்மிக்
காரைத் தொழுவீர் களித்து.

—என். வி. பொன்னுசாமி, கம்பம்.

திண்ணிய கொம்பின்றித் தென்றலிலும் தத்தளித்துக்
கொண்டிருந்த முல்லைக் கொடியினுக்கு—வண்ணமிகு
தேரீந்த பாரியின் செந்தண்மைப் பண்பினில்மிக்
காரைத் தொழுவீர் களித்து.

—சு. தருமர், மேலான்மறைநாடு

''அன்னைத் தமிழுக் கணிசெய்த பாவலருள்
என்னைக் கவர்ந்தவ ரேஇளங்கோ—அன்னவரின்
தீரச் சிலம்பில் திகழ்கின்ற ஊராம்பு
காரைத் தொழுவீர் களித்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

காடழித்து நெற்கழனி காணும் உழவரை
நாடுமொழி மக்கள் நலம்பேணிக்—கேடொழித்
தாரைப் பரிவுநிறை தாயாரைப் பண்புமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

செல்வம் வருங்கால் செருக்காது சொல்லரிய
தொல்லை வருங்கால் துவளாது—பல்லாண்டு
பாரையே ஆளும் நிலைவரினும் பண்பின்நீங்
காரைத் தொழுவீர் களித்து.

—வி. செல்விபூரணபாய், புத்தளை.

கன்னல் சுவைவென்ற கன்னித் தமிழணங்கின்
இன்னல் பலவகற்றி ஏற்றமுடன்—இந்நாளில்
பாரை உயர்த்திடவே பாட்டெழுதி உய்யுந்தக்
காரைத் தொழுவீர் களித்து.

—பெரு. முல்லையரசு, மெணசி.

கொஞ்சும் இளமையினைக் கோலமெனக் கொண்டஇளம்
வஞ்சியரும் மாற்றுனின் வாயிலென்றால்—நெஞ்சினில்
யாரையும் சற்றேனும் ஆடவிடாப் பண்புமிக்
காரைத் தொழுவீர் களித்து.

—ப. உ. வைரவன், பூவாண்டிபட்டி.

தன்மனைவி நூல்வாங்கத் தன்னருமை இந்தியத்தாய்
பொன்மகளாய் என்றும் பொலிவுறவே—இன்னுயிரைப்
போரை வெலவேண்டிப் போக்கித் தலைவணங்
காரைத் தொழுவீர் களித்து.

—செம்பியன், அமராவதி நகர்.

# ஸீமென்ஸ் "பம்ப்மாஸ்டர்" கூறுகிறார்... SIEMENS






ஜெர்மன் தொழில்நுட்பத்தின் அற்புதப் படைப்பு ட்ரோபுடார் கேபிள். அதை நிறுவினால் கான்ட்யூவிட் குழாய்களின் தொல்லைகளுக்கு விடைகொடுக்கலாம்.

ட்ரோபுடார் கேபிள் சிறப்பியல்புகளாவன:

● ட்ரோபுடார் கேபிள் நீடித்துழைக்கும், தொல்லையற்ற பணிபுரிவதன் காரணம், தனிப்பட்ட பி.வி.ஸி. மூடுறையினையும் எஃகுக் கவசத்தையும் அணிந்துள்ளது அது.

● ட்ரோபுடார் கேபிள் திறந்த நிலத்திலோ, பள்ளத்திலோ, அல்லது நீருக்கடியிலோ நிறுவத் தக்கது. துருப்பிடிக்காதது, தீயினால் பாதிக்கப்படாதது.

● ட்ரோபுடார் நீள்நெகிழ்வுத் திறனுள்ளது; அவசியமாகும்போது, பிணைப்பு அகற்றாமலே பமபு செட்டை இடமாற்ற முடியும்.

பம்பு செட்டுக்கு இடையறாத, நம்பிக்கையான மின் சப்ளை வழங்குவதற்காக ஸீமென்ஸ் ட்ரோபுடார் கேபிள்களையே உபயோகியுங்கள்.

**ஸீமென்ஸ் இந்தியா லிட்.** ● பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● நியூ டெல்லி ● அகமதாபாத் ● பெங்களூர் ● ஹைதராபாத் ● லக்னோ

# அரிசி உற்பத்தியில் தமிழகத்திற்கே முதலிடம்!

வற்றாத ஜீவ நதிகள் வளைந்தோடுகின்ற மாநிலங்களில் செய்ய முடியாத சாதனையை, பாசன நீர் பற்றாக் குறையைத் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ்நாடு செய்துகாட்டியுள்ளது! தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களுக்கு அளித்துவரும் ஊக்கத்தின் காரணமாகவும், தளரா உள்ளம் படைத்த தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் காட்டிய ஆர்வத்தின் காரணமாகவும், 1970—71-ஆம் ஆண்டில் அனைத்து இந்தியாவிலும் தமிழ்நாடே அரிசி உற்பத்தியில் முதலிடம் வகித்து வருகிறது.

அரிசி உற்பத்தியில் 1970—71-ஆம் ஆண்டில் அனைத்து இந்தியாவிலும் சராசரியாக ஹெக்டேருக்கு (2.47ஏக்கர்) 1,134 கிலோ அரிசி உற்பத்தியாகியுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் 1970—71-ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேருக்கு 1,974 கிலோ அரிசி உற்பத்தியாகியுள்ளது. இந்த அளவு அரிசி உற்பத்தி மற்றெந்த மாநிலங்களிலும் செய்யப்படவில்லை.

அரிசி உற்பத்தியில் 1969—70-ஆம் ஆண்டில் மைசூர் மாநிலமே இந்தியாவில் முதலிடம் வகித்திருந்தது. தமிழ்நாடு உழவர் பெருமக்களும், தமிழ்நாடு அரசும் மேற்கொண்ட தளராமுயற்சியின் காரணமாக அரிசி உற்பத்தியில் 1970—71-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

வரலாறு காணாத இம்மாபெரும் சாதனை ஏற்பட்டதற்குக் கீழ்க் கண்டவைகளே மூல காரணங்களாகும்:—

1. மிகுவிளைச்சல் தரும் ரகங்கள் (High yielding varieties) பெரும்பரப்பில் பயிரிடப்பட்டன.

2. இரசாயன உரங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டன.

3. பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பெரும் பரப்பில் மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மிகுவிளைச்சல் தரும் நெல் வகைத் திட்டத்தின்கீழ் 1968-69-ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட 15.69 இலட்சம் ஏக்கர் பரப்பளவு, 1970—71-ஆம் ஆண்டில் 44.93 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. இப்பரப்பு தமிழ்நாட்டில் நெல் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவான 66 இலட்சம் ஏக்கரில், மூன்றில் இரண்டு பங்காகும்.

தமிழ்நாட்டில் 1968—69-ஆம் ஆண்டில் இரசாயன உரங்களைப் பொறுத்தவரையில் 1.13 இலட்சம் டன் தழைச்சத்து, 0.35 இலட்சம் டன் மணிச்சத்து, 0.31இலட்சம் டன் சாம்பல்சத்து, ஆகியவைகளே பயன் படுத்தப்பட்டன. 1970—71-ஆம் ஆண்டில் 1.73 இலட்சம் டன் தழைச்சத்து, 0.72 இலட்சம் டன் மணிச்சத்து, 0.51 இலட்சம் டன் சாம்பல் சத்து, தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு இரசாயன உரங்களின் உபயோகம் ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகிறது.

மண்ணின்மேல் நடந்து மருந்து தெளிப்பதுடன், விண்ணில் பறந்தும் மருந்து தெளித்துப் பயிர்களைக் கண்ணின் மணிபோல் காப்பாற்றியுள்ளோம்! 1968—69-ஆம் ஆண்டில் பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தெளிப்பான்கள் மூலம் 63·91 இலட்சம் ஏக்கரிலும், விமான மூலம் 2·90 இலட்சம் ஏக்கரிலும் மருந்து தெளிக்கப்பட்டது. பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, 1970—71-ஆம் ஆண்டில் தெளிப்பான்கள் மூலம் 107·51 இலட்சம் ஏக்கரிலும், விமானம் மூலம் 6.974 இலட்சம் ஏக்கரிலும் மருந்து தெளிக்கப்பட்டது.

பசுமைப் புரட்சியின் காரணமாக மிகு விளைச்சல் தரும் நெல் வகைகள் பரவின; இரசாயன உரங்களின் உபயோகம் பெருகின; பயிர்ப் பாதுகாப்பாக மருந்து தெளிக்கும் பணியும் தீவிரமாகியது. அதன் பயனாய் 1970-71-ஆம் ஆண்டில் நம் தமிழ்நாட்டில் அரிசி உற்பத்தி 53.03 இலட்சம் டன்களாக உயர்ந்தது. இந்த அளவு, இதுவரை எய்திய சாதனைகளிலேயே மிக உயர்ந்த அளவாகும். மேலும், 1969—70-ஆம் ஆண்டுடன் முடிவடைந்த முந்திய ஐந்தாண்டுகளின் சாரசரி ஆண்டு உற்பத்தியளவான 39.24 இலட்சம் டன் அரிசியுடன் ஒப்பிட்டால், 1970—71-ஆம் ஆண்டின் அரிசி உற்பத்தி 35.1 சத வீதம் உயர்ந்துள்ளது.

எனவே, அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இரு மாபெரும் வரலாறு காணாத சாதனைகள் 1970—71-ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ளன.

1. இதுவரை இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டின் அரிசி உற்பத்தி 53.03 இலட்சம் டன்களாக உயர்ந்தது.

2. சராசரி ஹெக்டேர் அரிசி உற்பத்தியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கிறது.

இவ்விரு சாதனைகளும், பாசன நீர்ப் பற்றாக்குறை மட்டும் தமிழ்நாட்டில் இல்லாதிருக்குமானால், தரணியே வியக்குமளவுக்குத் தமிழக உழவர் பெருமக்கள் அரிசி உற்பத்தியைப் பெருக்கிக் காட்டுவார்கள் என்பதை உறுதிப் படுத்துவதுடன், பசுமைப்புரட்சி தமிழ்நாட்டில் 'ஆல்போல் தழைத்து அருகு போல் வேர்விட்டு' வருகிறது என்பதற்குத் தகுந்த சான்றாகவும் அமைந்துள்ளன.

வரலாறு காணாத இவ்விரு சாதனைகளுக்கும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினருடைய ஓயாத உழைப்பே காரணமென்றால் மிகையல்ல.

# போர் முனையில் புனிதப் பணி



"செல்வக் குடும்பத்திலே பிறந்தவர்; இலத்தீன், ஜெர்மனி, பிரஞ்சு முதலிய மொழிகளில் புலமை பெற்றவர்; மருத்துவமனையை நிருவகிப்பதில் திறமை மிக்கவர்; செவிலியருள் தலைசிறந்தவர்; மருத்துவச் சிகிச்சையில் மிகுந்த அனுபவமுள்ளவர் ...." என்று இளங்கோ படித்துக் கொண்டிருந்த போது, "யாரண்ணா அவர்?" என்று கேட்டுக் கொண்டே கண்ணகி அறையினுள் நுழைந்தாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் இளங்கோ சில புத்தகங்களைப் படித்து, குறிப்பு எழுத முன் கூட்டியே திட்டமிட்டிருந்தான். அவனது அறையில் ஒரு சின்ன நூலகம் இருந்தது. தமிழறிஞர்களின் படங்களும் அழகாக மாட்டப்பட்டிருந்தன. கண்ணகி அவன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "நீங்கள் படித்துக் கொண்டிருந்தீர்களே, அவர் யாரண்ணா?" என்று மீண்டும் கேட்டாள். அதற்கு இளங்கோ "அவரா, அவர்தான் பிளாரென்ஸ் நைட்டிங்கேல்" என்று சொல்லி, ஒரு கனமான புத்தகத்தை அவளிடம் கொடுத்து, அதிலுள்ள அவர் உருவப் படத்தைப் பார்க்கச் சொன்னான். கண்ணகி அந்தப் படத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "வீரப் பெண்மணி ஜோன் போல, இவரும் போர்முனை சென்றாரா?" என்று கேட்டாள்.

"ஆம், ஜோன் போர் முனை சென்று போர் செய்தாள்; பிளாரென்ஸ் நைட்டிங்கேலோ போர் முனை சென்று, காயமுற்ற வீரர்களை மரணப் பிடியிலிருந்து காப்பாற்றினாள்".

"அப்படியா? அவர் கதை கேட்க நன்றாக இருக்கும் போலிருக்கிறதே! உடனே சொல்லுங்களண்ணா! அதோ, என் தோழிகளும் வந்து விட்டார்கள்" என்று கண்ணகி தம் தோழிகளை வரவேற்றாள். இளங்கோ சொல்ல ஆரம்பித்தான்.

"வில்லியம் எட்வர்டு ஷோர் என்பவர் இங்கிலாந்தில் புகழ் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்; செல்வந்தர்; அந்தக் குடும்பத்துக்கு 'நைட்டிங்கேல்' என்று பெயர். இவர் அடிக்கடி வணிகம் காரணமாக இத்தாலிக்குச் செல்வது வழக்கம். அங்கு இவருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அதற்குப் பார்த்தினோப்பு என்று பெயரிட்டார். அடுத்து, பிளாரென்ஸ் என்னும் பகுதியில் ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஊரின் பெயரோடு குடும்பப் பெயராகிய நைட்டிங்கேல் என்பதையும் சேர்த்து 'பிளாரென்ஸ் நைட்டிங்கேல்' என்று பெயரிட்டார்.

"பிளாரென்ஸ் நைட்டிங்கேலின் தாயார் பெயர் பிரான்சஸ். இவர் சிகிச்சைகள் செய்யும் முறைகளை அறிந்தவர். தம்மை நாடி வரும் நோயாளிகள் பலருக்கு இலவசமாகச் சிகிச்சை அளித்து மகிழ்ந்து வந்தார். நைட்டிங்கேலின் பெற்றோர்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். பிறர்க்கு உதவி செய்வதிலும் அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டி வந்தார்கள். பெற்றோர்களின் குணநலன்களே நைட்டிங்கேலின் பிற்கால வாழ்க்கைக்கு வழி காட்டியாய் விளங்கின.

"தன் அன்னை நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதைச் சிறுமி நைட்டிங்கேல் மிக உன்னிப்பாய்ப் பார்ப்பாள். அவளுக்கும் இது போல் மருத்துவம் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. விளையாட்டின் போதுகூட மண்ணால் வீடுகட்டி, அதை மருத்துவமனையாகவும், பொம்மைகளை நோயாளிகளாகவும் பாவித்துத் தம் சகோதரியிடம் விளையாடுவது வழக்கம். நைட்டிங்கேல் மிகுந்த இரக்க குணமுள்ளவர். பிறர் வருந்துவதைச் சகிக்கமாட்டார். சிறு வயதிலிருந்தே இந்த நல்ல குணம் அவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தது.

"நைட்டிங்கேல் குதிரைச் சவாரி செய்வதில் தேர்ச்சியுற்றார். இப்பயிற்சி பின்னால் அவருக்குப் பெரிதும் உதவியது. இவர் குதிரையிலேறி மலைச்சரிவுகளின் பக்கம் இயற்கைக் காட்சிகளையெல்லாம் கண்டு களித்த வண்ணம் செல்வார். அப்போது, ஓர் ஆட்டு இடையன் ஆடுகளை ஒன்று கூட்டுவதற்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தான். இத்தனை நாளும் அவனது நாய் ஒன்று, இந்த வேலையைச் செய்து கொண்டிருந்தது. அன்று அது காயம்பட்டு நடக்கச் சக்தியற்று வீட்டிலேயே இருந்தது. இதனை மேய்ப்பாளரிடமிருந்து அறிந்து கொண்ட நைட்டிங்கேல், நாய் இருக்கும் இடம் அறிந்துகொண்டு குதிரையை நேரே அங்குச் செலுத்தினார்.

## நாளையத் தலைமுறை

"ஒரு குடிசையின் வாசலில் கால்களில் பலத்த காயம்பட்ட நாய் சோர்ந்து படுத்துக்கொண்டிருந்தது. குதிரையிலிருந்து நைட்டிங்கேல் கீழே இறங்கி வந்து, நாயின் அடிபட்ட கால்களை மெதுவாக எடுத்துப் பார்த்தாள். நாய் மெல்லக் கண்களைத் திறந்து நைட்டிங்கேலைப் பார்த்தது. [கால்கள் வீக்க முற்றிருந்தன. அதற்குள்ளே இடையன் அங்கு வந்து விட்டான். நைட்டிங்கேல் அங்கு இருப்பது கண்டு பெரிதும் வியந்தான். இடையன் மூலம் வெந்நீரையும், ஒரு துண்டுத் துணியையும் கொண்டுவரச் சொல்லி, நாயின் கால்களுக்கு ஒத்தடம் கொடுத்தாள். நாயின் வீக்கம் படிப்படியாகக் குறைந்தது. நைட்டிங்கேலின் முகம் மலர்ந்தது. நாயும் நன்றி யுணர்ச்சியோடு நைட்டிங்கேலைப் பார்த்தது !

"இந்த நிகழ்ச்சியை அறிந்த பெற்றோர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார்கள். பெண்ணின் இரக்கச் சிந்தையைப் போற்றினார்கள். ஊரிலுள்ளவர்கள் தம் கால்நடைகளுக்கு வேண்டிய சிகிச்சைகளைப் பெற நைட்டிங்கேலையே நாடி வந்தனர். நைட்டிங்கேல் இளம் வயதிலேயே புத்திக் கூர்மையும், நல்ல திறமையும், பொதுநல ஆர்வமும் உள்ளவராகத் திகழ்ந்தார். அவர் இத்தாலியில் பிறந்திருந்தும், தம் தாய்நாடான இங்கிலாந்தை ஒருபோதும் மறந்ததில்லை.

"நைட்டிங்கேல் தமக்கென்று ஓர் அறையை அமைத்துக் கொண்டு அதை அழகிய கூடமாக ஆக்கினார். நோயாளிகள் பலருக்கு அந்த அறையில் தான் சிகிச்சை நடத்தினார். இதைக் கண்ட மேனாட்டுப் பேரறிஞர் ஒருவர் தம்நூலில், 'பிளாரென்ஸ் நைட்டிங்கேல் அம்மையாரின் அறைக்குள் நுழையும் ஒவ்வொரு நோயாளியும் அழகிய கூடத்தையும், அன்பு ஒளிவீசும் அம்மையாரின் சொற்களையும் கேட்டு நோய் நீங்கியவர்களாய் முக மலர்ச்சியுடன் செல்கிறார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

"நைட்டிங்கேல், சுற்றுப்புறங்களிலுள்ள வீடுகளுக்குச் சென்று சுகாதார முறைகளைக் கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தி வந்



தார். ஒரு சமயம் இரவு வெகு நேரமாகியும் நைட்டிங்கேலைக் காணாத பெற்றோர்கள் பல இடங்களில் தேடினார்கள். கடைசியில் ஒரு வீட்டில் ஒரு நோயாளியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு ஆறுதல் சொல்வதைக் கண்டு மகிழ்ந்தார்கள் ! தம்மை நாடி வரும் மக்களுக்கு நைட்டிங்கேல் இப்படிச் சொல்வார்: 'அருமைச் சகோதரிகளே ! நீங்கள் எந்தத் தொழிலை மேற்கொண்டாலும் ஆண்களைப் போலத் துணிவுடன் இருங்கள். எந்த நாளும் பயனை எதிர்பாராமல் உங்கள் கடமைகளைச் செய்வதில் கண்ணாயிருங்கள் !'.

"செல்வச் செழிப்பிலே வாழ்ந்து வந்தாலும் நைட்டிங்கேல் ஏழைகளுக்கு உதவி செய்வதிலேயே தம் சிந்தனையைச் செலவிட்டார். இதற்குத் தாமே ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அதுதான் 'நர்ஸ்' எனப்படும் செவிலியர் தொழில். இத்தொழிலைக் கற்றுக்கொண்டு மக்கள் தொண்டிலேயே காலத்தைக் கழிப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டார். இலண்டன் போன்ற நகரங்களுக்குச் சென்று இத்தொழிலில் பயிற்சி பெற்றார். அக்காலத்தில் மருத்துவமனைகளிலுள்ள ஆங்கிலேயச் செவிலியர் அசுத்தமாகவும், இரக்கமற்றவராகவும், போதிய பயிற்சி இல்லாதவராகவும் இருந்து வந்தனர். இதனால், நோயாளிகள் பலர் இறந்தனர். இக்குறைகளைப் போக்க நைட்டிங்கேல் பெரிதும் பாடுபட்டார். பிரான்ஸ், அலெக்சாண்டிரியா நகரங்களில் பயிற்சிச் சாலைகளை அமைக்கும் முறைகளையும், இரணச் சிகிச்சை முறைகளையும் தெளிவுறக்கற்றார். இவ்வாறு தாம் கற்றவற்றை விளக்கி ஒரு நூல் எழுதினார். அதன் மூலம் கிடைத்த வருமானம் முழுவதையும் ஏழைகளின் பள்ளிக்கு நன்கொடையாகக் கொடுத்துதவினார்.

"நைட்டிங்கேல் அம்மையாருக்கு முப்பத்து மூன்று வயதிருக்கும். இலண்டனில் செல்வப் பெண்டிருக்காக ஒரு மருத்துவமனை இருந்தது. அது சீர்குலைந்திருந்தது. அதன் தலைவராக இருந்த அலெக்சாண்டிரியா ராணியார், நைட்டிங்கேலை அம்மருத்துவமனையின் மேற்பார்வையாளராக நியமித்தார். இம்மருத்துவமனை பிற்காலத்தில் 'பிளாரென்ஸ் நைட்டிங்கேல் மருத்துவ மனை' என்று வழங்கப்பட்டது. நைட்டிங்கேலின் புகழ் ஊர் உலகெங்கும் பரவியது. பலர் தம் மருத்துவமனைக்கு அவரை வரவழைக்கப் போட்டி போட்டனர். எவ்வித வசதியும் இல்லாமல் தவிக்கும் கிராம மக்களுக்குத் தொண்டாற்றுவதிலேயே மன நிறைவு கண்டார் நைட்டிங்கேல். இதற்காக இவர் கிராமம் கிராமமாகச் சென்றார். இவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் சிட்னி-எர்பர்ட்என்னும்தம்பதிகளாவர்.

"பத்தொன்பதாவது நூற்றாண்டில் ரஷ்யாவுக்கும், இங்கிலாந்துக்கு மிடையே போர் நிகழ்ந்தது. இந்தப் போரில் இங்கிலாந்துடன் பிரான்ஸ், ஆஸ்திரியாவும் கலந்து கொண்டன. ரஷியாவில் கருங்கடலிலுள்ள கிரிமியா என்னும் தீவில் இந்தப் போர் நடந்தது. ரஷ்யர் இந்தத் தீவில் பலமிக்க கோட்டையை இராணுவ அரணாகக் கொண்டு எதிரிகளை முறியடிக்க முயன்றனர். இங்கிலாந்தும், மற்ற இருநாட்டுப் படைகளும் அந்தக் கோட்டையை முற்றுகையிட்டுக் கடும்போர் புரிந்தன. எளிதில் கைப்பற்ற முடியாத மலைகள் சூழ்ந்த அந்தக் கோட்டை பெரும் போருக்குப் பின் இங்கிலாந்து வசமாயிற்று ! இங்கிலாந்து வெற்றி பெற்றாலும் ஏராளமான வீரர்கள் போரில் காயமுற்றனர். பலர் கொடிய தொற்று நோய்களுக்கு ஆளாகி இறந்தனர்.

"ஆங்கிலேய அரசு ஸ்குடாரி என்னும் இடத்தில் இராணுவ மருத்துவ மனையொன்றைத் துவக்கியது. ஆங்கிலேயப் போர்

வீரர்கள் நாற்பதினாயிரம் பேர்களில், இருபதாயிரம் வீரர்கள் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு இம்மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அங்குத் தகுதி பெற்ற செவிலியரும், மருத்துவரும் இல்லாததால் வீரர்கள் பலர் இறந்தனர். இப்பரிதாப நிலைமை இங்கிலாந்து முழுவதும் பரவிற்று. மருத்துவ மனையில் வீரர்கள் படும் பாட்டைக் கண்டித்துப் பத்திரிகைகள் பல தலையங்கங்கள் எழுதின. இதனை நைட்டிங்கேல் படித்து மிகவும் வேதனையடைந்தார். வீரர்களின் துன்ப நிலையைத் துடைக்கத் தாமும் ஒரு செவிலியாகப் போர்முனை சென்று தம்மாலான உதவிகளைப் புரிவது என்று உறுதி கொண்டார்.

'' இதற்கிடையில் சிட்னி எர்பர்ட் என்பவர் இங்கிலாந்தின் பிரதிநிதியாகவும், போர்ச் செயலாளராகவும் போர்முனை சென்றார். அங்கு மருத்துவமனையில் கேட்பாரற்றுக் கிடந்த வீரர்களின் இழிநிலையைக் கண்டு கொதிப்படைந்தார். இவர்களைக் காப்பாற்றும் ஒரே பெண்மணி பிளாரென்ஸ் நைட்டிங்கேல்தான் என்பதையும் உணர்ந்தார். உடனே அவருக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதினார். 'போர் முனையில் மேற்பார்வையாளராக இருந்து தொண்டாற்றும் பெண்மணிக்கு மனஉறுதியும், தளரா ஊக்கமும், நல்லொழுக்கமும் மிகவும் முக்கியம். இத்தகைய பண்புகள் உம்மிடம் அமைந்திருப்பதால், நீரே அப்பதவியை வகிக்கத் தகுதியுடையவர்' என்று அதில் குறிப்பிட்டிருந்தார். மேலும், இதுபற்றி விக்டோரியா மகாராணியாருக்கு ஒரு கடிதமும் வரைந்து அனுப்பினார்.

'' கடிதத்தைப் படித்துப் பார்த்த நைட்டிங்கேல் பெரிதும் மகிழ்ந்தார். தமது விருப்பத்தைக் கடிதம் மூலம் அனுப்பினார். சேதி அறிந்த மகாராணியார், கொஞ்சமும் தாமதியாமல் நைட்டிங்கேலை ஸ்குடாரி மருத்துவமனையின் மேற்பார்வையாளராகவும், செவிலியர் தலைவராகவும் நியமனம் செய்தார். அதனால், பிளாரென்ஸ் நைட்டிங்கேல் தம்மோடு செவிலியர் பலரை அழைத்துக் கொண்டு கப்பலில் போர்முனை மருத்துவ மனையை நோக்கிச் சென்றார்.

'' மருத்துவமனையில் அவருக்குக் கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது. தங்களைக் காப்பாற்ற வந்திருக்கும் கடவுள் என்று அவரைக் கொண்டாடினர். 'சீமாட்டிகளின் தலைவி', 'பிளாரென்ஸ் சீமாட்டி', 'கன்னி நைட்டிங்கேல்' என்றெல்லாம் அவரைப் புகழ்ந்தனர். அம்மையார் மருத்துவமனை போவதற்கு முன் வீரர்கள் குளிராலும், பட்டினியாலும் தவித்துக் கொண்டிருந்தனர். துர்நாற்றம் வீசும் அழுக்கு உடைகளை அவர்கள் அணிந்திருந்தனர். சுற்றுப்புறங்கள் அசுத்தங்களால் நாறிக் கிடந்தன. இந்தக் கோரக் காட்சியைக் கண்ட அம்மையார் மிகவும் வேதனையடைந்தார்.

### இராமேஸ்வரத்தில் காண முடியாதன

இராமேஸ்வரம் தீவில் பல தொழில்கள் உள்ளன. எனினும், முக்கியத் தொழில் மீன் பிடிக்கும் தொழிலேயாகும். அங்கு, உழு தொழில் இல்லை. எனவே, ஏர் முனையைக் காண முடியாது. ஏராளமான தென்னை மரங்கள் உள்ளன. எனினும், எண்ணெய் ஆட்டும் செக்கைக் காண முடியாது. பாத்திரங்கள் செய்வதற்கு உதவக்கூடிய மண் இல்லை. எனவே, மட்பாண்டத் தொழிலாளர்களும் இல்லை.

உடனே, செயல்முறையில் இறங்கினார். மருத்துவமனையின் உள்ளும், புறமும் உள்ள அசுத்தங்களை நீக்கித் தூய்மையாக்கினார். தம் சொந்தச் செலவில் ஓர் இடத்தை வாடகைக்குப் பெற்று, அவ்விடத்தில் ஒரு சலவைச் சாலையை ஏற்படுத்தினார். சுகாதார முறைப்படி வாரம் ஒருமுறை பத்தாயிரம் சட்டைகள் வீதம் சலவை செய்ய ஏற்பாடு செய்தார்.

'' இன்சொல்லாலும், ஓயாத உழைப்பாலும் அனைவரையும் கவர்ந்த அம்மையார், முதலில் தகுதியற்ற மருத்துவர்களையும், செவிலியர்களையும் நீக்கி, திறமையானவர்களை நியமித்தார். ஒவ்வொரு வீரருக்கும் நல்ல உணவும், கம்பளிப் போர்வையும், தக்க சிகிச்சையும் கிடைக்க ஏற்பாடு செய்து மரணப் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற அரும்பாடுபட்டார். நல்லிரவில் கூட அம்மையார் கையில் விளக்கொன்றை ஏந்தி ஒவ்வொரு வீரரையும் பார்த்து வருவார். சில வீரர்கள் அவர் எப்போது வருவார் என்று எதிர்பார்ப்பார்கள். தவிர அவரது நிழலைக் கண்டதும் வணங்கி வாழ்த்திவிட்டுப் பிறகுதான் தூங்குவார்கள். இதனால், அம்மையாருக்கு 'விளக்கேந்திய வனிதையார்' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

'' அம்மையாரின் அருந்தொண்டு பற்றி உலகமே பாராட்டியது. காயமுற்ற வீரர்கள் தெம்புடன் காணப்பட்டனர். அம்மையாரின் தொண்டுள்ளத்துக்கு எடுத்துக் காட்டுகள் ஒன்றா, இரண்டா? அவர் தம் தாய் நாட்டிலிருந்து போர் முனைக்கு வரும்போதே வீரர்களுக்கு முக்கியமாகத் தேவைப்படும் மருந்து வகைகள், சோப்பு, கஞ்சிமாவு, கோழிக் குஞ்சு ரசம், தேயிலை முதலியவைகளைச் சேகரித்துக்கொண்டு வந்தார். போர்முனை மருத்துவமனைக்கு வந்த பத்து நாட்களுக்குள் சுமார் 800 வீரர்களுக்குத் தாம் கொணர்ந்த பொருட்களைக் கொடுத்து அவர்களைப் பிழைக்க வைத்தார். வீரர்களுக்கு வேளை தவறாமல் முறையாக உணவு கொடுக்க நாள்தோறும் நாற்பது காலன் மாக்கஞ்சியும், பதினான்கு காலன் கோழிக்குஞ்சு ரசமும் தயாராயின!

'' ஒரு சமயம் ஐந்து போர் வீரர்களுக்குச் சிகிச்சைகள் பல செய்தும் எந்தப் பலனுமில்லாமல் போகவே, மருத்துவர்கள் நம்பிக்கையிழந்து அவர்களைக் கைவிட்டனர். மரணத்தைத் தழுவ இருந்த அவர்களை அம்மையாரே தகுந்த சிகிச்சை செய்து, இரவும் பகலும் அருகேயிருந்து கவனித்துக் காப்பாற்றினார். இன்னொரு வீரனின் வலக்கை முறிந்திருந்தது. அதனைத் துண்டித்துவிட மருத்துவர்கள் தீர்மானித்தனர். வீரன் மிகவும் வேதனையடைந்து 'கையைத் துண்டிப்பதற்குப்பதில் என்னைக் கொன்று

விடுங்கள்' என்று கதறினன். கேள்விப்பட்ட நைட்டிங்கேல் தகுந்த சிகிச்சைகள் மூலம் இடைவிடாமல் கவனித்து அவன் கையைக் குணப்படுத்தினர்.

''ஸ்குடாரி மருத்துவமனையின் புகழுக்கு மூல காரணம் பிளாரென்ஸ் நைட்டிங்கேல் என்பதை ஊரும் உலகமும் அறிந்தன. விக்டோரியா மகாராணியாரும், அவரது கணவரும் அம்மையாரின் அயராத தொண்டைக் கண்டு பெருமிதம் கொண்டனர். தன்னலம் கருதாமல் பொதுநலப் பணியிலேயே முழுக்கவனமும் செலுத்தித் தம் பெற்றோரையும் செல்வச் செழிப்பையும் விட்டு, ஒரு பெண் பணிபுரிகிருள் என்ருல் அவள் துணிவை யார்தான் பாராட்டாமலிருக்க முடியும்?

''ஆறு மாதங்கள் ஸ்குடாரி மருத்துவமனையில் பணியாற்றிய அம்மையார், பாலக்லாவா என்னும் இன்னொரு போர்முனை மருத்துவ மனையின் மேற்பார்வையாளராக இருந்தும் பெருந்தொண்டு புரிந்தார். ஒரு சமயம் கரடுமுரடான பாதையில் குதிரையில்சென்றுகொண்டிருந்தபோது காயமுற்ருர். அதுமுதல் அவர் பாசறை ஒன்றில் தங்கி ஓய்வு எடுக்க வேண்டியிருந்தது. இராணுவ அதிகாரி ஒருவர் அவருக்கு உதவியாக குதிரை வண்டி ஒன்றைக் கொடுத்துதவினர். அந்த நிலையிலும், அவர் வண்டியிலேயே நாள்தோறும் போய் வீரர்களுக்கு வேண்டியன செய்தார். அனைதை வீரர் பலருக்குத் தம் செலவிலேயே சிறு வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்.

''இருபத்து நான்கு மணி நேரமும் சிறிதும் ஓய்வே இன்றி உழைத்த அம்மையார் பணியின் மூலம் தொற்றுநோய்க்கு ஆளானர். அம்மையார் நோய்வாய்ப்பட்ட சேதி இங்கிலாந்து முழுவதும் பரவி, அம்மக்களைப் பெரிதும் வருந்தச் செய்தது. அவர் பிழைக்க வேண்டும் என்று அனைவரும் வாழ்த்திய வண்ணமிருந்தனர். உடல் நலம் குன்றிய அவரைத் தாய் நாட்டுக்குப் போக அதிகாரிகள் வேண்டினர். ஆனல், அவர்களது வேண்டுகோளை அவர் நிராகரித்து விட்டார். மீண்டும் ஸ்குடாரிக்குச் சென்று பணியாற்றவே விரும்பினர்!

''இறுதியில் போர் நிற்கச் சமாதானம் நிலவியது. போர் வீரர்கள், காயமுற்றுச் சிகிச்சை பெற்றவர்கள், அதிகாரிகள், செவிலியர்கள்அனைவரும்தம்தாய் நாடான இங்கிலாந்துக்குச் சென்றனர். அப்போதுதான் அம்மையாரும் தாய்நாடு போகச் சம்மதித்தார்! போரில் வீரமரணம் அடைந்த எண்ணற்ற வீரர்களுக்காக நினைவுச் சின்னம் ஒன்றை அம்மையார் நிறுவினர். தாய்நாடு திரும்பிய வீரர்களுக்கும், குறிப்பாகப் பிளாரென்ஸ் நைட்டிங்கேலுக்கும் மகத்தான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

## வாழைப்பழப் பொடி

வாழைப்பழங்கள், இருதயத் துடிப்பைச் சீர்படுத்தும் பாஸ்வர உப்புக்களைக் கொண்டுள்ளன. வாழைப்பழம் மலிவான விலையில் கிடைக்கும் சுவை மிகுந்த—சத்தூட்டமுள்ள பழமாகும். இப்போது, வாழைப் பழத்தைப் பொடியாக மாற்றிப் பல்வேறு இடங்களுக்கும் அனுப்புகின்றனர்.

நேந்திர வாழைப்பழத்தின் பொடியைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவுப் பொருளாகவும் பயன்படுத்துகிருர்கள்.

''தாய்நாடு திரும்பிய பிறகும் அம்மையாரின் ஆர்வம் குறையவில்லை. செவிலியர் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தினர். பொது நன்மைக்காக நிதித்திட்டம் ஒன்றையும் மேற்கொண்டார். ஏழைகளுக்காக மருத்துவமனை யொன்றையும் கட்டினர். செவிலியர் சங்கம் ஒன்றையும் தொடங்கினர். ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்காக அரசு ஓய்வு நிதியையும் துவக்கி வைத்தார். கி.பி. 1857-ல் இந்தியாவில் சிப்பாய்க் கலகம் உண்டாயிற்று. அதனை அடக்க வேண்டி ஆங்கிலேய வீரர்கள் இந்தியச் சிப்பாய்களுடன் போரிட நேர்ந்தது. எனவே, எண்ணற்ற ஆங்கிலேய வீரர்கள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்தனர். அச்செய்தியறிந்த அம்மையார் தம் தோழியருடன் இந்தியா வந்து தொண்டாற்ற விரும்பினர். ஆனல், உடல் நலக் குறைவால் வர இயலாமல் போய்விட்டது. என்ருலும், இந்திய அதிகாரிகளுடன் கடிதம் மூலம் பல யோசனைகளைச் சொன்னர். இந்திய அரசின் பிரதிநிதியான மேயோ பிரபு அம்மையார் சொன்ன சுகாதார முறைகளை இந்தியாவில் பரப்பினர். அப்போது சென்னை ஆளுநராக இருந்த நேப்பியர்பிரபு அம்மையாரின் யோசனைப்படி இராணுவத்திலும், நாட்டிலும் சீர்திருத்தங்கள் பல செய்தார்.

''பிளாரென்ஸ் நைட்டிங்கேல் பல புத்தகங்களை எழுதினர். இந்தியச் சுகாதாரக் குறிப்புகள், செவிலியர் தொழிலின் முக்கியக் குறிப்புகள், மருத்துவமனை பற்றிய குறிப்புகள், இந்தியக் கிராமங்களின் சுகாதார முறைகளும் சீர்திருத்தங்களும், இந்தியமக்கள் முதலிய நூல்கள் பெருமளவில் விற்பனையாயின. இந்தியப் பிரமுகர்கள் பலருடன் கடிதத் தொடர்பு வைத்துக்கொண்டு தம் கொள்கைகளை விளக்கினர். அவர்களுள் தாதாபாய் நௌரோஜி, லால் மோகன் கோஸ் முக்கியமானவர்கள்.

''உலகச் செவிலியர் நிறுவனங்களின் நிறுவனரும், செவிலியர்க்கு அன்னையாரும், இந்திய மக்களின் பேரன்புக்குகந்தவரும், ஏழைமக்களின் காப்பாளரும், உலகம் போற்றும் உத்தமியருமான பிளாரென்ஸ் நைட்டிங்கேல் கி.பி. 1910-ஆம் ஆண்டு, தம் தொண்ணூருவது வயதில் இலண்டன் மாநகரில்காலமானர். அவர், தம்பி தங்கைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினர். உலகம் உள்ளளவும் அவர் புகழ் அழியாமல் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை'' என்று இளங்கோ சொல்லி முடித்தான். சிலையாக உட்கார்ந்து கொண்டிருந்த கண்ணகியையும், அவள் தோழிகளையும், ''இன்னும் என்ன? கதை முடிந்தது'' என்றதும் உற்சாகத்துடன் அவர்கள் எழுந்து சென்றனர்.



# ஆடலரசியின் அணிகலன்கள்!



இந்தப் பக்கத்திலுள்ள மாதவி சிலையின் தோற்றங்களை நன்கு கவனியுங்கள்.

மாதவி அணிந்த அணிகலன்கள் என்னென்ன தெரியுமா ?

தலையில் தலைக்கோலம், சீதேவி, வலம்புரிச்சங்கு, பூரப்பாளை, தென்பல்லி, வடபல்லி, காதுகளில் நீலக்குதம்பை, பின்புறம் தூக்கம், கழுத்தில் சவடி, சரப்பள்ளி, முத்தாரம், மார்பில் வீரச்சங்கிலி, நேர்ச்சங்கிலி, ஞாண், தோளில்



தோள்வளை, சூடகம், கை விரல்களில் வாளைப் பகுவாய் மோதிரம், மணி மோதிரம், மரகதத்தாள் செறி, கைகளில் செம்பொன்வளை, நவரத்தின வளை, சங்கவளை, பவழவளை, இடுப்பில் முப்பத்திரண்டு முத்து வடங்களிலான விரிசிகை என்ற மேகலை, துடையில் குறங்குச் செறி, காலில் பாதசலாம், சிலம்புப் பாடகம், சதங்கை, கால்சரி, கால்விரல்களில் மகர வாய் மோதிரம் முதலியன.

ஆடலரசி ஒருத்தி அணியும் அணிகலன்கள் முழுவதையும் இந்தச் சிற்பத்தில் காணலாம்.

பூம்புகாரில் அமையவிருக்கும் சிலப்பதிகாரக் கலைக் கூடத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த மாதவிச் சிற்பத்தின் உயரம் எட்டரை அடி.

இலக்கியத்திலுள்ள ஒரு கதா பாத்திரத்திற்கு, இந்த அளவில் தமிழ்நாட்டில் வேறு எங்கும் சிலை கிடையாது.

ஆடற்கலை அணங்கின் இந்தச் சிலையைக் கண்டு மயங்காதவர் யாருமில்லை.

பதினைந்தாயிரம் ரூபாய் விலை மதிப்புள்ள இந்தச் சிலையைப் போல் தமக்கு ஒன்று செய்து தரும்படிக் கேட்டுள்ளார் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதுவரக அதிகாரி.

மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைத் தொழில் பயிற்சிக்கூடத்தில் செய்யப்பட்டுள்ள இந்தச் சிலையைப் பற்றிப் பல்கேரியா நாட்டின் நாட்டியக் கலை நிபுணர் திரு கிரில் ஜெனிவ் சொன்னார், 'ஒரு நாட்டிய மங்கைக்கு உரிய அத்தனை இலக்கணத்தையும் இந்தச் சிற்பத்தில் காண்கிறேன்' என்று.

'இப்படிப் பார்த்தவர் அனைவரையும் பாராட்டச் செய்யும் இந்தச் சிலையைச் செய்த பெருமை—ஒருவருக்கு மட்டுமல்ல, இங்குள்ள சிற்பக் கலைஞர்களான எங்கள் அனைவரையும் சேரும்' என்கிறார் மாமல்லபுரம் சிற்பக்கலைத் தொழிற் பயிற்சிக் கூடத்தின் மேற்பார்வையாளர் கணபதி அவர்கள்.

ஆனால், நாம் ஒத்துக்கொள்ள முடியுமா ?

இந்தப் பெருமை, சிலையைச் செய்தவர்களுக்கு மட்டும்தானா?

தமிழ் மக்கள் அனைவருக்குமே உண்டு !

ஆமாம், அந்த அளவுக்கு மாமல்லபுரத்துக்கு வரும் வெளிநாட்டார் அனைவரும் இந்த மாதவி சிலையைக் கண்டு, சிற்பத் திறனைக் கண்டு நம்நாட்டையே பாராட்டுகிறார்கள்; புகழ்கிறார்கள்.

## மிகப் பெரிய விஞ்ஞான ஆய்வுக்கூடம்

பம்பாய்க்கு அருகில் உள்ள டிராம்பே என்னுமிடத்தில் 1957-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இது, அணுசக்தியை அமைதி நோக்கங்களுக்குப் பயன்படுத்துவது பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக, மத்திய அரசினால் நிறுவப்பட்டதாகும். இந்தியாவிலேயே மிகப் பெரிய விஞ்ஞான ஆய்வுக் கூடமான இந்த நிலையத்தில் சுமார் 9,800 பேர் பணி புரிகிறார்கள். இதில் 2,100 பேர் விஞ்ஞானிகளும், பொறியாளரும் ஆவர். சுமார் 4,200 பேர்கள் இங்குத் தொழில் நுட்பப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் வேனிற்கால விடுமுறையின் போது பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு அணுபௌதிகம், அணுமின் இரசாயன இயல் போன்ற துறைகளில் மறுபயிற்சி அளித்து வருகிறது. இந்த நிலையத்தைச் சேர்ந்த பயிற்சிப் பள்ளி, ஒவ்வோர் ஆண்டும் 150 இளம் விஞ்ஞான, பொறியியல் பட்டதாரிகளுக்குப் பௌதிகம், இரசாயனம், பொறியியல், மின்அணு இயல், உலோகவியல், உயிரியல் ஆகிய துறைகளில் பயிற்சி அளித்து வருகிறது.

பயிற்சிப் பள்ளி அளித்துவரும் பயிற்சிகளுடன் பாபா அணுசக்தி ஆய்வுக் கூடமும் சில சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. 1960-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட இப்பயிற்சித் திட்டத்தின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் 10 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

கதிரியக்க ஐஸடோப் மூலம் நோயாளிகளின் நோய்களைக் கண்டறிய விரும்பும் மருத்துவர்களின் நலனுக்காக, மருத்துவத் துறையில் கதிரியக்க ஐஸடோப்களின் உபயோகம் பற்றியும் ஆறு வார காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்பு ஒவ்வோர் ஆண்டும் 15 முதல் 20 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது.


17
ஒரு திட்டமா? இரண்டு திட்டமா? எப்படியாவது உங்களை யெல்லாம் பழிக்குப் பழி வாங்கணும்னு பல திட்டங்களைப் போட்டிருந்தாங்க
விளக்கமாச் சொல்லுங்களேன்
தம்பிகளா! உங்களை யெல்லாம் மேடையிலேற்றிக் கீழே விழச் செய்றது... ஓட்டப் பந்தயம், விளையாட்டுப் போட்டிகளின் போது அடிபடச் செய்வது....
வேலன், செல்வன், செந்தாமரை மூவரும் சேர்ந்து இதை யெல்லாம் செய்ய முடியுமா?
இங்கேதான் அவங்க பயங்கரத் திட்டமே இருக்கு. அந்த மூணு பேரும் எப்படியாவது உங்களிடம் பிளவை ஏற்படுத்தத் திட்டம் போட்டிருக்காங்க! ஒருத்தரை ஒருத்தர் தவறாப் புரிஞ்சிக்க வைச்சு, உங்களைத் தனியாகப் பிரிச்சுப் பழிதீர்க்கிறது!
இந்த வயசிலேயே இப்படி நினைக்க நாங்க என்ன தப்பு செய்தோம்?
அதுதான் தம்பி எனக்கும் புரியலே! இப்ப செந்திலும் அவங்க கூட சேர்ந்துட்டார்!
நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க, நாங்க கவனிச்சுக்கிறோம். இளங்கோ! நாம எல்லாரும் அண்ணு வீட்டுக்குப் போவோம்!
மாணிக்கம்! என்ன இங்கே நிக்கிறே?
அண்ணுவைப் பார்க்க வந்தேன். அண்ணு வீட்டிலே இல்லே! செல்வன், செந்தாமரை, வேலன் எல்லாம் அண்ணுவைத் தேடிக்கிட்டு வண்டியிலே வந்தாங்க... அண்ணு இல்லேன்னதும் போறாங்க...
அந்த மூணு பேரும்தான் அந்த வண்டியிலே போறாங்களா?
வேலன்தான் வண்டி ஓட்டிக்கிட்டு போறான். செல்வனோட அப்பா வாங்கியிருக்கிற புது வண்டியாம்
அதோ! செல்வனோட அப்பா முத்துவோட அப்பா அண்ணு மூணு பேரும் சேர்ந்து வர்றாங்க!!
அண்ணன் காட்டிய வழி!
கதை: நம்பியின் தம்பி
படம்: குமார்
தொடரும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## காஞ்சிபுரம் நகராட்சி

10–2–1972-ஆம் தேதி ஏல அறிக்கையில் கண்ட நிபந்தனைகட்கு உட்பட்டு ரயில்வே ரோட்டில் ராஜாஜி நகராட்சி சந்தைக்கு அருகில் 8′ × 8′ அளவில் வைக்கப்பட்டுள்ள நகராட்சிக்குச் சொந்தமான பங்கை இனசரி கட்டண விகித அடிப்படையில் 20–3–1972 முதல் அல்லது பங்கை உபயோகிக்கத் தகுதியாகும் தேதியிலிருந்து மறு உத்திரவு வரும் வரையில் பயன்படுத்திக் கொள்ளும் உரிமையை 17–3–1972 தேதி வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணிக்கு காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் அனைவரும் அறிய ஏலம் விடப்படும்.

பிற தகவல்களுக்கும் ஏலக்கட்டுப்பாட்டுகளுக்கும் நகராட்சி ஆணையருக்கு எழுதியோ அல்லது நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

த. ஆ. சிவசுப்ரமணியன், பி.ஏ.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
காஞ்சிபுரம்,
16—2—1972.
(த·34)

## ஏல அறிக்கை

### சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம்

சோளிங்கர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேலம் ஊராட்சியில் உள்ளசிறுபாசன ஏரியின் கரையிலும் உள்வாயிலும் வளர்ந்து முதிர்ந்திருக்கும் 512 வேலம் மரங்களையும் முள் வேலி மரங்களையும் வேலம் ஊராட்சி அலுவலகத்தில் 9–3–1972 வியாழக்கிழமை காலை 10 மணிக்குச் சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் கேட்க கட்டுத்தொகை ரூ. 100. ஏலம் சம்பந்தமாக மற்ற நிபந்தனைகளை சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கே. ராமதாஸ்,
ஆணையர்,
சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம்,
வடார்க்காடு மாவட்டம்.

(த.2)

## ஒப்பந்தப் புள்ளி

### அருப்புக்கோட்டை நகராட்சி

1972–73-ஆம் வருடத்திற்கு இந்த நகராட்சிக்கு பாதித்தியப்பட்ட ஆடு அடிக்கும் இடம், பேருந்து நிலையத்தில் உணவு விடுதி, வெற்றிலை பாக்குக் கடை, பழக்கடை, பூக்கடை, சேவுக்கடை, பிளாஸ்டிக் கடை, செருப்புக்கடை, ரொட்டிக்கடை, கைத்தறி ஜவுளி ஸ்டால், வளையல் கடை வைத்து நடத்துதல், பன்றி உரம் சேகரித்தல், நகராட்சி சிமெண்ட் போர்டுகளில் விளம்பரம் செய்தல், மரங்களின் பலனை அனுபவித்தல், நகராட்சி பெட்டிக்கடைகளை அனுபவித்தல் முதலிய உரிமைகளை 1972–ம் வருடம் மார்ச்சு மாதம் 4–ஆம் தேதி சனிக்கிழமை காலை 11மணிக்கும் மற்றும் ஒத்திப்போடப்படும் நாட்களிலும் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

மேலும் 1972–73–ஆம் வருடம் இந்த நகராட்சி மாடுகளுக்குத் தேவையான சோளநாத்து; பருத்தி விதை, புண்ணுக்கு, தவிடு, கலப்பு உணவு, லாடம், எழுதுபொருள் சாமான்கள், சுண்ணும்புத்தூள், அலுவலகத்திற்குத்தேவையான பாரங்கள் அச்சடித்தல் முதலியவைகளுக்குமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1972–ஆம் வருடம் மார்ச் மாதம் 8–ஆம் தேதி புதன் கிழமை மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். இதர விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

மு. புகழும்பெருமாள் பி.காம்.,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
அருப்புக்கோட்டை,
14—2—1972.
(த·36)

## ஏல விற்பனை

பழுதடைந்த நிலையிலுள்ளகீழ்க்கண்டஇயந்திரசாதனங்களும்உபயோகப்படுத்தக்கூடிய, ஆனால் பழைய ஸ்பேர் பார்ட்டுகளும், இரும்பு ஸ்க்ராப்புகளும் மேட்டூர் பொதுப்பணித் துறை மெயின் ஸ்டோரில் (மேட்டூர் பாருக் சினிமாக் கொட்டகைக்கு எதிரில்) 17–3–1972–ஆம் வெள்ளிக்கிழமை தேதி பகல் 11 மணிக்கு, அரசினர் விதி முறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனைச் செய்யப்படும்.

| | |
|---|---|
| (1) பார்க்கர் ஸ்டோன்கிரசர் 1951 மாடல் 4/6 டன் அவுட்புட். | 1 |
| (2) ஷிங்கேட் மிக்சர், 1950 மாடல் இங்கிலீஸ்மேக் .. | 1 |
| (3) முயர் ஹில் டம்பர் எம்.டி.எஸ். 2417. எம்.டி.எஸ். 2412/1949 மாடல். | 2 |
| (4) பஸ்டைப் வேன் ஸ்டுடிபேக்கர் 1948 மாடல் எம்.டி.எஸ். 2041. | 1 |
| (5) எம்.எஸ்.ஸ்டீல் கர்டர், ஆங்கிள் துண்டுகள் மற்றும் எம்.எஸ். ஸ்கிராப்புகள். | 1 குவியல் (லாட்). |
| (6) பழைய இரும்பு ஸ்பேர் பார்ட்டுகள் .. .. .. | 1 குவியல் (லாட்) |
| (7) பழைய இரும்பு ஸ்டீல் ஸ்கிராப்புகள் .. .. | 1 குவியல் (லாட்) |

ஏல சம்பந்தமாக விவரங்களை ஸ்டான்லி உபகோட்டம் மற்றும் அணைப் பிரிவு அலுவலகங்களில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் எல்லா வேலை நாட்களிலும் பார்வையிடலாம்.

யு.பி. ஸ்ரீ பாதராவ்,
நிருவாகப் பொறியாளர்,
மேட்டூர் கோட்டம்,
மேட்டூர் அணை.

## ஒப்பந்தப் புள்ளி

### செங்கோட்டை நகராட்சி
### திருநெல்வேலி மாவட்டம்

நகராட்சி ஆணையர் அவர்களால் தமது அலுவலகத்தில் 22-3-1972-ஆம் தேதி மாலை 4.00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | வேலையின் மதிப்புத் தொகை. | வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 வம்பளந்தான் சந்திப்பிலிருந்து நகர தெற்கு எல்லைவரை தார்தளம் போடுதல். | 30,000 | 750 |
| 2 2-ஆம் வார்டு பிள்ளையார் கோவில் தெருவில் கிழக்கிலிருந்து தார்தளம் வேலை. | 1,750 | 45 |
| 3 நான்கு ரத வீதியில் தார்தளம் போடுதல் .. | 1,500 | 38 |
| 4 5-ஆம் வார்டு பொதுக் கக்கூஸில் சீர்திருத்த வேலைகள். | 800 | 20 |

மேற்படி வேலைகளுக்கு அவற்றின் எதிரே குறிப்பிட்டிருக்கும் வைப்புத் தொகையைச் செலுத்திய ரசீதுடன் ஒப்பந்தம் கொடுக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்றுமாலை 4-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். மற்ற விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த·33)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால் வரும் மூன்று வருடத்திற்கு அய்யனாவரம் பேருந்து நிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகள் குத்தகைக்கு அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

1. கடை நம்பர் 2—பலவகைப் பொருள்கள் விற்றல்.
2. கடை நம்பர் 4—புத்தகங்கள் விற்பது (Book stall)

ஒப்பந்தத்திற்கான விதிகள் நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1.04 கட்டி எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 15–3–1972 மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் இந்த பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 12)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணசாலை சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளர், வரும் இரண்டு வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், "அசோக்நகர் பேருந்து நிலையம்" இடத்தில் சிற்றுண்டிசாலை 30′ × 20′ அளவுள்ள கடை ஒன்று குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறையில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணசாலை, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 15–3–1972 மாலை 3.15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1.04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 13)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை), திருச்சிராப்பள்ளி அவர்கள் சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 15–3–1972 அன்று பிற்பகல் 3.30 மணி (அலுவலக கடிகாரப்படி) வரையில் தமிழ்நாடு ஆளுநருக்காக அவருடைய சார்பில் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அதே தேதியன்று பிற்பகல் 3.35 மணிக்குத் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயர். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் புள்ளி. கிடைக்கும் விலாசம் |
|---|---|---|
| 1 குட்செட்சாலையில் உள்ள சாலை இருப்புப்பாதை சந்திப்பில் மேம்பாலம் கட்டும் வேலை (திருச்சி நகர எல்லைக்குள்). | 24,200 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப), திருச்சிராப்பள்ளி. |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.75 வீதம் தொகை செலுத்தி எழுத்துமூலம் வேண்டிக்கொள்வதன் மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை) திருச்சிராப்பள்ளிவிலாசத்திலிருந்து 1—3–1972—14–3–1972 வரையிலான வேலைநாட்களில் அலுவல் நேரங்களில் ஒப்பந்தப் புள்ளி நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெடியூல்கள், வரைபடங்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத்தொகைத் திருப்பித்தரப்படமாட்டாது.

மாறுதிய வடிவமைப்புக்கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலேகுறிப்பிட்டுள்ள கட்டுத்தொகை டிபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை கிராமப்பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். இது தவிர 10 வருட தேசீயத் தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப்பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெடியூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டுகளும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் கட்டுத்தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்குகாரண்டிகள் சமர்ப்பிக்கப்படும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

முன் பணவைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. ஸ்ரீதவப்பிரியம்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.கி.ப.),
திருச்சிராப்பள்ளி–1.

(த.14)

## ஏல விற்பனை

### வேளாண்மைத் துறை

### விளம்பரம் செய்யவேண்டிய பொருள்

கோயம்புத்தூர் மண் வள நிபுணர், மண் பரிசோதனை நிலையம், கோவை-3 அலுவலகத்தில் 9–3–1972 அன்று மாலை 3 மணி அளவில் கீழ்க்கண்ட கருவி பொது ஏலத்தில் விடப்படும்.

| பெயர். | எண்ணிக்கை. |
|---|---|
| Flame Photo-meter, Perkin Elmer, Model 146, Serial No. 35, USAMADE | ஒன்று. |

மேற்கூறிய பிளேம் போட்டோ மீட்டர் இவ்வலுவலக வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

அரசின் நலன் கருதி ஏலத்தை ரத்து செய்யவோ, ஒத்தி வைக்கவோ, உதவி மண் வள நிபுணருக்கு உரிமை உண்டு.

அ. கோபால்சாமி,
உதவி மண்வள நிபுணர்,
மண்பரிசோதனை நிலையம்,
கோவை-3.

(த. 10)

## மறு ஏல விளம்பரம்

### தேனி—அல்லி நகரம் நகராட்சி

### (மதுரை மாவட்டம்)

1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் 1973ஆம் வருடம் மார்ச்சு மாதம் 31ஆம் தேதியோடு முடிவடையும் 1 வருட காலத்திற்கு தேனி-அல்லி நகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி வாரச் சந்தை (மேற்குச் சந்தையில் தற்போது வடமேற்கு மூலைப்பக்கமுள்ள மூங்கில் கடைகள் நீங்களாக உள்ள பகுதி அனைத்திலும் சுங்கம் வசூல் செய்யும் பாத்தியதை)யையும், வண்டிப் பேட்டையையும் (சாராயக் கடை நீங்கலாக) நகராட்சி மன்ற அலுவலகத்தில் நகராட்சி தனி அதிகாரி அவர்களால் 1972ஆம் வருடம் மார்ச்சு மாதம் 14ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கும், ஷை நகராட்சிக்குச் சொந்தமான தேனி மேற்குச் சந்தை சரகத்திலுள்ள 78 ஸ்டால்களை 1–4–1972ஆம் தேதி முதல் 31–3–1973ஆம் தேதி முடிய 1 வருட காலத்திற்கு உபயோகித்துக் கொள்ள தேனி-அல்லி நகரம் நகராட்சி மன்ற தனி அதிகாரி அவர்களால் 1972ஆம் வருடம் மார்ச்சு மாதம் 15ஆம் தேதி புதன் கிழமை காலை 11 மணிக்குப் பகிரங்கமாக மறு ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் மற்றுமுள்ள இதர விவரங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகமது இப்ராஹிம் பி.ஏ.,
தனி அலுவலர்.

தேனி,
14–2–1972.
(த. 9)

## விளம்பரம்

### அருப்புக்கோட்டை நகராட்சி

(1920-ஆம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு ஜில்லா முனிசிபாலிட்டிகள் ஆக்ட் 78-வது பிரிவுப்படி விளம்பரம்).

திருத்தப்பட்ட 1920-ஆம் வருடத்திய தமிழ்நாடு ஜில்லா முனிசிபாலிடிகள் ஆக்ட் 78-வது பிரிவுப்படியும், அருப்புக்கோட்டை நகர் மன்றத்தின் 29—1—1972-ஆம் தேதிய 978 எண் தீர்மானப்படியும் கீழே குறிப்பிட்டிருக்கும் விவரப்படி கட்டட வரியில் தீப வரியை 1—4—1972-ஆம் தேதி முதலும் அதைத் தொடர்ந்தும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதை பொதுமக்கள் தகவலுக்கு இதனால் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது.

15—3—1972-ஆம் தேதி வரை ஆட்சேபனைகளை நகர்மன்றத்திற்கு எழுத்து மூலமாகத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். பிறகு இதே நகர் மன்றத்தால் வரியை நிர்ணயிக்கப்படும்.

தற்சமயமுள்ள வரி—

1. சொத்து வரி :—

(1) கட்டடங்களின்மேல் வரி பிரிவு 81 (1)—

| | சதவிகிதம். | |
|---|---|---|
| பொதுக் காரியத்துக்கு வரி.. | 9 | |
| தண்ணீர் வரி .. .. | 14 | |
| ஜலதாரை வரி .. .. | 2 | வருட வரி, கட்டடங்களின் |
| கக்கூசு வரி .. .. .. | 3 | வருட வாடகை மதிப் |
| கல்வி வரி .. .. .. | 4 | பின்பேரில் 36 சத |
| தீப வரி .. .. .. | 4 | விகிதம். |
| ஆக மொத்தம் .. | 36 | |

1—4—1972 முதல் உயர்த்த உத்தேசிக்கப்பட்ட வரி:—

1. சொத்து வரி—

(I) கட்டடங்களின் பேரில் பிரிவு 81 (1)—

| | சதவிகிதம். | |
|---|---|---|
| பொதுக் காரியத்திற்கு வரி | 9 | |
| தண்ணீர் வரி .. .. .. | 14 | |
| ஜலதாரை வரி .. .. .. | 2 | |
| கக்கூசு வரி .. .. .. | 3 | வருட வரி, கட்டடங் |
| கல்வி வரி .. .. .. | 4 | களின் வருட வாடகை |
| தீப வரி .. .. .. | 6 | மதிப்பின்பேரில் 38 சத விகிதம். |
| ஆக மொத்தம் .. | 38 | |

மு. புகழும் பெருமாள் பி.காம்.,

நகராட்சி அலுவலகம்,
அருப்புக்கோட்டை, ஆணையர்.
5—2—1972.
(த-35)

## ஒப்பந்தப் புள்ளி

### நாகர்கோயில் நகராட்சி

1972–73ஆம் ஆண்டிற்குக் கீழே குறிப்பிட்டிருப்பனவற்றிற்கு 1972ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4-30 மணி அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

1 பொருட்கள் வழங்குதல்: இந் நகராட்சிக்குத் தேவைப்படும் பெட்ரோல், டீசல் ஆயில், லைட் டீசல் ஆயில், இஞ்சின் ஆயில், பிரேக் ஆயில், மண்ணெண்ணெய், கிரீஸ், சிப்பி சுண்ணாம்பு, விறகு, கூடை, மாறு, அகப்பை, மண்வெட்டிகள், பிக்காசுகள், மரப் பீப்பாய்கள், (மூடியுடன்), வாளிகள், உர டிப்போவின் தேவைக்கான முள்ளுகள், உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் மாதிரிகள் அனுப்புவதற்கான கள்ளிப் பெட்டிகள், குப்பிகள், எழுது பொருள் சாமான்கள் முதலியன வழங்குதல்.

2 வேலைகள்—அச்சு, பைண்டிங் செய்தல், வண்டி வாகனுதிகளுக்கான நம்பர் பிளேட்டுகள் தயார் செய்து வழங்குதல்..

கூடுதல் விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டும், அல்லது ஆணையர் அவர்கட்கு விண்ணபித்தும் தெரிந்து கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்,
நாகர்கோவில், பி. தங்கவேலு,
11–2–1972. ஆணையர்.
(த. 5)

## ஏல விளம்பரம்

### மேலப்பாளையம் நகராட்சி

1–3–1972-ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கும் மறுபடியும் ஒத்திபோடும் தேதிகளிலும் 1972–73-ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான அடியிற்கண்ட இனங்களை அனுபவிக்கும் பாத்தியதையை இந்நகராட்சி அலுவலகத்தில் வைத்து ஆணையர் அவர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்றவர்களாலோ பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

| | | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | மீன்மார்க்கெட் .. .. .. .. .. .. | 300 |
| 2 | ஆடு அறுக்குமிடம் .... .. .. .. .. | 750 |
| 3 | காய்கறி மார்க்கெட் .. .. .. .. .. | 100 |
| 4 | முனிசிபல் ஏரியாவில் விளம்பரம் செய்ய .. .. | 25 |
| 5 | மாடு அறுக்குமிடம் .. .. .. .. .. | 300 |
| 6 | பலன்தரும் மரங்களின் மகசூல் .. .. .. | 25 |
| 7 | ஆட்டு மாமிசம் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு .. | 25 |
| 8 | மாட்டு மாமிசம் விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு .. | 25 |
| 9 | காய்கறி விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு .. .. | 15 |
| 10 | மீன், கருவாடு விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு .. | 15 |
| 11 | கடைகளுக்கு முன்பு தினசரி மார்க்கெட்டுகளில் காலி இடங்களில் வைத்து விற்கப்படும் பொருள்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் பாத்தியதை. | 50 |

மற்ற விவரங்கள் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

டி. கே. மாரப்பன் எம்.ஏ.,
ஆணையர்.

(த. 4)

## ஒப்பந்தப் புள்ளி

### கோயம்புத்தூர் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு அச்சு மற்றும் பைண்டிங் வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 24–3–1972-ஆம் தேதி மாலை 3.00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

நிபந்தனைகள் நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 1 (ஒன்று மட்டும்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த. 6)

## ஒப்பந்தப் புள்ளி

### குன்னூர் நகராட்சி

குன்னூர் நகராட்சி நகரசுத்தித்தொழிலாளிகளுக்கு உல்லன் கம்பளிகள் (சுமார் 145) விநியோகம் செய்யும்பொருட்டு ரூ. 100 முன்வைப்புத் தொகையுடன் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 9–3–1972 அன்று மாலை 4.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களை அலுவலகத்தில் விண்ணப்பித்துத் தெரிந்துகொள்ளலாம்.

என். வெங்கட்ராமன்,

நகராட்சி அலுவலகம், ஆணையர்.
குன்னூர்–2, 9–2–1972.
(த. 7)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

1972–73-ஆம் வருடத்திற்கு பொள்ளாச்சி நகராட்சி நாச்சிமுத்து கவுண்டர் பிரசவ விடுதிக்குத் தேவையான ரொட்டி விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15–3–1972-ஆம் தேதி மாலை 4–00 மணிவரை நகராட்சி ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் விதிகள் பேரிலோ அல்லது சுகாதார அதிகாரிக்கு விண்ணப்பித்தோ பெற்றுக் கொள்ளலாம்.

பொள்ளாச்சி, ஜி. ராஜாமன்னர்,
8–2–1972. ஆணையர் பொறுப்பு.
(த. 8)

## பொதுப் பணித்துறை

செங்கற்பட்டு வட ஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர்:—வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் அரசினர் மகளிர் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப் பணித்துறை மற்றும் அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காகச் செங்கற்பட்டு–வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 15–3–1972 மாலை 3–00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந் புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப் படும்.

ஒப்பந்த முறை—மொத்தத்தொகை.
முன் வைப்புத் தொகை—ரூ. 8,100.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 50.00 விற்பனை வரி 3½ சதவீதம்.
முடிக்கவேண்டிய காலம் ஒப்பந்தப் புள்ளி—பத்து மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெரு வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 28–2–1972 தேதி முதல் 13–3–1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 50.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது), கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் **PWD—Remittances, III-Other Remittances** என்ற தலைப்பின் கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம், என்பவர் கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

விற்பனை வரி ரூ. 1.50 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் **XII–Sales Tax (b) Receipts, under State Sales Tax Act—General Sales Tax** என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை., கருவூலச் சீட்டு வடிவிலோ தேசியச் சேமிப்புத் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப் படும் "ஷெடியூல்டு பாங்குகளின், டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து. கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடை முறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப் படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப் படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**கே. எஸ். இராமசுவாமி,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.
செங்கற்பட்டு–வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 27)

## பட்டுக்கோட்டை நகராட்சி

1972–73-ஆம் ஆண்டுக்கு அலுவலகத்திற்குத் தேவையான எழுது பொருள் சாமான்கள், துப்புரவு மாடுகளுக்குத் தேவையான வைக்கோல், தவிடு, பருத்தி விதை, கடலைப்புண்ணாக்கு, மற்றும் நீத்த சுண்ணாம்பு, தெரு விளக்குப் பராமரிப்புக்குத் தேவையான 4 அடி ஒற்றை டியூப், இரட்டை டியூப் லைட்டு பிட்டிங்ஸ் 2 அடி டியூப் லைட்டுகள், பிட்டிங்குகள் போக்கஸ் லைட்டுகள், மெர்க்குரி லைட்டுக்குத் தேவையான பல்பு, கண்டன்சர், சோக், முதலியனவும், மற்றும் தேவையான சகல உபரி பொருட்களும், தெரு விளக்குகளுக்குத் தேவையான சகல உபரி பொருட்களும் வழங்க, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 18—3—1972-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணி வரையில் நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற இதர அலுவலரால் பெற்றுக்கெள்ளப்பட்டு அன்று மாலை 4–30 மணிக்கு அப்போது ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவர்கள் கட்டுத் தொகை செலுத்தல், மற்றும் இதர நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தப் புள்ளி விளம்பரத்தை எழுதிக்கேட்டு அல்லது நேரில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கே. வெங்கடேஸ்வரன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
பட்டுக்கோட்டை,
14—2—1972.

(த. 37)

## அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவ மனை சென்னை-5

அரசினர் கஸ்தூர்பா காந்தி தாய்-சேய் மருத்துவமனை, சென்னை-5-க்கு 1—4—1972 முதல் 30—9—1972 வரை தேவையான மருந்து வகைகள், ஒப்பந்தமுறையில் வாங்குவதற்கான விலைப்பட்டியல், மூடி முத்திரையிடப்பட்ட நிலையில் மருத்துவமனைக் கண்காணிப்பாளர் அவர்களால் 21—3—1972 காலை 11–00 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப் படும்.

ஒப்பந்த நிபந்தனைகள், கொடுக்கப்படவேண்டிய மருந்துப் பட்டியல் ஆகியவற்றை மேற்படி மருத்துவமனையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதற்கான விலை ரூ. 5 "**XXIII Medical (g) Miscellaneous-Other receipts**" என்ற தலைப்பிலும், மற்றும் விற்பனை வரி 0·19 காசு "**XII Sales tax—Receipts under State Sales tax Act—General Sales tax**" என்ற தலைப்பிலுமாக ரிசர்வ் பாங்கிலோ அல்லது ஸ்டேட் பாங்கிலோ சலான்களை தாக்கல் செய்து, கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து, ஒப்பந்த நமூனாவைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப் படிவங்களைப் கோரும் விண்ணப்பத்துடன் தன் முகவரியுடன் கூடிய ரூ. 1·50 மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்ட நீண்ட சதுர உறையும் அனுப்பப்படவேண்டும்.

**ஏ. சீதா ரத்னா,**
கண்காணிப்பாளர்.

31—1—1972.

(த. 40)

## இராசிபுரம் நகராட்சி

கீழ்க்கண்ட பணியைச் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 வாரச் சந்தையின் மேற்கு நுழைவு வாயிலில கிழக்குப் பகுதியில் 5 கடைகள் கொண்ட கட்டடம் கட்டுதல். | 16,000 | 400 |
| 2 வாரச்சந்தையின் மேற்கு நுழைவு வாயிலின் மேற்குப் பகுதியில் 5 கடைகள் கொண்ட கட்டடம் கட்டுதல். | 16,000 | 400 |

**வெ. பாலசுப்ரமணியன்,**
ஆணையர்.

(த·41)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர்கள் சார்பிலும் கீழ்க் கண்ட வேலைக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தனி மேற் பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் அவர்களால் 9–3–1972 மாலை 4–00 மணி வரை பெற்றுக்கொள்ளப் படும்.

வேலையின் பெயர் :—காவிரியாற்றிலிருந்து பிரியும் எ. 16 பொன வாசல் கால்வாயை 0/0 கி.மீ. முதல் 16.145 கி.மீ. வரை புதுப்பித்தல்.

ஒப்பந்த வகை—கே. 2.
வேலைக்கான பிணைப்புத் தொகை—ரூ. 4,000.
ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 5.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையை அரசினர் கருவூலத்தில் **Pw III OR** என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், கால் வாய் புதுப்பிக்கும் கோட்டம், தஞ்சாவூர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி : 0.20.
விற்பனை வரியை அரசினர் கருவூலத்தில் **XII Sales Tax (b) Receipts under state Sales Tax—General Sales Tax** என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் தேதி 21–2–1972 முதல் 7–3–1972 வரை.

மற்ற விதி முறைகள் விரிவான ஒப்பந்த அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ளன.

அ. சேஷாத்திரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர்.

(த. 26)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

### மேட்டூர் மின்இயக்கத் திட்டம்

### மேட்டூர் அணை

மின்சார வாரியத்திற்கு உரிய பொருட்களை அனுப்புவதற்கும் அப்புறப் படுத்துவதற்கான குத்தகை விளம்பரம்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொருட்டு, மேட்டூர் மின்இயக்கத் திட்டம் மேற்பார்வைப் பொறியாளரால் 1972–73-ஆம் வருடத்திற்கு தமிழ்நாடு மின்வாரியத்தைச் சேர்ந்த மேட்டூர் மின்இயக்கத் திட்டத் திற்குச் சம்பந்தமான பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும் அனுப்பு வதற்குமான **(Clearing and booking Boards Meterials)** மூடி முத்திரையிடப்பட்ட குத்தகைச்சீட்டுகள் **(Sealed Tenders)** 25–3–1972 பிற்பகல் 2 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

குத்தகை நிபந்தனைகள் **(Tender conditions)** அட்டவணைகள் **(schedules)** ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) (திருப்பித் தரத்தக்கதல்ல) பண அஞ்சல் மூலமாகவோ, பணமாகவோ, தலைமைக் கணக்காயர் மேட்டூர் மின் இயக்கத் திட்டம், மேட்டூர் அணை-I அவர்களிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பண அஞ்சல் பெறும் கடைசி நாள் 21—3—1972. குத்தகை நிபந் தனை சீட்டுகளும், அட்டவணைகளும் சாதாரண அஞ்சல் சான்று மூலமாக அனுப்பப்படும். அவ்வாறு அனுப்பப்படும் அஞ்சல் தவறினால் மின்சார வாரியம் பொறுப்பேற்காது. குத்தகைச் சீட்டு மாற்றத்தக்கதல்ல கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு குத்தகை பிரதியையோ அல்லது எல்லா குத்தகை பிரதிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக் கவும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குத்தகைக்காரர்களிடையே பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவராவார். ரூ. 2,000 (ரூபாய் இரண்டு ஆயிரம் மட்டும்) கட்டுத் தொகையாகக் குத்தகைப் பிரதியுடன் செலுத்த வேண்டும். குத்தகை அட்டவணைகள் நேரில் வந்திருக்கும் குத்தகைதாரர்கள் முன்னிலையில் 25—3—1972-ஆம் தேதி பிற்பகல் 3·00 மணியளவில் திறக்கப்படும். குத்தகை நிபந்தனை சீட்டுகளும் அட்டவணைகளும் 28—2—1972-ஆம் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மேட்டூர் மின் இயக்கத்திட்டம்,
மேட்டூர் அணை.

(த. 25)

## ஒப்பந்தப் புள்ளி

### திருவண்ணாமலை நகராட்சி

1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி மாலை 4–00 மணி வரை நகரமன்ற அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது ஆணை பெற்றவரால் கீழ்க்கண்ட இனங்களுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

| வரிசை எண்ணும் ஒப்பந்த விவரமும். | ஒப்பந்தம் கோரும் காலம். | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 நகரமன்ற சுகாதார இலாகா சாக்கடை வண்டி, கக்கூஸ் வண்டிகளுக்கும், மாடுகள் சப்ளை செய்தல். | 1—4—1972 முதல் 31—3—1973 வரை. | 200 |
| 2 சுகாதார இலாகாவிற்குத் தேவையான சுண்ணாம்பு நீர் சப்ளை செய்தல். | ஷை | 50 |
| 3 நகரமன்ற மகப்பேறில்லத்திற்குத் தேவை யான பால், ரொட்டி முதலியவை சப்ளை செய்தல். | ஷை | 50 |
| 4 நகரமன்றத்திற்குத் தேவையான அச்சு வேலைகள் செய்து கொடுத்தல். | ஷை | 100 |

மேற்கொண்டு விவரம் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

டி. எ. பி. இராமகிருஷ்ணன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்.
7—2—1972.

(த. 38)

## ஏல விற்பனை

### வனத்துறை

6—3—1972-ஆம் தேதி காலை 10–00 மணியிலிருந்து இருட்டுப்பள்ளம் விற்பனைக் கிடங்கில் மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலராலோ கீழே காணும் தடி மரத்துண்டுகள் ஏலமிடப்படும்.

1. ஈட்டி .. .. 20—10·123 கன மீட்டர்.
2. வேங்கை .. 36—23·084 கன மீட்டர்.
3. வெண்தேக்கு 20—12·001 கன மீட்டர்.
4. தடசு .. 8—4·451 கன மீட்டர்.
5. பில்லமருது .. 7—4·774 கன மீட்டர்.
6. செலவாகை .. 9—6·006 கன மீட்டர்.

8—3—1972-ஆம் தேதி காலை 10–00 மணியிலிருந்து நவக்கரை விற்பனைக் கிடங்கில் மத்திய கோவை மாவட்ட அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற வேறு அலுவலராலோ கீழ்க் காணும் தடி மரத்துண்டுகள் ஏலமிடப்படும்.

1. ஈட்டி .. .. 17—8·317 கன மீட்டர்.
2. தேக்கு .. .. 47—36·134 கன மீட்டர்.
3. வேங்கை .. 52—33·613 கன மீட்டர்.
4. வெண்தேக்கு 64—48·320 கன மீட்டர்.
5. தடசு .. .. 16—10·645 கன மீட்டர்.
6. பில்லமருது .. 79—63·432 கன மீட்டர்.
7. முள்வேங்கை 2— 2·484 கன மீட்டர்.

விவரங்களுக்கு, மத்திய கோவை மாவட்ட வன அலுவலர், கோவை அல்லது வனச்சரக அலுவலர், போளாம்பட்டி சரகம், வழி ஆலாந்துறைக்கோ எழுதி அனுப்பவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர், மத்திய கோவை.

(த. 11)

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும், தமிழக பொதுப்பணித்துறை, தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 8—3—1972 மாலை 3·00 மணிவரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | ஒப்பந்த வகை. | வைப்புத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித்துறை செலுத்துத்தொகை என்ற தலைப்பில் செயற்பொறியாளர், காவேரி கோட்டம், தஞ்சாவூர் அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும். | விற்பனை வரி (அரசினர் கருவூலங்களில் -விற்பனைவரி XII பற்றுச்சீட்டு மாநில விற்பனைவரி சட்டத்தின்கீழ் பொது விற்பனைவரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். | ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள். |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | |
| **மன்னியாற்றில் உள்தளம் அமைத்தல்—** | | | | | |
| 1 0·80 கி.மீ.—1·40 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | 21—2—1972 |
| 2 1·40 கி.மீ.—2·00 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0.88 | ஷை |
| 3 2.00 கி.மீ.—2·60 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 4 2.60 கி.மீ.—3·20 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 5 3·20 கி.மீ.—3·80 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 6 3·80 கி.மீ.—4·40 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 7 4·40 கி.மீ.—5·00 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 8 5·00 கி.மீ.—5·60 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 9 5·60 கி.மீ.—6·20 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 10 6·20 கி.மீ.—6·80 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 11 6·80 கி.மீ.—7·40 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 12 7·40 கி.மீ.—8·00 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 13 8·00 கி.மீ.—8·60 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 14 8·60 கி.மீ.—9·20 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 15 9·20 கி.மீ.—9·80 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 16 9·80 கி.மீ.—10·40 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 17 10·40 கி.மீ.—11·00 கி.மீ. .. .. .. | கே-2 | 5,000 | 25 | 0·88 | ஷை |
| 18 11·00 கி.மீ.—11·20 கி.மீ. .. .. .. | கே-2 | 1,675 | 25 | 0·88 | ஷை |

மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம்,
தஞ்சாவூர்.

(த. 19)

## பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், அம்பத்தூர் பணிமனையில், "சிற்றுண்டிச்சாலை கடை ஒன்று" குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் 15—3—1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 15—3—1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1–04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக்கொண்டும் இந்தப் பணம் திருப்பித் தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 17

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—தஞ்சாவூர் மகளிர் கலைக் கல்லூரியின் பின்புற கட்டடத்தில் முதல் தளம் கட்டுதல்.

மேற்படி வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிக்கைகள் தமிழ் நாடு மாநில ஆளுநர் சார்பின் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 15—3—1972 மாலை 3-00 வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1 ஒப்பந்த வகை .. .. .. | மொத்தத் தொகை. |
| 2 பிணைப்பணம் .. .. .. | 6,000. |
| 3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் " பொ.ப.—செலுத்தத் தொகை—மற்றைய செலுத்தத் தொகை " எனும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும். | 30. |
| 4 விற்பனைவரி (அரசினர் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில்—" விற்பனைவரி, (பி) பற்றுச்சீட்டு—மாநில விற்பனை வரிச் சட்டத்தில் கீழ் பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்த செலுத்தப் பட வேண்டும். | 1·05. |
| 5 கால அளவு .. .. .. | எட்டு மாதங்கள். |
| 6 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள். | 24—2—1972. |
| 8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 27—2—1972 |
| 9 விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி, மற்றும் நேரம். | 10—3—1972 மாலை 3-30 மணி |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனைவரியையும் முறையே அரசின் கருவூலத்தில் : " XXXVII Public Works-State Revenue Miscellaneous " மற்றும் " XII Sales tax (b) receipts under the State Sales tax Act. General Sales tax" என்ற தலைப்புக்களின்கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த.21)

## பொதுப்பணித் துறை

மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம், தபால்பெட்டி எண். 55, திருச்சிராப்பள்ளி.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சி வட்டம், திருச்சி அவர்களால் திருச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1 வேலையின் பெயர் .. .. | கட்டடம் — திருச்சியிலுள்ள பெரியார் ஈ.வே.ரா. அரசினர் கலைக்கல்லூரியின் தற்போதுள்ள நிரந்தரக் கட்டடத்தில் மேல் இரண்டாவது தளம் அமைத்தல். |
| 2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி, மற்றும் நேரம். | 10—3—1972, மாலை 3·00 வரை. |
| 3 பிணைப்பொறுப்புத்தொகை .. | ரூ. 9,500 (ரூபாய் ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்). |
| 4 ஒப்பந்தமுறை .. .. .. | மொத்தத் தொகை. |
| 5 முடிக்க வேண்டிய காலம் .. | பத்து மாதங்கள். |
| 6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை .. | ரூ. 25 (ரூபாய் இருப்பத்தைந்து மட்டும்). |
| 7 விற்பனை வரி .. .. .. | ரூ. 0·88 (எண்பத்தெட்டு காசு மட்டும்). |

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட மேற்வைப் பொறியாளர்.

(த.22)

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை, தேசீய நெடுஞ்சாலை வட்டம், சென்னை

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 8—3—1972 மாலை 3 மணிவரைக் கீழ்க்கண்ட வேலைக்குப் பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலை விவரமும். | முன் வைப்புத் தொகை. |
|---|---|
| 1. தேசீய நெடுஞ்சாலை எண் 7-ல் கி. மீ. 132/8-லும் 134/2-லும் உள்ள பாலங்களை புதுப்பித்துக் கட்டுதல் (மைசூர் எல்லையிலிருந்து சேலம் கிருஷ்ணகிரி பகுதியில் கி.மீ. 119 முதல் 139 சேர்ந்த பகுதி 5). | ரூ. 9,270 |
| 2. தேசீய நெடுஞ்சாலை எண் 7-ல் கி.மீ. 84/8-லும் தேசீய நெடுஞ்சாலை எண். 7யையும் 46-யும் இணைக்கும் கிருஷ்ணகிரி துணை வழிச்சாலையில் கி·மீ. 1.6லும் உள்ள பாலங்களைப் புதுப்பித்துக் கட்டுதல் (மைசூர் எல்லையிலிருந்து சேலம், கிருஷ்ணகிரி பகுதியில் துணைப்பகுதி 3-ல் கி.மீ. 80–94) | 5,330 |

" ஒப்பந்தப் புள்ளிகள் 8–3–72, மாலை 3–15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைபடங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம் எண் 1 இரண்டாவது மாடி குறளக கட்டடம், சென்னை-1 அலுவலகத்தில் 1–3–1972 முதல் 7–3–1972 முடிய விற்பனை வரிவுட்பட ரூ. 51–75 கட்டி பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலை வட்டம் எண் 1, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் கோட்டப்பொறியாளர் (நெ) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம் எண்–1, பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

தி. மு. ஆ. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (நெ).

(த. 23)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, இராமநாதபுரம் வட்டம், மதுரை

ந.க. எண். 2908/71 வ.4/24—1—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநரின் சார்பில் பொதுப்பணித் துறை மதுரையில் உள்ள இராமநாதபுரம் பெருவட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த தாரர்களிடமிருந்தும் கீழே குறிப்பிட்டுள்ள தன்மைப் பாசனத்தில் உள்ள நில உரிமை பெற்றவர்களிடமிருந்தும் மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலகத்தில் 10—3—1972 தேதி மாலை 4 மணிவரையில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப் படும்.

| | |
|---|---|
| வேலையின் பெயர் .. .. .. | அருப்புக்கோட்டை தாலுகா, இருஞ்சிறை மராமத்து சிறப்பு வேலை. |
| ஒப்பந்தவகை .. .. .. | கே-2. |
| கட்டுத்தொகை .. .. .. | ரூ. 2,610 (ரூபாய் இரண்டாயிரத்து அறுநூற்றி பத்து.) |
| ஒப்பந்தப் புள்ளி விலை .. .. | 10—35. |
| வேலை முடிக்க வேண்டிய காலம் .. | 6 மாதங்கள். |

பெறப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் 10—3—1972 மாலை 4-30 மணிக்கு அலுவலகம் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் ஷியார் அலுவலகத்தில் திறக்கப்படும். மேற்கண்ட வேலைகளை எடுத்துச் செய்ய விரும்புவோர் ஒப்பந்தப் பத்திரத்திற்கான தொகைக்கு ரூ. 10-35-ஐ அரசாங்கக் கருவூலத்தில் 2 கருவூல ரசீதுடன் செலுத்தி மேற்படி ரசீதுடன் மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப் பணித்துறை), இராமநாதபுரம் வட்டம், மதுரை-1 என்ற விலாசத்துக்கு மனு செய்தால் ஷெ வேலைக்கான ஒப்பந்தப்பட்டியல் விதிகள் முதலியவைகள் ஒப்பந்தப் புள்ளியுடன் வழங்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் விலையான ரூ. 10 பி.டபிள்யூ.-111 ஓ.ஆர். என்ற கணக்குத்தலைப்பில், நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, விருதுநகர் கோட்டம், விருதுநகர் அவர்கள் கணக்கில் விற்பனை வரிக்காக ரூ. 0·35 காசை "12 விற்பனைவரி" என்ற கணக்குத் தலைப்பிலும் அரசாங்கக் கருவூலத்தில் தனித்தனியாகச் செலுத்தி ரசீதுகளை அனுப்ப வேண்டும். இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தர மாட்டாது.

ஒப்பந்தப் புள்ளி கொடுக்கும்பொழுது உறையின் மேல் வேலையின் பெயரும் கருவூலத்தின் ரசீது நம்பரும் எழுதப்பட்டிருக்க வேண்டும். உறைமூடி அரக்கு முத்திரை வைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வலுவலகத்தின் மூலம் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தில்தான் தொகை குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை இராமநாதபுரம் வட்டம், மதுரை அலுவலகத்தில் 1—3—1972 முதல் 8—3—1972 முடிய விற்பனைக்காக இருக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரி வரப்படும் மனுக்கள் இவ்வலுவலகத்திற்கு 8—3—1972 மாலை 5 மணிக்கு வந்து சேர வேண்டும். அதற்கு பின் வரும் மனுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளமாட்டா, அஞ்சல் மூலமாக ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது இழப்பிற்கோ இத்துறையினர் பொறுப்பாக மாட்டார்கள். இதுபோன்ற செயல் இத்துறையினர் பொறுப்பிற்கு அப்பாற்பட்டதாகும்,

இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்பும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கட்டுத்தொகையை அரசாங்கக் கருவூலத்தில் செலுத்திய கருவூல ரசீது மூலமாகவோ அல்லது ஷெடியூல்டு வங்கிகளின் மூலமாகவோ ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டுகள் தமிழ்நாடு மின்சார வாரியம் கடன்பத்திரங்கள் அரசாங்கச் சேமிப்புப் பத்திரங்கள் முதலியவைகள் அவைகள் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அவற்றில் 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறுவிதமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வேலையை எடுத்துச் செய்ய விரும்புவோர் நடப்பு வருடத்திக்கான வருமானவரி விற்பனைவரி முதலியவைகளின் அத்தாட்சியாக சான்றிதழ் கொடுக்க வேண்டும்.

ஆயக்கட்டுதார்கள் பங்கெடுத்துக் கொண்டால் டெபுடி.தாசில்தாருக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரியிடமிருந்து சொத்து உரிமை சர்டிபிக் கேட்டும் வாங்கி ஒப்பந்தப் புள்ளியுடன் இணைக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தாமலோ அல்லது இவ்வலுவலகத்தில் நிர்ணயிக்கப் பட்ட ஒப்பந்தப் புள்ளிப்பத்திரத்தில் தொகை குறிப்பிட்டுக்கொடுக்காமலோ இருந்தால் இவை மேற்பார்வைப் பொறியாளரால் நிராகரிக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் எக்காரண அறிவிப்பையும் உரிமைப்படுத்தாமல் எதாவது அல்லது வரப்பெற்ற அத்தனை ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைப் பெற்றுள்ளார்.

24—1—1972

சி. தேசிகசங்கர்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.18)

## பொதுப்பணித்துறை

செங்கற்பட்டு வடஆர்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

வேலையின் பெயர் :—கட்டடங்கள்—வடஆர்க்காடு மாவட்டம்—செய்யார் அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்த தாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப் பிட்ட பணிக்காக செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 10—3—1972 மாலை 3-00 மணிவரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

| | |
|---|---|
| ஒப்பந்தமுறை .. .. .. | மொத்தத் தொகை. |
| முன் வைப்புத் தொகை .. .. | ரூ. 2,900. |
| ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங்களுடன். | ரூ. 20.00 விற்பனைவரி 3½ சதவீதம். |
| முடிக்க வேண்டிய காலம் | நான்கு மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு—வடஆர்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் 23—2—1972 தேதி முதல் 8—3—1972 தேதிவரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலை தொகை ரூ. 20·00 (இது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P·W·D· Remittances III Other Remittances" என்ற தலைப்பின்கீழ் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனைவரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales tax (b) receipts, under State Sales tax Act General Sales' tax" என்ற தலைப்பின்கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்தச் சீட்டுக்களை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும், "ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை, கட்டடக் கோட்டம், காஞ்சிபுரம் அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும் மின்வாரியப் பத்திரங்களும் நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டடவேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை.

(த.20)

# தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்

"அக்ரோ இல்லம்" தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.

# ஜெடார் 2011 - ரைஸ் ஸ்பெஷல் - டிராக்டர்கள் உடனே விலைக்குக் கிடைக்கும்

25 குதிரை வேகம் - தண்ணீரால் குளிரக் கூடிய என்ஜின் - செக்கஸ்லோவேகியா நாட்டில் செய்தது. புகழ் பெற்றது. நம்பிக்கையானது.

தண்ணீர் புகாத பாகங்களுடன் சேற்றுழவுக்கும், நீண்ட கால உழைப்பிற்கும் ஏற்றவாறு தயாரிக்கப்பட்டது.

விலை சுமார் ரூ. 26,000 வரி (உட்பட)

## உடனே விண்ணப்பிக்கவும்



உங்கள் விவசாயத் தேவைக்குக் கீழ்க் கண்ட இடங்களிலுள்ள, இவ் வேளாண்மைக் கழகத்தின் பிராந்தியப் பொறியாளரை உடனே அணுகவும்.

1. சிறு காவேரிப்பாக்கம், காஞ்சிபுரம்.
2. தொழிற்குடியிருப்பு, அரியமங்கலம், திருச்சி-10.
3. தொழிற்பேட்டை, மதுரை-7.
4. பாக்ஸ் காம்பவுண்டு, சேலம்-1
5. 219, நேரு சாலை, விழுப்புரம்.

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில், ஒப்பந்ததாரர்களிடமிருந்து, எண். 17, பி.டி. இராசன்சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 8—3—1972 புதன் கிழமை மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அதே நாளில் 3·30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. வேலையின் பெயர் :—கோவில்பட்டி குடிநீர் திட்டம்—இரண்டாம் நிலை—7·25 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர் மட்ட உறுதிபெறு கற்காரை நீர்த்தாங்கியினை, மாவட்டம் ஒன்றின்கீழ் மட்டப் பகுதியில் கட்டுதல்.

முன்வைப்புத் தொகை—ரூ. 3,840

ஒப்பந்தவடிவம்—மொத்தத் தொகை.

கால அளவு—ஒன்பது மாதங்கள்.

படிவ விலை—ரூ. 10·35.

. வேலையின் பெயர் :—கோவில்பட்டி குடிநீர்த் திட்டம்—இரண்டாம் நிலை 7·25 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்மட்ட உறுதிபெறு கற்காரை நீர்த் தாங்கியினை மாவட்டம் இரண்டின்கீழ் மட்டப் பகுதியில் கட்டுதல்.

முன் வைப்புத் தொகை—ரூ. 3,820.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கால அளவு—ஒன்பது மாதங்கள்.

படிவ விலை—ரூ. 10·35.

முன் வைப்புத் தொகை, கருவூலச் செலுத்துச் சீட்டு பண உத்தரவுச் சீட்டு அல்லது ஏதாவது ஒரு தேசிய வங்கியின் உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒருவடிவில் கோவில்பட்டி, பொதுப்பணி சுகாதாரபொதுத் துறை நிருவாகப் பொறியாளர், பெறும்வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வரைபடங்கள், படிவங்கள், நிபந்தனைகள் வேண்டுவோர் கோவில்பட்டி, பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து 25 வக்கீல் தெரு, கோவில்பட்டி என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில், அதற்கான விலையினைச் செலுத்தி 6—3—1972 மாலை 5·00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

கடைசி தேதிக்குப் பின்வரும் ஒப்பந்தங்கள் கவனிக்கப்பட மாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
(பொதுச் சுகாதாரம்),
மதுரை-2.

(த. 44)

## உதகமண்டலம் நகராட்சி

1972-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் தேதி தொடக்கம் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய உதகமண்டலம் நகராட்சி ஸ்தாபனங்களுக்குத் தேவைப்படும் கீழ்க்கண்ட பொருள்களை விநியோகம் செய்யக் குறிக்கப்பட்ட அச்சாரத்தொகையுடன் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 10—3—1972-ஆம் தேதி மாலை 3·30 மணிவரை உதகமண்டலம் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளபடும்.

| வரிசை எண்ணும் குத்தகை விவரமும். | கட்டுத் தொகை. | ஷெட்யூல் விலை. | |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | காசு |
| 1 விறகு மற்றும் அடுப்புக்கரியும் விநியோகம் செய்ய. | 50·00 | 2 | 06 |
| 2 மோட்டார் ஆயில்களும் மற்றும் லூப்ரி கண்டுகளும் விநியோகம் செய்ய. | 100·00 | 8 | 24 |
| 3 நகரசுத்தி தொழிலாளிகளுக்கான பொருள்கள் விநியோகம் செய்ய. | 100·00 | 4 | 12 |
| 4 நகரசபை கண்காணிப்பு விடுதிக்கு உணவு விநியோகம் செய்ய (நகரசபை கண் காணிப்பில் இருக்கும்வரை). | 100·00 | 6 | 18 |
| 5 தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு உணவுப் பொருள்கள் விநியோகம் செய்ய. | 100·00 | 4 | 12 |
| 6 தாய்-சேய் நலவிடுதிக்கு உணவுப் பொருட் கள் விநியோகம் செய்ய. | 50·00 | 2 | 06 |
| 7 அச்சு வேலைகள் செய்ய .. .. | 100·00 | 4 | 12 |

ஆணையர்.

(த.43)

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

கீழ்க்கண்ட மெகானிகல் மற்றும் எலெகட்ரிகல் வேலைகளை மேற் கொள்வதற்காக, அனுமதி பெற்ற மெகானிகல் மற்றும் எலெக்ட்ரிகல் மொத்த வியாபாரிகள், பழுதுபார்ப்போர் ஆகியோரிடமிருந்து, எழுது பொருள் மற்றும் அச்சக இயக்குநர், சென்னை-1 அவர்களிடம் பதிவு செய்து கொள்வதற்காக மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. மெகானிகல்.—பலவகைப்பட்ட தாதுப்பொருட்கள் (Allois) ஆர்க் (Arc) மற்றும் கீர் (Gear) பினியன் சக்கரம் ஆகியவைகளை ஆர்க மற்றும் கேஸ் வெல்டிங் செய்தல், அச்சகப் பகுதிகளில் (Units) ரேக் உற்பத்தி செய்தல் மற்றும் சாதாரண பழுது பார்க்கும் வேலை.

2. எலெக்ரிகல்:—ஏ. சி., டி.சி. மோட்டார்கள் இம்ப்ரஸ்ஸன், மற்றும் பிரேக் மேக்னட்டிங் காயில்கள், மற்றும் ஸ்டாட்டர் காயில்கள் மற்றும் இவை போன்றவைகளை வைண்டிங் ரீவைண்டிங் செய்தல், அச்சு இயந்திரம், வைண்டிங் இயந்திரம், அச்சுக் கோக்கும் இயந்திரம் மற்றும் இவை தொடர்பான சாதனங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் பொது வேலைகளும்.

3. மனுதாரர்களின் விண்ணப்பங்கள் 25—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

ஜி. ரங்காராவ்,
இயக்குநர்.

(த. 45)

## மாநிலப் போக்குவரத்துத் துறை, சென்னை-2

### ''ஏலம் விடுபவர்கள் நியமனம்''

இத்துறையில், சென்னை போக்குவரத்துப் பணிமனை, திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் 1—4—1972 முதல் 31—3—1973 முடிய உள்ள காலத்திற்குப் பழைய மற்றும் உபயோக மற்ற வண்டிகள் (Condemned), போக்குவரத்திற் குதவாது தேங்கிக் கிடப்பவை, மற்றவைகளுக்கு ஏலம் நடத்துவதற்கு, அங்கீகாரம் பெற்ற ஏலம் விடுபவர்களை நியமனத்திற்கு, மூடி முத்திரை யிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துத் துறை இயக்குநர், சென்னை-2 அவர்களால், 15-3-1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனை நமூனுக்கள், தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு மாநிலப் போக்கு வரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களிடம் அலுவலக நேரத்தில் கட்டணமின்றிப் பெறலாம்.

இயக்குநர்,
மாநிலப் போக்குவரத்துத் துறை,
சென்னை-2.

(த.ஆர்.3)

## பொதுப்பணித் துறை
### காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில், தமிழ்நாடு பொதுப்பணித் துறை காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 9–3–1972-ஆம் ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்காணும் வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

| பிரிவு எண்ணும், வேலையின் பெயர் விவரமும். | பிணைத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. | விற்பனை வரி. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. தஞ்சை மாவட்டம், திருத்துறைப் பூண்டி தாலுக்காவிலுள்ள ஈர வாய்க்கால் வடிகாலைச் சீர்திருத்துதல். | 2,450 | 10 | 0.35 |

விதிமுறைகள்—

1. ஒப்பந்தப் பத்திரங்கள் 25–2–1972-ஆம் தேதியிலிருந்து தஞ்சாவூர் காவிரி வளர்ச்சிப் பணி வட்ட தனி மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் கிடைக்கும்.

2. பிணைத் தொகை திருத்துறைப்பூண்டி, திட்ட ஆய்வுக் கோட்டச் செயற் பொறியாளர் அவர்கள் கணக்கில் சேரும்படி அரசாங்கக் கருவூலத்தில் "ரெவினியூ டிபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொதுப் பணித் துறை மற்றைய வரவினங்கள்" என்ற தலைப்பில் திருத்துறைப்பூண்டி திட்ட ஆய்வுக் கோட்ட செயற் பொறியாளர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் "XII விற்பனை வரி—பி வரவினங்கள் மாநில விற்பனை வரிச் சட்டம்—பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் 7–3–1972-ஆம் தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரது நேர் உதவியாளர் காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப் படவேண்டும்.

அ. சேஷாத்ரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப்பணி வட்டம், தஞ்சாவூர்.

(த-ஆர்.4)

---

## நில நீர் இயக்குநர் அலுவலகம்

இயக்குநரின் குறுகியகால ஒப்பந்தப் புள்ளி அறிக்கை எண் 15, XXII/M2/72, dt. 24—1—72.

வேலையின் பெயர் :—மரையிடப்படாத, இரும்புக் குழாய்கள்—வழங்குதல்—

(1) 8 அங்/200 மி.மீ., விட்டம்—500 மீட்டர்.
(2) 10 அங்./250 மி.மீ., விட்டம்—400 மீட்டர்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கண்ட அலுவலகத்தில் 22–3–1972 அன்று மாலை 3 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநரால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில், மாலை 3–30 மணிக்கு அவ்வமயம் அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்:

(1) முன் வைப்புத் தொகை :—ரூ. 5,000.
(2) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை ரூ. 10. விற்பனை வரி:—ரூ. 0.40 காசு.
(3) வேலையை முடிக்க வேண்டிய காலம் :—மூன்று மாதங்கள்.
(4) ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்குறித்த அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம் :—1–2–1972 முதல் 20–3–1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பியளிக்க இயலாதது) அரசாங்கக் கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில், "Public works remittances III other remittances to the Credit of Hydrogeologist. Ground water Division, Thanjavur," அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரித்தொகையானது அதே சலானில், "XII Sales Tax (b) receipts under State Sales Tax Act., General Sales Tax" என்ற தலைப்பில் அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ செலுத்தப்பட வேண்டும். மேற்குறித்த செலவினைக் கொடுத்த பின்புதான், ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். வேறு எந்த விதமான தொகையளிப்பும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

சா. பஞ்சநதம்,
நிலநீர் இயக்குநர்.

நிலநீர் இயக்குநர் அலுவலகம்,
10—எ, தண்டபாணி தெரு,
சென்னை—17.

(த.ஆர்.1)

---

## பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 8–3–1972 மாலை 3–00 மணி வரை பெற்று கொள்ளப்படும்.

| | கும்பகோணம் ஆண்கள் கலைக்கல்லூரியில். | | |
|---|---|---|---|
| | பௌதிகத் துறை பட்ட மேல்படிப்புக்கு கட்டடம் கட்டுதல். | இரசாயன துறை பட்ட மேல்படிப்புக்கு கட்டடம் கட்டுதல். | கலைத்துறை பட்ட மேல் படிப்புக்கு கட்டடம் கட்டுதல். |
| 1 ஒப்பந்தத் தொகை .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை |
| 2 பிணைப் பணம் (செலுத்துச்சீட்டு மூலம் பெற்றுக்கொள்ளப்படும்). | ரூ. 5.300 | ரூ. 6,500 | ரூ. 6,50 |
| 3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசினர் கருவூலத்தில் பொ. ப. து. செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும். | ரூ. 30·00 | ரூ 30·00 | ரூ. 30·00 |
| 4 விற்பனை வரி அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | ரூ. 1·05 | ரூ. 1·05 | ரூ. 1 |
| 5 கால அளவு .. .. | 12 மாதங்கள். | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |
| 6 ஒப்பந்தப்பத்திரம் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். | 21–2–1972 | 21–2–1972 | 1–2–1 72 |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த-ஆர்.2)

## மர ஏல விற்பனை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் கீழ்க்கண்ட மரக்கிடங்குகளில் நீலகிரி வடக்குக்கோட்ட மாவட்ட வன அலுவலரோலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 9–00 மணிக்கு ஆரம்பமாகும்.

இடம்:—மத்திய மரக்கிடங்கு, கார்குடி.

பாதை ஓரமுள்ள மரக்கிடங்கு, தொரப்பள்ளி,
நாள்—13–3–1972 காலை 9–00 மணிக்கு.
மரங்களின் அளவு.
(தோராயமாக)

கனமீட்டர்.

| | | |
|---|---|---|
| 1 | தேக்கு | 300 |
| 2 | மத்தி | 200 |
| 3 | தடசு | 6 |
| 4 | ஹொன்னே | 41 |
| 5 | நந்தி | 10 |

இடம் : மத்திய மரக்கிடங்கு,சேரம்பாடி. நாள்—22–3–1972 காலை 9–00 மணிக்கு.

| | | மரங்களின் அளவு (தோராயமாக) கனமீட்டர். |
|---|---|---|
| 1 | அயினி | 190 |
| 2 | வெண்தேக்கு | 225 |
| 3 | ஈட்டி | 20 |
| 4 | ரெட்சீடர் | 40 |
| 5 | நாவல் | 50 |
| 6 | வேங்கை | 12 |
| 7 | வாகை | 15 |

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்குக்கோட்ட வன அலுவலருக்கோ அல்லது வனச்சரக அலுவலர், முதுமலை அவர்களுக்கோ அல்லது வனச்சரக அலுவலர் சேரம்பாடி அவர்களுக்கோ எழுதிப்பெறவும்.

என். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்.

(த.39)

## ஏல விற்பனை

### எழுது பொருள் மற்றும் அச்சுத் துறை

ஷீட் இரும்பு, காலி டிரம்கள்போன்ற ஒதுக்கப்பட்ட (Condemned) பயன்படுத்த முடியாத ஸ்டோர் சாமான்கள் 9—3—1972 காலை 11-30 மணி அளவில் அரசு அச்சகம் மின்ட் கட்டடம், சென்னை-1 அலுவலகத்தில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மற்ற விவரங்கள், ஏல அறிவிப்பு நமூனாக்கள் பெற, எழுதுபொருள் மற்றும் அச்சக இயக்குநர், அரசு அச்சகம், சென்னை–1ல் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்.

(த.16)

## ஒப்பந்தப் புள்ளி

### காவல் துறை

1972–73 ஆம் ஆண்டிற்கு, சென்னை நகரக் காவலர் (Police) களுக்குத் தேவையான துணிகள், கருவிகள், குதிரைகளுக்குத் தேவையான உணவு ஆகிய பொருட்கள் மற்றவைகள் வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்.

(1) 1—4—1972 முதல், மார்ச்சு 1973 வரை சென்னை நகரக் காவலர்களுக்குத் தேவையான துணிகள், கருவிகள், குதிரைகளுக்குத் தேவையான உணவு ஆகிய பொருட்கள் மற்றவைகள் வழங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

(2) ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவருக்கு 16—3—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு பெயரைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

(3) ஒப்பந்தப் பாரங்கள் மற்றும் தேவையான பொருட்கள் பற்றிய விவரக்குறிப்பீடுகள், காவல்துறை ஆணையர், (Stores Section) எழும்பூர், சென்னை-8, அவர் தம் அலுவலகத்தில் ரூ. 2-00 (இரண்டு மட்டும்) வழக்கமான விற்பனை வரியுடன் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எந்தச் சூழ்நிலையிலும் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

சி. தங்கையன்,

நகரக் காவலர் அலுவலகம்,
சென்னை-8.
காவலர் உதவி ஆணையர்,
தலைமையகம்.

(த.31)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிசை மாற்று வாரியம்

நிருவாகப் பொறியாளர் அலுவலகம், குடிசை மாற்று வாரியம், கோட்டம் VI, பட்டினப்பாக்கம் (Foreshore Estate) சென்னை–28.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும். கீழே குறிப்பிடப்பட்ட வேலைக்காக, குடிசை மாற்று வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து வேலையின் பெயரும் ஒப்பந்தப் புள்ளி அனுப்புகிறவரின் பெயரும் உறைமீது எழுதப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிருவாகப்பொறியாளர், குடிசை மாற்றுவாரியம், கோட்டம், VI சென்னை–28, அவர்களால் 8-3-1972 மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதேநாள் மாலை 3–05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில், நிருவாகப் பொறியாளர், கோட்டம் அவர்களால் திறக்கப்படும்.

வேலையின் பெயர் எல்லீஸ்புரத்தில் குடிசை மேம்பாட்டின் கீழ் 4 அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல், மாதிரி எண் 16/71; முறையில் பிளாக் ஒன்றில் குடியிருப்புகள் கட்டுதல்.
வேலையின் சுமார் மதிப்பு:—1,32,000.
ஒப்பந்த வடிவம்:—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை:—1,980.
ஒப்பந்தப் புள்ளி பத்திரங்கள் விலை மற்றும் விற்பனை வரி:—ரூ. 15.00 விலை. ரூ. 0.53 விற்பனை வரி ரூ. 0·01 சர்சார்ஜ். மொத்தம் ரூ. 15,54

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் IV அவர் தம் அலுவலகத்தில் 1—3—1972 முதல் 7—3—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணி வரை, ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தின் விலை, விற்பனைவரி செலுத்தப்பட்ட செல்லுச் சீட்டைக்கொடுத்துப் பெறலாம்.

வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட, குறிப்பிடப்பட்ட பாரத்திலேயே ஒப்பந்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக அல்லது தவறி விடுகின்ற ஒப்பந்தங்களுக்கு வாரியம் பொறுப்பாளியல்ல.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் காரணம் கூறாமல் நிராகரிக்க அதிகாரம் உண்டு.

நிருவாகப் பொறியாளர்,
கோட்டம் எண் : VI
குடிசை மாற்று வாரியம்.

(த.32)

## அறிவிப்பு

### இந்திய மருத்துவ மத்தியக் கழகம் பாளையங்கோட்டை

ஆர்.ஐ.எம்.பி. பதவிக்காக விண்ணப்பப் பாரங்கள் வழங்குவது 31—12—1971 உடன் முடித்துவிட்டபடியால் அதற்குள் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் பாரங்களைப் பூர்த்தி செய்து 31—3—1972-க்குள் தலைவர், இந்திய மருத்துவ மத்தியக் கழகம் பாளையங்கோட்டை அவர்களுக்கு அனுப்பிவைக்கவும். அதற்குப் பின் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

டாக்டர் பொன். குருசிரோன்மணி,
பி.எ., ஜி.ஷி.ஐ.எம்.,
தலைவர், இந்திய மருத்துவ
மத்தியக்கழகம்,
பாளையங்கோட்டை.

(த. 1)

## தேர்வு

### தொழில் நுட்பக் கல்வித் துறை, கிண்டி, சென்னை-25

மின்சார மேற்பார்வையாளர்கள் தகுதிச் சான்றிதழ் படிப்புத் தேர்வு மே 1972.

1972 மே மாதத்தில் நடைபெறும் மின்சார மேற்பார்வையாளர்கள் தகுதிச் சான்றிதழ் படிப்புத் தேர்வில் சேருவதற்கான மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்தத் தேர்வுகளில் சேருவதற்கான குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் பாரம், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் மற்றவைகள் அடங்கிய நமூனுக்கள், இந்த அலுவலகத்தில், 23—2—1972 முதல், கடிதம் எழுதி தன் விலாசமிட்ட உறையில் (22 செ. மீ. × 9½ செ. மீ.) 0·50 காசு அஞ்சல் வில்லைகள் 0.05 காசு அகதிகள் நிவாரண வில்லை ஒட்டப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சேர்வதற்கான தகுதி.

1. எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்க வேண்டும் அல்லது மின்சாரப் பொறியியல் துறையில் 5 ஆண்டு செய்முறைப் பயிற்சி அனுபவம் இருக்க வேண்டும்.

2. பி. ஈ. (சிவில் மற்றும் மெகானிகல்) எல். சி. ஈ. மற்றும் எல்.எம்.ஈ. டிப்ளமா பெற்றிருப்பவர்கள், , மின்சாரப் பொறியியல் துறையில் 2 ஆண்டு செய்முறைப்பயிற்சி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. இந்த அலுவலகத்தில் மனுக்கள் பெறுவதற்கான கடைசி நாள் 23—3—1972 (அபராதமின்றி) அபராதத் தொகை ரூ. 5 செலுத்திப் பெறக் கடைசி நாள் : 6—4—1972.

முழுவிவரங்கள், விரும்புகின்ற மனுதாரர்கள் விளக்கமாக அறிவிப்பு 9—2—1972 தேதிய தமிழ்நாடு அரசு கெஜட் வெளியீட்டில் இந்தத் துறையின் பாகம் 3-ல் தெரிந்து கொள்ளலாம். அரசு கிளை அச்சகம், அண்ணாசாலை, சென்னை-2ல் தொகையைச் செலுத்தி நமூனுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
தேர்வாளர் குழு.

(த·30)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்

(தமிழக அரசு மேற்கொண்டுள்ளது)

யூனிட் :—தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் (வழி)
(வழி) இராஜபாளையம்.

அறிவிப்பு எண். 3973 சி.டபிள்யூ 71.

தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலைக்கு "காம்பவுண்ட் சுவர் கட்டுதல்" வேலைக்காக மாநில மத்திய அரசுத்துறைகளில் பதிவு செய்துள்ள முதல் அல்லது இரண்டாம் வகுப்பு ஒப்பந்ததாரரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், 24—3—1972 மாலை 4·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| சுமார் மதிப்பீட்டுத் தொகை .. | ரூ. 2·15 இலட்சம். |
| ஒப்பந்தவகை .. .. .. .. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. .. .. | ஒப்பந்தத் தொகையில் 2½ சதவிகிதம். |
| வேலை முடிக்க வேண்டிய காலம் .. | 4 மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலங்குளம், (வழி) ராஜபாளையம், அவர்களிடம்,6—3—1972 முதல் 22—3—1972வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 9-30 மணி முதல் மாலை 4·00 மணிவரை, செட் ஒன்றுக்கு ரூ. 10·35 காசு செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். தொகை திருப்பித்தரப் படமாட்டாது.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், (வழி) ராஜபாளையம்.

(த. 46)

## ஒப்பந்தப் புள்ளி

### மாவட்டக் கால்நடைப் பண்ணை

தமிழ்நாடு ஆளுநருக்காக ஒசூர் கால் நடைப்பண்ணை குஞ்சு பொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் 16—3—1972 அன்று காலை 11–00 மணி வரையில் மேற்படி பண்ணைக்கு 1972–73 ஆகிய ஆண்டிற்குத் தேவையான சுண்ணும்பு (நிலங்களுக்குப் போட) வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. 16—3—1972 அன்று காலை 11–00 மணிக்கு மேல் குஞ்சுபொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களால் திறக்கப்படும்.

நிபந்தனை முதலானவைகளைக் குஞ்சுபொரிப்பு அலுவலர் உடன் கண்காணிப்பாளர் அவர்களுக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

சோ. சேதுராமன்,
குஞ்சுபொரிப்பு அலுவலருடன்
கண்காணிப்பாளர், மாவட்ட கால்நடைப் பண்ணை,
ஒசூர், தர்மபுரி மாவட்டம்.

(த. 24)

## ஏல விற்பனை

### கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 15—3—1972 அன்று பிற்பகல் 2 மணிக்கு இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி மற்றும் முதல்வர், கால்நடை மருத்துவக் கல்லூரி அவர்களால் M.S.P. 6932 என்ற "ஆம்புலன்ஸ் வேன்" பொது ஏலத்தில் விற்கப்படும். அந்த வாகனத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 10–30 மணி முதல் மாலை 5–00 மணிக்குள் சென்னை கால் நடை மருத்துவக் கல்லூரியில் பார்வையிடலாம். ஏலத்துக்குரிய நிபந்தனைகளை அடியில் கையொப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வை. இரத்தினசபாபதி,
இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வி
மற்றும் ஆராய்ச்சி மற்றும் முதல்வர், கால்நடை
மருத்துவக்கல்லூரி,

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி
வேப்பேரி, சென்னை–7,
11—2—1972

(த. 42)

## ஒப்பந்தப் புள்ளி

### ஒப்பந்தப் புள்ளி வனப் பொறியாளர் கோட்டம்.

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, "வனப்பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"சித்தேரி-நொச்சிக்குட்டை சாலை அமைத்தல் 9-04 கி. மீ. அரூர் வனச்சரகம்–தருமபுரி வனக்கோட்டம்".

அச்சாரம் (இ.எம்.டி.) ரூ. 2,700 ஒப்பந்தப்புள்ளி பெற்றுக்கொள்ளவும் திறக்கவும் கடைசி நாள் 6–3–1972 நேரம் முறையே மாலை 3–00 மணி 3·05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப்பொறியாளர், 1-வ ராயல் ரோடு, கண்டோன்மெண்ட, திருச்சி–1" என்ற முகவரிலிருந்து ரூ. 1·04 செலுத்தி 21–2–1972 முதல் 4–3–1972 வரை அலுவலக வேலை நேரங்களில் எல்லா வேலை நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சண்முகசுந்தரம்,
வனப்பொறியாளர்.

10–2–1972.
(த· 29)

## எண்ணூர் அனல் மின் திட்டம்

குறிப்பு எண் AEP 83 to 095.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம் எண்ணூர் அனல் மின்திட்டம் குறிப்பு எண் AEP 83 to 095 Supply of paints etc எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 3–30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4–00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்த தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு குறிப்பு எண் விவரம் முன்பணம் முதலியன கீழேதரப்பட்டுள்ளன.

| *Serial number.* | *Description.* | *Specn. number.* | *E.M.D.* | *Cost of tender set.* | *Due date.* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | Rs. | Rs. | |
| 1 | Acid, alkali, Water and heat resistant black paint to IS 158. | AEP 83 | 1,200 | 5 | 3rd March 1972 |
| 2 | (*a*) Red Oxide Zinc Chromate paint to IS 2074. (*b*) Aluminium paint to IS 2339. | AEP 84 | 1,200 | 5 | 3rd March 1972. |
| 3 | Self tapping screws panhead 3/¾ in long. | AEP 85 | 1,200 | 5 | 10th March 1972. |
| 4 | G.I. Hex. Wire netting 3/¾ in × 24 SWG. | AEP 86 | 1,200 | 5 | 24th March 1972. |
| 5 | (*a*) G.I. Hex, Wire netting 3/4 in × 24 SWG. (*b*) G.I. Wire mesh to ISI 1568. (*c*) 22 g. Binding Wire . (*d*) 12 g. Binding Wire .. | AEP 87 | 1,000 | 5 | 17th March 1972. |
| 6 | M.S. Bolt and nuts 5000 kg. | AEP 88 | 600 | 5 | 10th March 1972 |
| 7 | Spares for Standard 20 Vehicles. | AEP 89 | 1,200 | 5 | 3rd Maorh 1972. |
| 8 | Spares for Bedford Vehicles. | AEP 90 | 1,200 | 5 | 10th March 1972. |
| 9 | Spares for Willys Jeep Model CJBB. | AEP 91 | 1,200 | 5 | 17th March 1972. |
| 10 | Spares for Leyland Comet Vehicles. | AEP 92 | 1,200 | 5 | 24th March 1972. |
| 11 | Spare for Fargo Lorries .. | AEP 93 | 1,200 | 5 | 17th March 1972. |
| 12 | Spares for Benz Lorries. .. | AEP 94 | 1,200 | 5 | 24th March 1972. |
| 13 | M.S. Black tubes 40 m.m. dia. light Series. | AEP 95 | 750 | 5 | 3rd March 1972. |

3. ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ் கையொப்பமிட்டவரிடமிருந்து 14—2—1972 தேதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. துறையினரைச் சார்ந்த நமூனக்களில்லாத ஒப்பந்தப் புள்ளிகளும் இறுதித் தேதிக்கும் நேரத்திற்கும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணாமல்போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சாரவாரியம் பொறுப்பல்ல ; ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவையல்ல.

தொலைபேசி எண் : 59556

தந்தி ENTERMAL

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல்மின் திட்டம் எண்ணூர்,
சென்னை-57.

(த. 28)

## பல்லவா போக்குவரத்துக் கழகம்

### அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால், வரும் மூன்று வருடத்திற்கு, பல்லவா போக்குவரத்துக் கழகம், அய்யனாவரம் பணிமனையில், கடை நம்பர் 3-ஐ வெற்றிலைப் பாக்கு வியாபாரம் செய்வதற்காக, குத்தகைக்கு விடப்படும். முத்திரையிடப்பட்ட உறைகளில் கட்டடப் பொறியாளர், போக்குவரத்து இல்லம், சென்னை-2, ஒப்பந்தப் புள்ளிகள் 20-3-1972 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 20-3-1972 மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் விதிமுறைகள் கட்டடப்பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்பித்தரப்படமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த.59)

## பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2

பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணாசாலை, சென்னை-2-ல் உள்ள போக்குவரத்து இல்லத்தில் மேலாளர் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் மாலை 3-00 மணிவரை, கீழே குறிக்கப்பட்ட தேதியில் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலை விவரம்:—சென்னை வியாசர்பாடி பணிமனையில் பராமரிப்புக் கூடம், பேருந்து சுத்தம் செய்யும் அமைப்பு மற்றும் 10' விட்டமுள்ள கிணறு அமைத்தல்.

ஒப்பந்தம்:—மொத்தத் தொகை.
முடிக்கும் காலம்:—8 மாதங்கள்.
முன்வைப்புத் தொகை:—ரூ. 3,600.
ஒப்பந்தத் தேதி:—23-3-1972
ஒப்பந்த விதிகள் விலை (விற்பனை வரி உட்பட):—ரூ. 15·55.

ஒப்பந்தங்கள், மேலே குறிப்பிட்ட தேதியில் மாலை 3·15-க்குத் திறக்கப்படும். ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நகலுகள், வரைபடங்கள் முதலியவற்றை நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அலுவலகத்தில் மேலே குறிப்பிட்ட வேலைக்கு, மேலே குறிப்பிட்ட தொகையைக் கட்டி, கீழ்க்கண்ட தேதிகளில் (2-3-1972 முதல் 22-3-1972 முடிய எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை "நிருவாகப் பொறியாளர்" பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ்ச் செலுத்தி, செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றிவரும் ஒப்பந்தங்கள் பாசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

பி. ஆர். சுப்பிரமணியம்,
மேலாளர் (தொழில்நுட்பம்),
பல்லவா போக்குவரத்துக் கழகம்,
சென்னை-2.

(த.58)

## கோவை நகராட்சி

தண்ணீர் விநியோகப் பிரிவில் தண்ணீர் அளக்கும் கருவிகளுக்கு (Water Meters) சுமார் ரூ. 6,000-க்கு சில்லறை உறுப்புகள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 15-3-1972-ஆம் தேதி மாலை 3 மணிவரை ஆணையரால் பெற்றுக்கொள்ளப்படும். அதே தினம் 3-30 மணிக்கு நகராட்சிப் பொறியாளரால் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விவரங்கள், நிபந்தனைகள் முதலியவற்றை ரூ. 3-12 நகராட்சிக்கருவூலத்தில் செலுத்திபொறியாளரிடம்பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

(த.54)

## உதகமண்டலம் நகராட்சி

1972-ஆம் வருடம் மார்ச் மாதம் 28-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3-30 மணிக்குள் நகராட்சி சந்தையில் காய்கறிகள் விற்கும் கடைகளின் கூறைகளுக்கு மழைத் தண்ணீர் வடிய வசதி செய்வதற்குத் தேவையான துத்துநாக குழாய்களும் மற்ற சாமான்களும் விநியோகம் செய்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் உதகை கமிஷனர் அவர்களால் வாங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களும், நிபந்தனைகளும் 27-3-1972 மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 6·18 செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை நகராட்சி பொறியர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரத்தின் விலை ரூ. 6·18, 27-3-1972-ஆம் தேதிக்குள் நகராட்சிக் கஜானாவில் செலுத்தப்படவேண்டும்.

ஆணையர்.

உதகமண்டலம் நகராட்சி.

(த.56)

## கும்பகோணம் நகராட்சி

கும்பகோணம் நகராட்சி ஆணையரவர்களால் கீழ்க்கண்டுள்ள இரண்டு சாலை வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13-3-1972 மாலை 4·00 மணிவரை பெற்றுக்கொள்ளப் படும்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. | பொறுப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 கீழ கடலங்குடித்தெரு, மகாமகக்குளம் மேலத்தெரு, தஞ்சைநாயகிபுரம் அக்ரஹாரம் ஆகிய சாலைகளை ஆஸ்பால்ட் காங்கிரீட் சாலைகளாக்க. | 1,11,000 | 2,275 |
| 2 அனுமார் கோயில் ரோடு, மகாமகக் குளம் வடக்குத் தெரு ஆகிய சாலைகளை ஆஸ்பால்ட் காங்கிரீட் சாலைகளாக்க. | 88,000 | 2,200 |

ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 4·15 மணிக்குத் திறக்கப்படும். ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்த அட்டவணைக்கும் ரூ. 5-ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை நகராட்சிப் பொறியாளருக்கு விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,

கும்பகோணம் நகராட்சி.

(த.55)

## ஸ்ரீ வில்லிபுத்தூர் நகராட்சி

இந் நகராட்சிக்கு சாமான்களைத் தூக்குவதற்கும், இறக்குவதற்கும் தேவையான 3 டன் திறனுள்ள 8 மீட்டர் தூக்கக்கூடிய (With two falls) "செயின் புல்லி பிளாக்" ஒன்று வழங்க நாளது 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4·00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இந்நகராட்சி ஆணையரால் பெற்றுக் கொள்ளப்படும். டி ஒப்பந்தப் புள்ளிகள் கொடுக்க விரும்புபவர்கள் ஒப்பந்தப் புள்ளியுடன் பிணைத் தொகை ரூ. 125 இந்நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திய ரசீதும் அனுப்ப வேண்டும். இதர விவரங்கள் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ப. சண்முகம், பி.ஏ., பி.காம்.
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

(த.57)

## ஏல விற்பனை

### பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம்

பள்ளிப்பட்டு சப்தாலுகா, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஜீப் எம்.டி.எச். 2646 வில்லீஸ் திருவள்ளூர் உதவி ஆட்சியர் அவர்களால் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 24–3–1972-ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குப் பகிரங்கமாய் ஏலம் விடப் படும்.

ஏல ஷரத்துக்களை திருவள்ளூர் உதவி ஆட்சியர் அலுவலகத்தி லாவது பள்ளிப்பட்டில் இருக்கும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தி லாவது தெரிந்து கொள்ளலாம்.

ஏலம் விட இருக்கும் வண்டியை அரசு விடுமுறை அல்லாத நாட்களில் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில், அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

உதவி ஆட்சியர்,
திருவள்ளூர்.

(த. 60)

## ஒப்பந்தப் புள்ளி

### மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சிக்குச் சொந்தமான திரு. வி. க. காய்கறி மார்க் கெட்டில் தற்போது கீற்றுக் கொட்டகையாக இருக்கும் 5 கடைகளை புதிதாக ஒட்டுக் கட்டடங்களாக கட்டுவதற்கு ரூ. 15,000 மதிப்பீட்டிற்கான வேலைக்கும் பட்டமங்கலம் மேற்கு நகரமைப்புத் திட்டத்தின் கீழ் சி5 சி5, சி6 சி6, ஆகிய இரண்டு புதிய மண்சாலைகள் அமைப்பதற்கு ரூ. 20,000 மதிப்பீட்டிற்கான வேலைக்கும் கூறை நாடு நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் ஒரு மல அறை கக்கூஸ் கட்டுவதற்கு ரூ. 6,700 மதிப்பீட்டிற்கானவேலைக்கும் 14—3—1972-ஆம் தேதி மாலை 4·00 மணி வரை ஆணையர் அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி கள் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கண்ட வேலைகளின் விவரங்களை நகராட்சிக் கருவூலத்தில் கடைகள் கட்டும் வேலைக்கு ரூ. 3·00-ம் விற்பனை வரி பதினைன்று காசும் மண் சாலைகள் அமைப்பதற்கும் கக்கூஸ் கட்டுவதற்கும் ரூபாய் ஒன்றும் காசு நான்கு விற்பனை வரியும் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வீரைய்யன்,
ஆணையர்.

மாயூரம்,
(த·69)

## ஏல விளம்பரம்

### ஊராட்சி ஒன்றியம் தே. கல்லுப்பட்டி

தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட அனுபந்தத்தில் கண்டுள்ள வாரச்சந்தைகளில் 1—4—1972 முதல் 31—3—1973 தேதி வரை ஒரு ஆண்டு காலத்திற்கு ஆயம் வசூல் செய்யும் பாத்தியதையும், சாணி குப்பை எடுத்துக் கொள்ளும் பாத் தியதையையும் தே. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் அவர்களாலோ அல்லது அவர் அதிகாரம் பெற்றவராலோ 10—3—1972ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஊராட்சி ஒன்றிய அலு வலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏலம் எடுக்க விரும்புபவர் கள் அனுபந்தத்தில் கண்டுள்ள கட்டுத் தொகையை செலுத்தி ஏலம் கேட்கவேண்டும். ஏல சம்பந்தமான மற்ற விவரங்களுக்கு தே. கல்லுப் பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

#### அனுபந்தம்

| விவரம். | கட்டுத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 சந்தையூர், கீழ்ப்பட்டி வாரச்சந்தை .. .. .. | 100·00 |
| 2 தே. கல்லுப்பட்டி வாரச்சந்தை .. .. .. | 250·00 |
| 3 தே. கல்லுப்பட்டியிலிருக்கும் கிளாங்குளம் சத்திரத்தைச் சேர்ந்த வண்டிப்பேட்டை. | 100·00 |
| 4 டி சந்தைகளிலும் வண்டிப்பேட்டைகளிலும் சாணி குப்பை எடுக்கும் பாத்தியதை ஒவ்வொன்றுக்கும். | 5·00 |

த. பாலசுப்ரமணியன், பி.ஏ.,
ஆணையர்.

தே. கல்லுப்பட்டி.
(த.74)

## ஏல விளம்பரம்

### வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம்

கோவை மாவட்டம் தாராபுரம் தாலுகா வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியத்தைச்சேர்ந்தகண்ணபுரத்தில 24—4—1972 முதல் 1—5—1972 முடிய நடக்கவிருக்கும் தேர்த்திருவிழா மற்றும் கால்நடைச் சந்தையின் போது கூடும் கால் நடைகளுக்கும் தற்காலிகமாக போடப்படும் கடை களுக்கும் ஆயம் வசூல் செய்யும் உரிமத்தை 11—4—1972-ஆம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏல நிபந்தனைகள் பற்றிய விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

16—2—1972.
(த.70)

## ஒப்பந்தப் புள்ளி

### போடி நாயக்கனூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31ஆம்நாள் முடிய உள்ள காலவரைக்கு இந்நகராட்சிக்குத் தேவையான எழுதுபொருள் சாமான்கள் அச்சு வேலை (Printing Works) சுண் ணும்புத் தூள் ஆகியவைகள் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13—3—1972-ம் தேதி மாலை4 மணிவரை பெற்றுக்கொள்ளும் படியாக கோரப்படுகின்றன. அவைகள் அன்று 4·30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுக்க விரும்புவோர் அதற்குரிய கட்டுத் தொகை ஒவ்வொரு இனத்திற்கும் ரூ. 25 செலுத்தி நேரிலோ அல்லது தபால் மூலமோ மேற்படி காலத்திற்குள் கொடுக்கலாம்.

இதர விவரங்கள் இந்நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
போடிநாயக்கனூர்,

(த.71)

### போடிநாயக்கனூர் நகராட்சி

1972-ம் வருடம் ஏப்ரல் 1 முதல் 1973-ம் வருடம் மார்ச்சு 31-ஆம் தேதியுடன் முடிவடையும் ஓராண்டு காலத்திற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரிச் சந்தை, வாரச் சந்தை, தினசரிச் சந்தையிலுள்ள வெளிப்புறக்கடை எண் 1, 2, 3 ஆடு மாடுகள் அடிக்கும் ஸ்லாட்டர் ஹவுஸ், பஸ் ஸ்டாண்டில் தட்டுகளில் முறுக்கு விற்பனை செய்தல், பூ விற்பனை செய்தல், லாட்டரி சீட்டு விற்பனை செய்தல், குளிப்பறைக் கட்டணம் வசூல் செய்தல், டிக்கட் புக்கிங் அறை எண் 2, பஸ் ஸ்டாண்டில் உள்ள விளம்பரச் சுவர் எட்டு பிரிவுகள் மொத்தமாக, நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களை சேகரித்தல், நகராட்சிப் பெட்டிக் கடைகள், வலசத்துறை பாலத்திற்கு அருகேயுள்ள கட்டடம், திருமலாபுரம் சாக்கடைத் தண்ணீர், திருமலாபுரம் தெற்கு கடைசியில் செல்லும் சாக்கடைத் தண்ணீர் ஆகிய உரிமைகளை 1972-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 10-ஆம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10·30 மணிக்கு அல்லது ஒத்தி வைக்கப்படும் தேதியிலும் நகராட்சி அலுவலகத் தில், ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்ற ஒருவரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்கவிழைவோர் வட்ட ஆட்சியாளரால் அளிக்கப்படும் சொத்துச் சான்றிதழுடன் கட்டுத் தொகை செலுத்தி ஏலம் கேட்கலாம். மற்ற விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
போடிநாயக்கனூர்,

(த·72)

## ஏல விற்பனை

### திருவாரூர் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கான கீழ்க்காணும் குத்தகைகள், திருவாரூர் நகராட்சி ஆணையர் அல்லது ஆணையரது அதிகாரம் பெற்ற அலுவலரால் நகராட்சி அலுவலகத்தில் 3–3–1972-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு அல்லது ஒத்திவைக்கப்பெறும் தேதிகளில் எல்லாரும் அறிய பகிரங்க ஏலம் விடப்படும்.

(1) திருவாரூர் நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

(2) நகராட்சி ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

(3) நகராட்சிப் பேருந்து நிலையத்தில் பேருந்து வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிக்கும் உரிமை.

(4) நகராட்சி ஆடு அறுக்கும் தொட்டியில் விழும் எரு கழிவினையை அகற்றி அனுபவிக்கும் உரிமை.

(5) நகராட்சிப் பேருந்து நிலையத்தில் சைவ உணவு விடுதி நடத்தும் உரிமை.

(6) திருவாரூர், விஜயபுரம் இராமலிங்க முதலியார் சாலையில் உள்ள நகராட்சி ஜூப்ளி மார்க்கட்டில், உள், வெளி, எதிர்ப்புறம் உள்ள 30 கடைகளைத் தினசரி வாடகையில் தனித்தனியே நடத்தும் உரிமை.

(7) நகராட்சிப் பேருந்து நிலையத்தில் உள்ள 3 கடைகள் தினசரி வாடகையில், ஒரு பெட்டிக்கடை பேருந்து நிலையம் வெளிப்புறத்தில் (நகர் அளவு எண் 608/1 உள்ள நகராட்சி இடத்தில் 6'×4' அளவிற்கு) பெட்டிக்கடை வைத்துக்கொள்ளும் உரிமை.

(8) ஆசாத் ரோட்டில் உள்ள சுங்க வரிக் கட்டடம்.

(9) கமலாலயம் தென்கரையிலுள்ள 28-வ எண் கட்டடம்.

குத்தகை நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை நகராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

க. பெ. அன்பானந்தன்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
திருவாரூர்,
(த. 80)

## ஏல விளம்பரம்

### போடி நாயக்கனூர் நகராட்சி

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் 1973-ஆம் ஆண்டு மார்ச்சு 31-ஆம் தேதியுடன் முடிவடையும் ஓராண்டுக் காலத்திற்கு இந்நகராட்சிக்குச் சொந்தமான தினசரிச் சந்தை, வாரச் சந்தை தினசரி சந்தையிலுள்ள வெளிப்புறக்கடை எண் 1, 2, 3, ஆடு, மாடுகள் அடிக்கும் தொட்டிகள், பேருந்து நிலையத்தில் தட்டுகளில் முறுக்கு விற்பனை செய்தல், பூ விற்பனை செய்தல், பரிசுச் சீட்டு விற்பனை செய்தல், குளிருப்பறைக் கட்டணம் வசூல் செய்தல், டிக்கட் புக்கிங் அறை எண் 2, பேருந்து நிலையத்திலுள்ள விளம்பரச் சுவர் எட்டு பிரிவுகள் மொத்தமாக, நகராட்சி எல்லைக்குள் விழும் பன்றி எருக்களைச் சேகரித்தல், நகராட்சிப் பெட்டிக் கடைகள், வலசத்துறை பாலத்திற்கு அருகேயுள்ள கட்டடம், திருமலாபுரம் சாக்கடைத் தண்ணீர், திருமலாபுரம் தெற்குக் கடைகளில் செல்லும் சாக்கடைத் தண்ணீர் ஆகிய உரிமைகளை 1972-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 10–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு அல்லது ஒத்தி வைக்கப்படும் தேதியிலும் நகராட்சி அலுவலகத்தில், ஆணையர் அவர்களால் அல்லது அதிகாரம் பெற்ற ஒருவரால் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலம் கேட்க விழைவோர் வட்ட ஆட்சியாளரால் அளிக்கப்படும் சொத்துச் சான்றிதழுடன் கட்டுத்தொகை செலுத்தி ஏலம் கேட்கலாம். மற்ற விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
போடி நாயக்கனூர்,
(த.75)

## ஏல விளம்பரம்

### குற்றால நகரியக்குழு

குற்றால நகரியத்துக்குச் சொந்தமான "கலைவாணர் கலையரங்கத்தில்" சினிமா, நாடகம், நடனம், மற்றுக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தும் உரிமை 1–4–1972 முதல் 31–3–1975 வரையுள்ள மூன்று வருட காலத்துக்கு நகரிய நிருவாக அதிகாரியால் குற்றால நகரிய அலுவலகத்தில் வைத்து 8–3–1972 அன்று காலை 11-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏலம் கோர விரும்புபவர்கள் தங்களுடன் "சால்வன்ஸி சர்டிபிகேட்" கொண்டுவருவதுடன் ரூ. 1,500-ம் ஏல டிப்பாசிட்டாக செலுத்த வேண்டும். ஏலம் சம்பந்தமான இதர விவரங்களை நகரிய அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

சா. நா. பழனிசாமி, பி.ஏ., பி.எல்.,
நிருவாக அதிகாரி.

குற்றால நகரியம்,
(த.78)

## வேலை வாய்ப்பு

### கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் (திருநெல்வேலி மாவட்டம்)

கருங்குளம் ஊராட்சி ஒன்றியம் செய்துங்கநல்லூர் மருத்துவ மனைக்கு மருத்துவ அதிகாரி பதவிக்கு மனுக்கள் வரவேற்கப் படுகின்றன.

பதவிக்கான தகுதி:—எல்.ஐ.எம். அல்லது அதற்கு ஈடான தகுதி சான்றிதழ்.
வயது வரம்பு:—20-க்கு மேல் 50-க்குள்.
சம்பள விகிதம்:—400—15—475—20—575—25—650.
பதவிக்காலம்:—நிரந்தரம்.
மனு அனுப்ப வேண்டிய இறுதி நாள்:—30–3–1972, 5 மணிக்குள்.

ச. த. ஜெயபாலன்,
ஆணையர்.

(த.77)

## ஒப்பந்தப் புள்ளி

### கிராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையம் தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்

தே. கல்லுப்பட்டி கிராமிய விரிவாக்கப்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த தொழிற்கூடப் பகுதிக்கு 1972-73-ஆம் ஆண்டிற்குத் தேவையான மரம், இரும்பு போன்ற சாமான்கள் விநியோகம் செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ரூ. 100 கட்டுத் தொகை செலுத்தி 29—3—1972 அன்று பிற்பகல் 3 மணி வரை வரவேற்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட சாமான்களின் விவரம் அறிய முதல்வர், கிராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையம், தே. கல்லுப்பட்டிக்கு எழுதியோ அல்லது நேரிலோ பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகளை முதல்வர், கிராமிய விரிவாக்கப் பயிற்சி நிலையம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ அனுப்பவேண்டும். கட்டுத் தொகையை இந்த அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெறலாம், அல்லது மணியாடர் மூலம் அனுப்பலாம். காசோலைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிகள் 29—3—1972 மாலை 3-15 மணிக்கு இந்த அலுவலகத்தில் முதல்வர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி கொடுப்பவர்கள் நேரிலோ அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட ஏஜண்டுகள் மூலமாகவும் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்போது ஆஜராகலாம்.

சே. வெ. ராமசுப்பிரமணியம்,
முதல்வர், கிராமிய பயிற்சி நிலையம்,
தே. கல்லுப்பட்டி.

(த. 49)

## மின்சார வாரியம்
## கோதையாறு மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப் புள்ளிகளை அதன் முக உறையின் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர் மின் திட்டம், 34-ஏ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என்று முக உறை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர், அல்லது அவரால், அங்கீகரிக்கப் பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் அந்தந்த வேலைகளுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் மாலை 3-00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். அவைகளை அதே நாட்களில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

வேலைகளின் பெயர்கள்—

எண் 1.

குறிப்பிடுகை எண்.—K. C. 306.—கோதையாறு மேல் தங்கலில் உள்ள அணை 1-ல், ரீச் A—D.S. 160-லிருந்து D.S. 320 வரை அணையின் பின்புற பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கு (Rear Protection arrangements) அஸ்திவாரம் தோண்டுதலும், கான்கிரீட் போடுதலும், கட்டுமான வேலை (Building masonry) செய்தலும்.

ஒப்பந்த செட்டின் விலை விற்பனை வரி உட்பட—ரு. 10.35.

கட்டுத் தொகை —ரு. 17,750.

ஒப்பந்தப்புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி :—28-3-1972.

எண் 2.

குறிப்பிடுகை எண் : K. C. 307—கோதையாறு மேல் தங்கலில் உள்ள அணை 1-ல் ரீச் B—D. S. 320-லிருந்து D. S. 450 வரை அணையின் பின் பக்க பாதுகாப்பு ஏற்பாடு செய்வதற்கு ( Rear Protection arrangements ) அஸ்தி வாரம் தோண்டுதலும் கான்கிரீட் போடுதலும், கட்டுமான வேலை (Building Masonry) செய்தலும்.

ஒப்பந்த செட்டின் விலை விற்பனை வரி உட்பட:—ரு.10.35.

கட்டுத் தொகை:—ரு. 12,160.

ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி:—10-4-1972.

ஒப்பந்தப் புள்ளி செட்டுகளின் நகல்களை (மாற்றத் தகாதவை) ஒவ்வொரு வேலைக்கும் எதிரில் குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப் படமாட்டாது.

இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகை ( Earnest Money Deposit) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப் படும். கட்டுத் தொகையை கீழே கையொப்ப மிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் ( Cheques ) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தத்தையோ சில அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ நிராகரிக்க, கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு பூரண உரிமையுண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் கால தாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின்திட்டம்,

34-ஏ பெருமாள்புரம்,
திருநெல்வேலி-7

(த.66)




## ஒப்பந்தப் புள்ளி

### செங்கற்பட்டு மாவட்டம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் 1972–73–ஆம் ஆண்டிற்கான கழிவுக் காகிதங்களை வாங்குவதற்குக் கீழே ஒப்பம் இடப் பெற்றவரால் காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் 1972–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 6–ஆம் தேதியன்று மாலை 3–00 மணி வரையிலும் வாங்கப்பட்டு அன்று மாலை 4–00 மணிக்கு அன்னாரால் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்தப் புள்ளியுடன் பொறுப்பு வைப்புத் தொகையாகக் கருவூலத்தில் ரூ.250 (ரூபாய்இருநூற்றுஐம்பது மட்டும்)செலுத்தப்பட்டு அதற்குண்டான கருவூல ரசீதையும் வைத்து அனுப்ப வேண்டும். முதல், இரண்டாவது மற்றும் மூன்றாவது தரக் கழிவுக் காகிதங்களுக்கு முறையே ஒரு மெட்ரிக் டன்னுக்கு உண்டான தொகையைக் குறிப்பிட வேண்டும். மேலும் மற்ற விவரங்களைச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

டி. வரதன்,
மாவட்ட வருவாய் அதிகாரி.

காஞ்சிபுரம்,
15—2—1972
(த. 53)

## ஒப்பந்தப் புள்ளி

### ஈரோடு நகராட்சி

இந்நகராட்சி குடிநீர் இறைப்பு நிலையத்திலுள்ள 70 குதிரை வேகம், 30 குதிரை வேகம் மின் உந்துகளுக்குத் தேவைப்படும் ஸ்பேர் சாமான்கள் ரூ. 2,100 மதிப்பில் வழங்க 1972–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 14–ஆம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

க. ஜனார்தனம்,
ஆணையர்.

ஈரோடு,
10–2–1972.
(த. 52)

## ஒப்பந்தப் புள்ளி தேதி நீட்டிப்பு

மதுரையில் உள்ள தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்து நிலையத்தில் " சிற்றுண்டி விடுதி—பயணியர் தங்கும் விடுதிக் கட்டடத்தில் கீழே உள்ள சிற்றுண்டி சமையல் பகுதியை அதன் பின்புறம் உள்ள காலியிடத்துடன் குத்தகைக்கு விடுவதற்கு அரசு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசித் தேதி 8—3—1972 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

2. ஒப்பந்தம் திறக்கப்படும் நாளும், நேரமும் 8—3—1972 மாலை 3–30 மணி.

3. சிற்றுண்டி விடுதியின் குத்தகைக் காலம்—மூன்று வருடங்கள்.

4. ஒப்பந்தப் படிவம் வேண்டுவோர் ரூபாய் 1 (ரூபாய் ஒன்று மட்டும்) கூட்டு இயக்குநர்,தமிழகஅரசு போக்கு வரத்துத் துறை திருச்சி மண்டலம் திருச்சி-17 அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இவை தவிர மற்ற எல்லாம் ஒப்பந்த விதி முறைகளும் இவ்வலுவலக ஒப்பந்த அறிவிப்பு எண் C2/8996/71 நாள் 3—12—1971-ல் குறிப்பிட்டுள்ளபடியே இருக்கும்.

ம. பிராணப்பன்,
கூட்டு இயக்குநர்.

திருச்சிராப்பள்ளி,
16—2—1972.
(த. 51)

## ஏலம்

### வனத்துறை

### தமிழக அரசினர் மரக்கிடங்கு, பொள்ளாச்சி

சுமார் 500 கன மீட்டர் முதல் 1,000 கன மீட்டர் வரை (ஈட்டி, தேக்கு கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பல ஜாதி) மரங்கள் ஆகியவைகள் 14—3—1972-ஆம் தேதி மற்றும் 5—4—1972-ஆம் தேதிகளில் தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாகத் தென் கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடைபெறும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக்கிடங்கின் வனச்சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

பூ. க. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர்,
தென் கோவை கோட்டம்.

பொள்ளாச்சி,
15—2—1972.
(த. 48)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித்துறை, செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம் வேலூர்-1.

வேலையின் பெயர்.—திருவண்ணாமலை தாலுகா–மல்லவாடியில் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தொழுநோய் பிச்சைக்காரர்கள் தங்கும் விடுதிகள் கட்டுதல்.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் மேற்குறிப்பிட்ட பணிக்காக செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியர் அவர்களால் 22—3—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு–வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வையாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

ஒப்பந்த முறை—மொத்தத் தொகை.

முன் வைப்புத் தொகை—ரூ. 9,700.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரை படங்களுடன்—ரூ. 20 விற்பனை வரி 3½ சதவிகிதம்.

ஒப்பந்தப் புள்ளி முடிக்கவேண்டிய காலம்— ஆறு மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 20—3—1972 தேதி முதல் 26—3—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20.00 (அது எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "P.W.D. Remittances, III Other Remittances" என்ற தலைப்பின்கீழ் "நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை திருவண்ணாமலைக் கோட்டம், திருவண்ணாமலை" என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0.70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax b Receipts, under State Sales Tax Act–Gereral Sales-Tax என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டும். மேற்படி கருவூலச் செலுத்திச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத்தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசீய சேமிப்புப் பத்திரங்களாகவோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெடியூல்டு பாங்குகளின் "டிமாண்ட் டிராப்டாகவோ" ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகைக்காக கொடுக்கப்படும் "ஷெடியூல்டு பாங்குகளின் டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர், பொ.ப.து., திருவண்ணாமலைக் கொட்டம், திருவண்ணாமலை, அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக் கடன் பத்திரங்களும், மின்வாரிய பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவீதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீய சேமிப்பு நற்சான்றுப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்த படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்தபட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 65)


உங்களுக்கு வேண்டிய
எல்லாமே இங்கே கிடைக்கும்
குறளகம்
சென்னை-1
கதர்-கைத்தொழில்
அங்காடி
தொலைபேசி 20461. 20462.
எண்கள்: 20463. 20464. 20465.
கைவண்ணப்
பொருள்களின்
களஞ்சியம்

## ஒப்பந்தப் புள்ளி

### அம்பத்தூர் நகரியம்

அம்பத்தூர் நகரியத்திற்கு 1972–73-ஆம்ஆண்டிற்கு (1–4–1972 முதல் 31–3–1973 முடிய) தேவையான பொருள்களை வழங்கவும் வேலைகளைச் செய்யவும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான தனித்தனியே மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி மாலை 3–00 மணி வரை நகரிய அலுவலகத்தில் கீழே கையொப்பம் இட்டுள்ள அதிகாரி அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு மேற்படித் தேதியன்று மாலை 3–15 மணிக்கு அப்பொழுது வருகை தந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் நகரிய அலுவலகத்தில் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளை நகரிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| வரிசை எண். | ஒப்பந்தப் புள்ளியின் விவரம். | பொறுப்புத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1. | பொதுச் சுகாதாரப் பிரிவிற்கு மாடுகள் வழங்குதல் .. | 1,200 |
| 2. | வண்டி, வாகனம் இவைகளுக்கான லைசென்ஸ் பில்லைகள் வழங்குதல். | 25 |
| 3. | பொதுச் சுகாதாரப் பிரிவில் குப்பை வண்டிகள் கழிவுநீர் வண்டிகள், பழுது பார்த்தல், பஞ்சர் போடுதல். | 25 |
| 4. | அலுவலகத்திற்குத்தேவையான ஸ்டேஷனரி சாமான்கள் வழங்குதல். | 250 |
| 5. | பொதுச் சுகாதாரப்பிரிவிற்கு வேண்டிய லைப்பாய் சோப், கூடை, மலாரம், சுண்ணாம்புநீர் மற்றும் சாமான்கள் வழங்குதல். | 150 |
| 6. | நகரியத்திற்குச் சொந்தமான தினசரி காய்கறி, மீன், இறைச்சி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலம் விடுதல். | 100 |
| 7. | ஐம்பது குப்பைத் தொட்டிகள் (சிமெண்டினால் செய்யப்பட்டது) வழங்குதல். | 75 |

டி. எம். வெங்கட்டராமன்,
திருவாக அதிகாரி.

அம்பத்தூர் நகரியம்,
(த·73)

---

## ஏல விற்பனை

### மாவட்ட நல அலுவலகம்

எண். 84665–70, எப்-1 நாள் 11–2–1972 மாவட்ட நல அலுவலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரி அலுவலகத்தில் உள்ள கீழ்க்கண்ட ஜீப் வண்டி கண்டனம் செய்யப்பட்டு அந்த வண்டி 20–3–1972 அன்று காலை 11–00 மணிக்கு தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரி அவர்களால் ஷை அலுவலகத்தில் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

வண்டியின் விவரம்.

பதிவு எண் :— எம்.டி.ஓ. 2624

மேக், டைப் :—எல்.எம்.வி. வில்லீஸ் ஜீப், ஓவர்ஹெட் டைப்.

மாடல் :—1959.

அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள் :—ஐவர்.

ஏலத்திற்கான நிபந்தனை.

1. மேலே கண்ட வண்டியை ஏலத்தில் விற்பனை செய்வது சென்னை அரிசனநல இயக்குநரின் உறுதிப்படுத்தல் உத்தரவைப் பொறுத்தது.

2. மேலே கண்டுள்ள வண்டியை தஞ்சாவூர் மாவட்ட நல அதிகாரியின் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

3. ஏலம் கேட்க விரும்புபவர்கள் ரூ. 100 (ரூபாய் நூறு) மட்டும் ஏலம் கேட்பதற்கு முன் கட்டுத் தொகையாகக் கட்ட வேண்டும். அவ்வாறு முன் பணம் கட்டாதவர்கள் ஏலத்தில் கலந்துகொள்ள எந்தச் சந்தர்ப்பத்திலும், அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏலம் எடுத்த நபர் கொடுத்த முன் பணம் ஏலம் எடுத்த தொகைக்கு ஈடு செய்யப்படும். அதிகத் தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்கு ஏலம் உறுதி செய்யப்படும். ஏலத்தில் முடிவான பணத்தில் 25 சதவிகிதம் (கால் பாகம்) உடனடியாகக் கட்டிவிட வேண்டும். கால் பாகத்தில் முதலில் கட்டிய கட்டுத் தொகையைக் கழித்துக் கொள்ளலாம். ஏலத்தில் எடுக்காதவர்களுக்கு உத்திரவாத முன் பணமான கட்டுத் தொகை ஏலம் முடிந்தவுடன் உடனடியாகத் திருப்பி அளிக்கப்படும்.

4. சென்னை அரிசன நல இயக்குநரின் ஏலத்தை உறுதிபடுத்திய உத்திரவு வந்ததும், ஏலம் எடுத்தவருக்கு அறிவிக்கப்படும். அறிவிக்கப்பட்ட உத்திரவு கிடைத்த 7 நாட்களுக்குள் ஏலம் எடுத்தவர் பாக்கி கட்ட வேண்டிய தொகையை வணிக வரி 3 சதவிகிதம் உடன் சேர்த்து கட்டிவிட வேண்டும். அவ்வாறு கட்டத் தவறினால் அவர் ஏலத்தில் கட்டாயத்தொகை முழுவதும் அரசாங்கத்திற்கு சட்டப்பூர்வமாக சேர்க்கப்படும். மறு ஏலம் விடப்பட்டு, அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுமானால் அதையும் அவரே செலுத்தும்படி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5. சென்னை அரிசன நல இயக்குநர் ஏலம் விட்டதை உறுதிப்படுத்தி அனுமதி அளிக்காவிட்டால் ஏலம் எடுத்தவர் ஏலத் தேதியன்று கட்டாயம் கால் பாகம் (25 சதவிகிதம்) முன் பணத்தை அவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

மாவட்ட நல அதிகாரி,
தஞ்சை.

(த.67)

---

## ஒப்பந்தப் புள்ளி

### உணவுப் பொருள் வழங்குதுறை உபயோகப்படக்கூடிய–கிழிந்த சாக்குப்பைகள் விற்பனை அறிவிப்பு

நீலகிரி மாவட்டம் உணவுப் பொருள் வழங்குத்துறைக்குச் சேர்ந்ததும், மேட்டுப் பாளையம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கிலுள்ள 40,333 உபயோகப்படக் கூடியதுமான சாக்குப் பைகளையும், 451 மற்றும் 209 கிழிந்த சாக்குப் பைகளையும் விற்கத் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படுகின்றன. ஏல நிபந்தனைகளுடனும், லாட்டுகள் விவரங்களுடனும் உள்ள ஒப்பந்தப் நமூனாக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ரூ. 2·07 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளியுடன் ரூ. 2·50 (ரூபாய் இரு நூற்று ஐம்பது மட்டும்) கூட்டுத் தொகையான பேங்க் டிராப்டு அனுப்பப்பட வேண்டும்.

முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் புதன் கிழமை பிற்பகல் 3 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அன்றே பிற்பகல் 3–00 மணிக்குப் பிறகு ஒப்பந்ததாரர்கள் முன்பு உதகை மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலகத்தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை நாளாகப் பின்னர் அறிவிக்கப்பட்டால், ஒப்பந்தப் புள்ளிகள் அடுத்த நாள் மாலை 3–00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புதலுக்காக ஒரு மாதம் வரை வைக்கப்படும்

மாவட்ட ஆட்சித் தலைவர்.

(த.50)

## ஒப்பந்தப் புள்ளி

### பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2,

பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களால், கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள், அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள "போக்குவரத்து இல்லத்தின்" அலுவலகத்தில் மாலை 3-00 மணி வரை கீழே பத்தாவது பத்தியில் குறிக்கப்பெற்ற தேதிகளில் பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | ஒப்பந்தத்தின் வகை. | முன்வைப்புத் தொகை. | பாது காப்புத் தொகை. | ஒப்பந்த விதிகள் விலை விற்பனை வரி உட்பட. | முடிக்கும் காலம். | நிபந்தனைப் பத்திரங்கள் கிடைக்கும் தேதி. முதல். | தேதி முடிய. | ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும், மற்றும் திறக்கப்படும் தேதி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | மாதங்கள். | | | |
| **செங்கற்பட்டில் பணிமனை கட்டுதல்—** | | | | | | | | |
| 1 பயணிகள் நிற்கும் கூடம் அமைத்தல் மற்றும் டிக்கட் விற்பனைக் கூடம். | மொத்தத் தொகை | 2,000 | 2,000 | 15·55 | 6 | 28– 2–1972 | 14– 3–1972 | 15– 3–1972 |
| 2 தார்சாலை அமைத்தல் .. .. .. | டிை | 3,375 | 3,375 | 15·55 | 6 | 28– 2–1972 | 14– 3–1972 | 15–3–1972 |
| பராமரிப்புக்கூடம், பேருந்து சுத்தம் செய்யும் அமைப்புக் கட்டுதல், கிணறு அமைத்தல், மேலும் சுத்தம் செய்யும் தொட்டி அமைத்தல். | டிை | 2,975 | 2,975 | 15·55 | 6 | 28– 2–1972 | 14– 3–1972 | 15– 3–1972 |
| 3 நேரப்பதி வறை, கழிவறை மதில் சுவர் கட்டுதல், பாலம் அமைத்தல். | டிை | 3,450 | 3,450 | 15·55 | 6 | 28– 2–1972 | 14– 3–1972 | 15–3–1972 |

ஒப்பந்தங்கள் மேலாளர் (தொழில் நுட்பம்), பல்லவா போக்குவரத்துக் கழகம், போக்குவரத்து இல்லம், சென்னை-2 அவர்களால் மேற்கூறிய (பத்தாவது பத்தி) அதே நாட்களில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப்பத்திரங்கள், நமூனுக்கள், வரைபடங்கள் முதலியவற்றை, நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அலுவலகத்தில் மேற்கூறிய வேலைகளுக்கு மேற்கூறிய தொகையைக்கட்டி மேற்கூறிய தேதிகளில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையை "நிருவாகப் பொறியாளர்" பல்லவா போக்குவரத்துக் கழகம், சென்னை-2 அவர்களுக்கு அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின்கீழ் செலுத்திச் செல்லுச்சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

டி. ஆர். சுப்ரமணியம்,
மேலாளர் (தொழில் நுட்பம்).

(த.68)

## ஒப்பந்தப் புள்ளி

### கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் குழந்தைகள் மருத்துவமனை திருவல்லிக்கேணி, சென்னை-5

இம் மருத்துவமனையைச் சேர்ந்த "செவிலியர் இல்லத்திலும், சிற்றுண்டி விடுதியிலும் (Nurses Quarters and Canteen) 1—4—1972 முதல் 31—3—1973 வரை ஓராண்டிற்கான உணவு, சிற்றுண்டி முதலியன வழங்குவதற்காகவும் மற்றும் சைக்கிள் கட்டணம் வசூலிப்பதற்காகவும் குத்தகை விண்ணப்பங்கள் (Tender Forms) தனித் தனியாக 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் நாள் (15—3—1972) புதன்கிழமை பகல் 2 மணி வரை இம் மருத்துவமனையில் கண்காணிப்பாளரால் பெற்றுக் கொள்ளப்படும்.

குத்தகையின் விதிகள், உணவு, சிற்றுண்டி வகைகள் முதலியவற்றைக் காட்டும் 'அட்டவணை' மற்றும் குத்தகை விண்ணப்பங்கள் ஆகியவற்றை இந்திய மூலப் பொருளகம் (Reserve Bank of India) அல்லது கருவூலத்தில் (Treasury) தமிழக அரசு கணக்கில் XXIII—மருத்துவம்-பல்வகை (XXIII—Medical—K. Miscellaneous) என்ற தலைப்பில் ரூபாய் 5-ம் விற்பனை வரி 0.18 காசும் (XII—Sales Tax—Receipt under Gen. Sales Tax) கட்டி அதற்கான சீட்டுகளைப் பெற்று இந்த மருத்துவமனை அலுவலகத்தில் பெறலாம்.

தமிழ் நாட்டை விட்டு வெளியிலிருக்கும் தனிப்பட்ட கூட்டுத் தொழிலகம் (Company) தனி ஆட்கள் இந்த குத்தகை ஏற்பாட்டில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ரூபாய் 5.18 பண அஞ்சல் குறுக்குக் கோடிட்ட அஞ்சல் ஆணை (Crossed Postal Order) அல்லது பொருளக உண்டியல் (Bank Draft) மூலமாக அனுப்பலாம்.

ஒவ்வொரு குத்தகை விண்ணப்பத்துடன் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தேதிக்குப் பின் தொடர்புடைய வட்ட அலுவலகரால் (Thasildar) கையெழுத்திட்டோ அல்லது சரி நகலான அரசிதழ் பதிவு அலுவலரால் ( Gazetted Officer ) ஒப்பம் செய்யப்பட்டகீழ்க்காணும் சான்றிதழ்களைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

1. செல்வப் பெருமானச் சான்றிதழ் (Solvency Certificate).
2. வருமான வரி முழுவதும் அரசுக்குச் செலுத்தியதற்கான சான்றிதழ் (Tax Clearance Certificate).
3. விற்பனை வரி தணிக்கையானதற்கான சான்றிதழ் (Sales Tax Verification Certificate)
4. நாட்டு இச்சை சான்றிதழ் (Nationality Certificate).

கண்காணிப்பாளர்.

(த. 64)

## ஏல விளம்பரம்.

### விவசாய ஆராய்ச்சிப் பண்ணை

கண்காணிப்பாளர், விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, நஞ்சநாட்டைச் சேர்ந்த எம்.எஸ். இஜட். 5048 என்ற இலக்கமிட்ட, இனி மேற்கொண்டு உபயோகத்திற்கு தகுதியற்றது என்று அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வில்லீஸ் ஜீப், 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில், அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு நஞ்சநாடு, விவசாய ஆராய்ச்சிப் பண்ணையின் எல்லைக்குள் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏல விற்பனை நிபந்தனைகளை நஞ்சநாடு, விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து அந்த அலுவலக நேரங்களிலோ அல்லது தன் விலாசமிடப்பட்ட தபால்தலை ஒட்டப்பட்ட கடிதம் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்,
விவசாய ஆராய்ச்சிப் பண்ணை, நஞ்சநாடு.

(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்
### திருநெல்வேலி மின் திட்டம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 20—3—1972 மாலை 3 மணி வரை அடியிற் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. வேலைகளின் காலஅளவு 1—4—1972 முதல் ஒரு வருடம் அல்லது ஒப்பந்தம் கையெழுத்தாகும் தேதி முதல் ஒரு வருடம் வரைக்கும்.

வேலை எண். 1—

தாழையூத்து மற்றும் திருநெல்வேலி புகை வண்டி நிலையம், திருநெல்வேலி சந்திப்பு டவுன் இடங்களிலுள்ள லாரி நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து தாழையூத்து மத்திய இடங்கிற்கு சாமானங்களை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலமாக கொண்டு சேர்த்தல், மத்திய இடங்கிலிருந்து மேற்படி இடங்களுக்கு கொண்டு சேர்த்தல், டிரான்ஸ்பார்மர் மற்றும் 500 கிலோ கிராமிற்கு மேல் எடையுள்ள கனரக மின் சாதன சாமான்கள் இதில் அடங்காது.

வேலை எண். 2—

மின்சார வாரியத்திற்கு சொந்தமான சாமான்கள் (ஒவ்வொன்றும் 2 டன்களுக்கு மேல் எடையுள்ள பொருட்கள் மற்றும் 6.5 மீட்டர்களுக்கு மேல் நீளமான பொருட்கள் தவிர) தமிழ்நாட்டில் 20 கிலோ மீட்டர்களுக்கு மேல் தூரமான எல்லா ஊர்களுக்கும் சாலை மூலம் லாரிகளில் கொண்டு சேர்த்தல்.

வேலை எண். 3—

நெல்லை மின் திட்ட எல்லைக்குள் 7.32 மீட்டர் 8.23 மீட்டர் மற்றும் 9.14 மீட்டர் கான்கிரீட் கம்பங்களை அதன் உற்பத்தி கேந்திரங்களிலிருந்து பல்வேறு வேலை நடக்கும் இடங்களுக்கு கொண்டு சேர்த்தல்.

ஒப்பந்தப் பாரங்களை ரூபாய் 6 (ஆறு மட்டும்) நேரிலோ அல்லது பண அஞ்சல் மூலமாகவோ தலைமைக்கணக்காயர், செலவினம், திருநெல்வேலி மின் திட்டம், வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3 அவர்களிடம் செலுத்தி 25—2—1972 முதல் 18—3—1972 வரை பெற்றுக் கொள்ளலாம். பண அஞ்சல்கள் 18—3—1972 வரைதான் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சல் மூலமாகத்தான் அனுப்பப்படும். அவை தவிர நேரின் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் மாற்றிக் கொள்ளத்தக்கதல்ல. ஒப்பந்தப் புள்ளிகள் 20—3—1972 மாலை 4 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் ஒப்பந்தங்களும் கட்டுத் தொகை கட்டாது அனுப்பப்படும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் காரணம் எதும் குறிப்பிடாமல் நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பகிர்ந்து கொடுக்கவோ அடியிற் கையொப்பமிட்டவருக்கு உரிமை உண்டு.

மேற்பார்வை மின் பொறியாளர்,
திருநெல்வேலி மின் திட்டம்.

வண்ணார்பேட்டை,
திருநெல்வேலி-3.

(த. 62)

## ஒப்பந்தப் புள்ளி

### வனத்துறை

தென் கோவை மாவட்ட வன தூணக்கடவு சரகம் சி.எல்.சி. (ஏ) மற்று (பி) (ஊர்ந்தி பிளாக்கு) பகுதிகளிலிருந்து பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக்கிடங்கிற்கும் (2) தேவைப்படின் ஆனைமலை பண்ணையிலுள்ள பொள்ளாச்சி வனச்சரக அலுவலகத்தைச் சார்ந்த எல்லைக்குள்ளும் எக்ரிமெண்டு ஒப்புதலாகும் தேதியிலிருந்து 31—12—1972-ஆம் தேதிவரை சுமார் 3,500 கன மீட்டர் மரங்களை மோட்டார் லாரிகளில் ஏற்றுக் கொண்டு வருவதற்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு ஆளுநர் சார்பாக, தென் கோவை மாவட்ட வன அலுவலர் அவர்களால் 9—3—1972-ஆம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். மரங்களை பொள்ளாச்சி அரசினர் மரக்கிடங்கிற்கு கடத்துவதற்கும், ஆனைமலை பண்ணையிலுள்ள பொள்ளாச்சி வனச்சரக அலுவலகத்தைச் சார்ந்த எல்லைக்குள்ளும் கடத்துவதற்கும் தனித்தனி விகிதம் (Rate) குறிப்பிடவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிக்குரிய பாரத்தை, ஒப்பந்தப் பாரம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு வீதம் (தபால் செலவு நீங்கலாக) விற்பனை வரி ரூ. 0·07-யும் செலுத்தி தென் கோவை மாவட்ட வன அலுவலரிடமிருந்தோ அல்லது பொள்ளாச்சியிலுள்ள அரசின் மரக்கிடங்கு வனச்சரக அலுவலரிடமிருந்தோ இதர விவரங்களுடன் பெற்றுக் கொள்ளவும்.

பூ. கா. பொன்னுசாமி,
மாவட்ட வன அலுவலர், தென் கோவை கோட்டம்

(த.61)

## இராமநாதபுர மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம்

அரசாங்கத்தால் இராமநாதபுர மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தின கிளைகள் உள்ள (1) விருதுநகர், (2) திருவில்லிபுத்தூர், (3) காரைக்குடி, (4) பரமக்குடி, (5) சிவகங்கை (6) இராமநாதபுரம் ஆகிய ஊர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் இரசாயன உர உப்பு மூட்டைகளை 1–4–72 முதல் 31–3–73 வரை கீழ்க்கண்ட இடங்களிலிருந்து லாரி மூலம் ஏற்றிக்கொண்டு வந்து டெலிவரி கொடுக்க இறக்குக் கூலி நீங்கலாக மெட்ரிக் டன் 1-க்கு மொத்த லாரி வாடகை ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

(1) ஆவடி
(2) சென்னைத் துறைமுகம்
(3) பாண்டிச்சேரி
(4) தூத்துக்குடி
(5) நாகப்பட்டினம்
(6) கடலூர்
(7) நெய்வேலி
(8) தஞ்சாவூர்
(9) மன்னார்குடி
(10) இராமநாதபுரம்

மாவட்டத்திற்குள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல 1 கிலோ மீட்டருக்கு ரேட்.

ஒப்பந்தம் கொடுக்க விரும்புபவர்கள் ரொக்க டிபாசிட் ரூ. 1,000 (ஒரு ஆயிரம் மட்டும்) மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்க அலுவலகத்தில் செலுத்தி அதன் ரசீதையும், மேலும், ஒரு இலட்சம் மதிப்புள்ள சால்வென்சி சர்டிபிகேட் சம்பந்தப்பட்ட தாசில்தாரிடம் வாங்கி, அதையும் ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் மேற்கொண்டு ரூ. 4,000 ரொக்க டெபாசிட் கட்ட வேண்டும்.

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 27–3–72ஆம் தேதி திங்கட்கிழமை மாலை 3 மணிக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தனி உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சிப் பிரிவு) 110, அழகர் கோவில் ரோடு, தல்லாகுளம், மதுரை-2 என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்த ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட இதர விவரங்களை இவ் வலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
இராமநாதபுரம்.

(த. 79)

## அறிவிப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை. சுயவேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் கைத்தொழிலாளிகளுக்குக் கடன் உதவி.

சுய வேலைவாய்ப்புத் திட்டம் தொடங்குவதற்கு வட்டியில்லாக் கடன் ரூ. 1,000 மதிப்புள்ள கருவிகளும், சாதனங்களும் கொடுப்பதற்குத் தேசிய வர்த்தகச் சான்றிதழ் அல்லது எந்த வர்த்தகத்திலாவது தேசிய அப்பரென்டிசிப் சான்றிதழ் பெற்றுள்ள, தமிழ்நாடு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் முன்னுள் பயிற்சியாளர்களிடமிருந்து, மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

கடன் தொகை, கைவேலைக் கருவிகள் மற்றும் சாதனங்கள் வடிவத்தில் தனிப்பட்டவர்களின் தேவைகளுக்கும் தகுந்தாற்போல் அனுமதிக்கப்படும். (Sanctioned) விண்ணப்பப் பாரங்கள், மற்ற விவரங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வேலை வாய்ப்புத்துறை முதல்வர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். முழுமையான விண்ணப்பங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் முதல்வர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். 29–2–1972-லிருந்து, தொழிற்பயிற்சி நிறுவனங்களின் முதல்வர்களால் மனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி.

(த. 47)

## பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 23,700-ல் 2 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையரவர்களால் 13–3–72-ம் தேதி, மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகிறது. தகுந்த முன்வைப்புத் தொகை இல்லாத ஒப்பந்தங்கள் எவ்வித முகாந்திரமுமின்றி நிராகரிக்கப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

க. அ. சுப்பிரமணியம்,
ஆணையர்.

(த. 76)

## இராசிபுரம் நகராட்சி

இராசிபுரம் நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்காக நகல்கள் எடுக்கும் இயந்திரம் (Duplicator) ஒன்று விநியோகம் செய்ய இராசிபுரம் நகராட்சி ஆணையாளராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவராலோ 13–3–72-ஆம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிக்கான நிபந்தனைகள் கீழே கையொப்பமிட்டவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வெ. பாலசுப்ரமணியம்,
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
இராசிபுரம்,
(த. 81)

## கிருஷ்ணகிரி நகராட்சி

இந் நகராட்சியின் பொதுச் சுகாதாரப்பிரிவிற்கு 1972–73ஆம் ஆண்டிற்குத் தேவையான கீழ்க் குறிப்பிட்ட பொருள்களை வழங்க அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் 10–3–72ஆம் தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். இதர ஒப்பந்த நிபந்தனைகள் கட்டுத் தொகை செலுத்துதல் போன்ற இதர விவரங்கள் அடங்கிய அறிவிப்பை நகராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பெற்றுக்கொள்ளலாம். கட்டுத் தொகை செலுத்தாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

தேவையான பொருள்களின் விவரம்.

(1) பினாயில் ; (2) பிளீச்சிங் பவுடர் ; (3) மண்வெட்டி 10" ; (4) கடப்பாறை—5·6" ; (5) கொங்காணி ; (6) வாளி ஜி.ஐ. 10" ; (7) கயிறு வகைகள் ; (8) இரும்பு முறம், வாணலி ; (9) மாதிரி உணவெடுக்கும் பாட்டில்கள் ; (10) டிராக்டர், டிரெயிலர் டயர் டியூப்புக்கள் ; (11) உணவு மாதிரி எடுக்கும் மரப் பெட்டிகள் ; (12) டயர் புதுப்பித்தல் டியூப்பஞ்சர், வல்கனைசிங் ; (13) டிராக்டர், டிரையிலர் குப்பை வண்டிகளுக்குப் பெயிண்ட் அடித்தல் ; (14) கக்கூஸ் கை வண்டிகள், டிரம்கள் சப்ளை செய்தல் ; (15) குப்பை வண்டி, கக்கூஸ் வண்டி டயர் டியூப்களுடன் (Adv. Equipments) ; (16) பருத்திக்கொட்டை, கொள், உப்பு,சூப்பர்மின்டிப், பச்சைப்புல், முதலியன ; (17) குப்பைத்தொட்டிகள் ; (18) நகராட்சியின் டிராக்டர், டிரெயிலர், லாரி ரிப்பேர் செய்தல் (19) பிக்காஸ் ; (20) 14 லிட்டர் கொள்ளளவு உள்ள அமெரிக்கன் ஜனதா ஸ்பிரிங் ஸ்பிரேயர்களுடன் ஸ்பிரேயர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் வழங்குதல்.

துரை. குருநாதன்,
பி.ஏ., பி.டி.,
ஆணையர்.

கிருஷ்ணகிரி,

(த. 82)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–2.



# வண்ணமிகு படைப்புகள்

# கோ-ஆப்டெக்ஸ்

வாண மய உலகம். அதுவே
கோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்.
பட்டுகள். பிரமாதம்.
நெசவோ நெஞ்சையள்ளும்.
குர்தாக்கள், பெல் பாட்டம்
கள், லுங்கிகள், சேலைகள்
உங்கள் உள்ளம் எங்கும்
சிருஷ்டிகள். கோ-ஆப்டெக்ஸ்
படைப்புகள்.

காலப் போக்குக்கு ஏற்ற
வண்ணஜால ஆடைகள் . . .
கோ-ஆப்டெக்ஸ்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், சென்னை-8.



## கோ-ஆப்டெக்ஸ்

**கைத்தறி ஆடைகள்**

சகாயமான விலை . . .
ஆதாயமான உழைப்பு





Criterion CO 2575TM

# இன்னொரு வெற்றி!



கடந்த
ஐந்தாண்டுகளில்
அரசு
எடுத்துக்கொண்ட
முயற்சிகளால்
உணவு உற்பத்தியில்
தமிழ் நாடு
முன்னணியில்
திகழ்கிறது!



இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான்
1970-71-ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேர்
நிலத்தில் சராசரி நெல் விளைச்சல்
**1134** கிலோகிராம்!



இதுபோன்ற
வெற்றிகள்
எல்லாத்
துறைகளிலும்
உருவாக,
உறுதுணையாக
அமைவது
அளவான
குடும்பம்!

## குடும்ப நலத் திட்டம்

வீட்டுக்கும் நல்லது!
நாட்டுக்கும் நல்லது!

